

# சமூகக் கல்வியும் வரலாறும்

## தரம் 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கல்வியும் வரலாறும்

## தரம் 10

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தேசிய கல்வி நிறுவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு 1999

சகல உரிமைகளும் ஸ்ரீ லங்கா அரசினர்க்கே.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால், கொழும்பு யுனைட்டெட்
மேர்ச்சன்ஸ் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

2000/ம/10/171/85,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்.
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம் !

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர் !

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர் !

றிச்சட் பதிரண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூகக் கல்வியும் வரலாறும் தரம் 10 என்னும் இந்நூல் புதிய கல்விச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்த் தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

இது பாடசாலைகளில் பத்தாந் தரத்துப் பிள்ளைகளுக்காக இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்துக் கமைய எழுதப்பட்டுள்ளது.

இந்நூலை வெளியிட உதவிய அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

ஈ. டபிள்யு. அபேநாயக்க
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
"இசுரு பாய"
பத்தரமுல்ல
1999 – 03 – 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

புதிய பாடத்திட்டங்கள், அப்பாடத்திட்டங்களுக்கு அமைவான பாடநூல்கள் ஆகியன தயாரிக்கப்பட்டு பாடசாலைகட்கு அனுப்பப்பட வேண்டியது கல்விச் சீர்திருத்தச் செயன்முறையின் முக்கியமான ஓர் அம்சமாகும். அச் செயன்முறைக்கு அமைவாகவே இப்பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் குறிக்கோள்களையும், அடிப்படைத் தகைமைகளையும் இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இப்பாடநூல், மாணவர் மையக் கற்றல் கற்பித்தற் செயன்முறைக்கு மாணவரை இசைவு படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

மாணவர் விருப்புக்களையும் பிரச்சனைகளையும் இனங்கண்டு, அவர்களைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்திச் சுயமாகக் கற்க வழிநடாத்துவதன் மூலம் வாழ்நாட் கல்விச் செயன்முறையில் ஊக்கம் பெறக்கூடியவாறாக இப் பாடநூலை மாணவர் பயன்படுத்த வகை செய்ய வேண்டியது ஆசிரியரின் முக்கிய பொறுப்பாகும்.

பெற்றோரும், மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கல்விக் கருமங்களில் கவனஞ் செலுத்தி, அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் பெற்றோரும், மூத்தோரும் கல்விச் செயன்முறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துணை புரியலாம்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க
பணிப்பாளர் நாயகம்

தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டல்

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க - பணிப்பாளர் நாயகம்-தேசிய கல்வி நிறுவகம்

### ஆலோசனைக் குழு:

| | |
|---|---|
| கலாநிதி எச். எல். டி. அமரகுணசேகரா | பிரதிப் பணிப்பாளர் நாயகம்<br>கலைத்திட்ட அபிவிருத்தி |
| கலாநிதி தம்மிக்க பிபிலே | உதவிப் பணிப்பாளர் நாயகம்<br>கலைத்திட்ட அபிவிருத்தி |
| கலாநிதி திருமதி. சுவர்ணா விஜயதுங்க | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| திருமதி. ரஞ்ஜினி ஜயவர்தன | முன்னாள் பணிப்பாளர்<br>சமூக விஞ்ஞான திணைக்களம் |
| திரு சரத் சந்திர ஜயவர்தன | பிரதான செயற்றிட்ட அதிகாரி |

### பாடக் குழு:

| | |
|---|---|
| திரு. சரத் சந்திர ஜயவர்தன | பிரதான செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. எஸ். ஏ. சி. திஸாநாயக்க | செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. டபிள்யூ. ஏ. சுமதிபால | செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. கே. ரீ. கனகரத்தினம் | செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திருமதி. ரஞ்ஜினி தனவர்தன | உதவிச் செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |

### பதிப்பாசிரியர்கள்:

| | |
|---|---|
| திருமதி. ரஞ்ஜினி சேனாநாயக்க | பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் |
| திரு. எம். ஜயசேகரா | பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர் |
| திரு. சரத்சந்திர ஜயவர்தன | பிரதான செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| தி. எஸ்.ஏ.சி. திசாநாயக்கா | செயற்திட்ட அதிகாரி<br>சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| திரு. கே. ரீ. கனகரத்தினம் | திட்ட அதிகாரி - சமூக விஞ்ஞான திணைக்களம்<br>தேசிய கல்வி நிறுவகம் |
| ஜனாப். சற். ஏ. சன்ஹீர் | ஆசிரிய ஆலோசகர் - புத்தளம் கல்வி வலயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் குழு

| | |
|---|---|
| திரு. ஜீ.டீ. விமலரத்ன | ஹொரண - இளைப்பாறிய ஆசிரியஆலோசகர் |
| திருமதி பீ.எஸ்.டப்ளிவ்.சீ. பத்மினித சில்வா | கண்டி, தும்பர - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. எச்.எம்.எச். தயானந்த | மாவத்தகம - ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி. எஸ். ஈ. ஜெயவீர | தங்கல்ல - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. ஏ. எவ். சந்திரசோமா | மாத்தறை - ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி கே.ஏ. ஜொமவதி | அக்குரஸ்ஸ - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. எச். ஜீ. செனாரத்னா | வெலிகம - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. எவ். எம். சிறிவர்தன | குருணாகல் - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. எச். ஜீ. அபெயசேகரா | கம்பஹா - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. பி.கே. சோமரத்னா | ஹட்டன் - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. ஏ. எச். திலகரத்னா | கொழும்பு - ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி. ரீனி விஜெயகுணவர்தனா | களனி - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. ரீ.கே.எவ்.எம். கீர்த்திசிங்க | வெலிமடை - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. டி.எவ்.எம். குணவர்த்தனா | கெக்கிராவ - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. ஏ. எம். சிறிபால | மாத்தறை - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. கே.ஏ.பி. பெரேரா | வென்னப்புவ - ஆசிரிய ஆலோசகர் |
| திரு. ஜீ. எச். ஜெயசிங்க | ஹொரண - ஆசிரிய ஆலோசகர் |
| திருமதி. எல்.என்.டபள்யூ. அமரக்கோன் | களுத்துறை - ஆசிரிய ஆலோசகர் |

**சித்திரங்களும் தேசப் படங்களும்**

| | |
|---|---|
| திரு. சிரிபால விக்கிரமாராச்சி | : இ/இரத்னாலோக மகா வித்தியாலயம் ரக்குவான<br>சித்திரக்கலை - ஆசிரிய ஆலோசகர் |

**தமிழாக்கம்**

| | |
|---|---|
| ஜனாபா. பாத்திமா ராசியா யாக்கூப் | : இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் |
| ஜனாப் எம். சன்ஹீர் | : புத்தளம் - ஆசிரியா ஆலோசகர் |
| ஹாஜியார் ஐ. எல். ஏ. அபூர் | : நிக்கவரட்டிய - ஆசிரிய ஆலோசகர் |

**தேசப் படங்கள்**

| | |
|---|---|
| எச்.ஏ.எஸ். சந்திரசேகர | : ஓய்வு பெற்ற வரைப்படக் கலைஞர் |
| ஏ.வீ. சோமதாஸ | : படவரைக் கலைஞர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கல்வியும் வரலாறும் தரம் 10

பாட உள்ளடக்கம்

**அத்தியாயங்கள்**


| | பக்கம் |
|---|---|
| 1. இலங்கையின் பண்டைய தொழில் நுட்பம் | 01 |
| 2. இலங்கையின் புராதன வெளிநாட்டுத் தொடர்பு | 27 |
| 3. கண்டி இராச்சியம் | 46 |
| 4. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி | 77 |
| 5. அபிவிருத்தி | 112 |
| 6. தேசப்படங்கள் | 148 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் அத்தியாயம்

# இலங்கையின் பண்டைய தொழில் நுட்பம்

இந்த அத்தியாயத்தைக் கற்பதன் மூலம் புராதன இலங்கை மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை இலகுவாகப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் பின்பற்றிய நுட்ப முறைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டில் ஆரியர் இந்நாட்டில் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதற்கு முன்னதாகவே இங்கு இலகு உபகரணங்களையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. விஜய இளவரசன் உட்பட ஆரிய கூட்டத்தினர் இங்கு வருகை தந்த போது "குவேனி" நூல் நூற்றுக் கொண்டிருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




உரு. 1.1 குவேனி நூல் நூற்பது

உரு. 1.1 குவேனி நூல் நூற்பதைக் காட்டுகின்றது. இதற்கு முன்பு வாழ்ந்த மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளுக்காக கல்லாயுதங்கள், இலகு கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதனை பதியகம்பளை, பெல்லன்பதிபலஸ்ஸ ஆகிய இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 1.2 கல்லாயுதங்கள்

இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட புராதன அகழ்வாய்வுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். அவ்வாறான கல்லாயுதங்களை உரு. 1.2 இல் காணலாம்.

மேலும் மக்கள் தமது உணவுத் தேவைக்காக சூழலிலிருந்து பெறப்பட்ட கிழங்குகள், தானியங்கள், பழங்கள் என்பவற்றைப் பாவித்தார்கள் என அநுமானிக்க முடியும். அன்றியும் கினிகத்தேனைக்கு அண்மையில் வெலிலேனகியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளினால் ஏதோ ஒரு வகை தானியத்தை பயன்படுத்தினார்கள் என உறுதிப்படுத்த முடிகிறது. அன்றாடத் தேவைகளுக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்காக வில்லு, குளம் போன்றனவற்றைப் பயன்படுத்தியதாக அறிய முடிகிறது. அவர்கள் படிப்படியாக விவசாயம் செய்வதற்குப் பழகிக் கொண்டனர். இதிலிருந்து ஆரியரின் வருகைக்கு முன்னரே நீரைச் சேமித்து விவசாயம் செய்தனர் என்பதனை அறியலாம். அன்றைய மக்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக எளிய கருவிகளைப் பயன்படுத்த அறிந்திருந்தனர் என ஊகிக்க இடமுண்டு. புராதன சுதேச மக்களிடம் காணப்பட்ட தொழில்நுட்ப அறிவினை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜம்பு கோளப் பட்டினம்

கதம்ப நதி

உபதிஸ்ஸ காம

கோகன்ன

தம்மன்னாவ

உருவெல

அநுராதபுரம்

வேதிய கிரி

கலா ஓயா

மகாவாலுகா நதி

தீக வாபி

கல்யாணி

கல்யாணி நதி

கிரிந்தி ஓயா

மாணிக்க கங்கை

குமுக்கன் ஓயா

மகா காம

வளவை கங்கை

சித்தல பவ்வத




உரு. 1.3 இலங்கையில் ஆரியர் குடியேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வந்திறங்கிய ஆரியர் நதிகளுக்கூடாக நாட்டுக்குள் பிரவேசித்ததன் பின்னர் வெவ்வேறு திசைகளிலும் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். நதிக்கரை யோரங்களில் வாழ்ந்த அவர்கள் மழை நீரையும் குளத்து நீரையும் பயன்படுத்தி நெல் உற்பத்தியை மேற்கொண்டனர். உரு 1.3 ஆரியரின் குடியேற்றப் பரம்பலைக் காட்டுகின்றது.

## உரு 1.3 இலங்கையின் ஆரியக் குடிப்பரம்பல்

அவ்வாறு பரம்பிய ஆரிய குடியேற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| விஜயன் உட்பட ஆரிய குழுவினர் | : | தம்மன்னாவ<br>விஜிதகாம<br>அநுராத காம<br>உருவெல காம<br>உபதிஸ்ஸகாம |
| பத்தகச்சானாவின் சகோதரக் குழுவினர் | : | ரோஹன<br>தீகவாபி<br>கோகண்ண |

வரலாற்று மூலங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி ஆரியர் இரும்பை பயன்படுத்தும் அறிவைப் பெற்றிருந்தனர் என்பதற்கு "அயோ" "அயஸ்" ஆகிய சொற்கள் சான்றாக உள்ளன்.

இரும்புக்கலப்பையை உற்பத்தி செய்து விவசாயத்தில் பாவித்தமையும் கத்தி, மண்வெட்டி போன்ற இரும்பாலான உபகரணங்களைப் பயன்படுத்தியமையும் இதற்கு உதாரணங்களாகும். காலப்போக்கில் தாம் ஏற்படுத்திய குடியிருப்புக்களில் விவசாயத்தில் ஈடுபடும் போது எதிர்நோக்கிய சில பிரச்சினைகள் வருமாறு.

* குறித்த ஒரு காலத்திற்கு மட்டும் ஆற்றுநீர் போதியதாக இருந்தமை
* குறித்த ஒரு காலப்பகுதியில் மட்டுமே மழைநீர் கிடைத்தமை
* அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டி ஏற்பட்டமை.
* நிச்சயமற்ற மழை வீழ்ச்சி

இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தமது திறன்களைப் பிரயோகித்தனர் என்பதனை அவர்களின் நீர்ப்பாசன நடவடிக்கைகள் மூலம் நாம் அறிய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளமும் நீர்ப்பாசனமும்


ஆரியர் தமது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்குத் தரைத்தோற்ற அமைப்பினைப் பயன் படுத்திக் கொண்டனர். அவர்கள் எவ்வாறு அதனை பயன்படுத்தினர் என்பதனை அறிவதற்கு பின்வரும் தகவல்களை வாசிக்க.

* உள்ளகச் சமவெளியில் காணப்படும் எச்சக் குன்றுகளுடாகப் பாய்கின்ற ஆறுகளை குன்றுகளின் ஒடுங்கிய பகுதிகளின் இரு சுவடுகளையும் இணைப்பதன் மூலம் குளக் கட்டை அமைத்து ஆற்றோட்டத்தைத் தடைசெய்து குளமொன்றை உருவாக்குதல்.
* இக்குளத்து நீர் சமவெளிகளுக்கூடாகப் பாய்ந்து செல்ல கால்வாய்களை அமைத்தல்.
* குளத்து மட்டத்துக்குக் கீழே சமவெளிகளில் அமைந்துள்ள வயல் வெளிகளுக்குக் கால்வாய் மூலம் நீரை வழங்குதல்.

உதாரணம் : மல்வத்து ஓயாவைப் பயன்படுத்தி அபயவாவியும். திஸாவாவியும் கலா ஓயாவைப் பயன்படுத்தி கலா வாவியும் ஹுருளு ஓயாவைப் பயன்டுத்தி ஹுருளு வாவியும் அமைக்கப்பட்டுள்ளன. எலகர. யோத அல என்பன நீர்ப்பாசனக் கால்வாய் களாகும்.

* ஆற்று நீரின் வேகம் குறைந்த இடங்களில் அணைகளை அமைத்து நீரைத் தேக்கிக் கால்வாய்களுக்கூடாக சமவெளிப்பிரதேச வயல்வெளிகளுக்கு நீர் வழங்கல். இதனை "அமுன" (சிறு அணைக்கட்டு) என அழைப்பர்.

உதாரணம் : மல்வத்து ஓயாவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள கல்கடவல அணை. தெதுறு ஓயாவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள ரிதிபெந்தி அணை




உரு. 1.4 குளத்தின் பிரதான பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மகாவலி கங்கைக்கு குறுக்காக அமைக்கப்பட்ட மினிப்பே அணை

முன்னோர்களிடம் காணப்பட்ட நீர்ப்பாசனம் தொடர்பான அறிவினைக் குளமொன்றின் அமைப்பினைக் கற்பதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். குளமொன்றின் பிரதான பிரிவுகள் உரு. 1.4 மூலம் காட்டப்படுகின்றது.

இங்கு காணப்படும் அமைப்பினைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்.

| குளக்கட்டு | அலைதாங்கி | சுருங்கை | கலிங்கல் (மடைக்கதவு) | கலிங்கல் தொட்டி |
|---|---|---|---|---|
| இரண்டு மலைச் சுவடுகளை இணைத்து நதியின் குறுக்காக கட்டப்படும் சக்தி வாய்ந்த அணை | குளக்கட்டின் நீர் அரிப்பைத் தடை செய்வதற்காக கட்டின் உட்புறத் தில் கற்களைப் பரப்பி உருவாக் கப்படும் பலம் வாய்ந்த தடை | மேலதிக நீரை வெளியேற்றி குளக்கட்டைப் பாதுகாப்பதற்காக கட்டின் உயரத்தை விடக் குறைந்த மட் டத்தில் அமைக்கப்படுவது. | உயர் கலிங்கல் நீர் விநியோகத் திற்காக குளக் கட்டின் உயர் மட்டத்தில் அமைக்கப் பட்டுள்ள துவாரம் **ஈரக்கலிங்கல்** நீரின் அளவ குறையும்போது நீரை விநியோகம் செய்வதற்காக வும் சேற்றை வெளியேற்று வதற்காகவும் குளக்கட்டுக் குக் கீழே அமைக்கப் பட்டுள்ள துவாரம். | பண்டைய தொழில் நுட்பத்தில் பிர மிக்கத்தக்க ஒரு நிர்மாணமாகக் கொள்ளக் கூடிய இது நீர் விநியோகம் பராமரிப்பு என்பவற்றுடன் குளக்கட்டின் பாதுகாப்புக் காகவும் உருவாக்கப் பட்டதாகும். |

மேற்குறிப்பிட்ட அமைப்புக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட ஒரு குளத்தினை சிறந்த தொரு நிர்மாணமாகக் கொள்ளலாம். பண்டைய நீர்ப்பாசனத் துறையில் காணப்பட்ட தொழில் நுட்பம் இதில் பிரதிபலிக்கின்றது. காஷ்மீரில் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக இலங்கையில் இருந்து தொழில்நுட்பவியலாளர்கள் கொண்டு செல்லப்பட்டதாக அந்நாட்டின் வரலாற்றைக் கூறும் வம்சக் கதையான "இராஜதரங்கனி" யில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நாகம் நீரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்துத் தருவதாகவும் பண்டைய வரலாற்றுக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. இந் நம்பிக்கையின் அடிப்படையில் குளங்களுக்கு அருகே உள்ள காவற்கற்களில் நாக சின்னம் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

எல்லாக் கிராமங்களிலும் சிறிய குளங்களை அமைப்பதற்கு "கமிக" அல்லது "பருமக" என்று அழைக்கப்படும் கிராமத் தலைவனுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. மக்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வதற்கு நீரை வழங்குதல் அரசனின் பிரதான கடமைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. நீர்ப்பாசனம் தொடர்பான சிறந்த அறிவுடைய கலைஞர்களை நியமித்து அதனை தொடர்ச்சியான கற்பித்தல் முறை மூலம் பரம்பரை பரம்பரையாக அவ்வறிவைப் பயன்படுத்துவதற்கு வழிகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசன முறைகளை மேற்கொள்வதற்கான அலுவலர்களை சிங்கள அரசர்கள் நியமித்ததற்கான சான்றுகளும் உள.



**உரு 1.5 கால வாவி**

உதாரணமாக: தம்புள்ளை குகைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "அனாண்னிக நிஷ" என்பவரும் கேகாலை குகைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "அடி தர உதர" என்பவரும் நீர்ப்பாசன அலுவலர்கள் ஆவர் என்பது தொல்பொருள் ஆய்வு ஆணையாளராக கடமையாற்றிய செனரத் பரனவிதாரன அவர்களின் அபிப்பிராயமாகும். 2ம் சேன மன்னன் காலத்தில் "வே வெஜரும்" என்பவர் நீர்ப்பாசன அலுவலராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| அளவு | காலம் | அரசன் | குளமும் கால்வாயும் |
|---|---|---|---|
| சிறிய குளம் | கி.மு. தொடக்கம் கி.பி. 1ஆம் நூற்றாண்டு வரை | பண்டுகாபய மன்னன் (கி.மு. 387-387)<br>தேவநம்பியதிஸ்ஸ மன்னன் (கி.பி. 247-247)<br>சத்தாதிஸ்ஸ மன்னன் (கி.பி. 137-119) | அபயவாவி ( பசவக் குளம்) ஜயவாவி. காமினிவாவி<br>திஸாவாவி<br>18 குளங்கள் |
| நடுத்தர அளவிலான குளங்கள் | கி.பி. 1 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 3ஆம் நூற்றாண்டு வரை | வசப மன்னன் கி.மு. 111.67)<br>இளநாக மன்னன் (கி.பி.) 33-43. | மகாவிலச்சிய. மானாகடிய. நொச்சிப் பொத்தான, ஹிரிவடுன்ன உட்பட 11 குளங்களும். எலஹெர உட்பட 12 கால்வாய்களும்.<br>திஸ்ஸ வாவி-தூரதிஸா வாவி |
| பெரிய குளங்கள் — | கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் | மகாசேன மன்னன் (கி.பி. 274-301) | மின்னேரி கவுடுளு. ஹுருளு. மாகல்ல. மககனதறா உட்பட16 குளங்களும் பப்பதன்ன கால்வாய் |
| | | 1ஆம் உபதிஸ்ஸ மன்னன் (கி.பி. 365-406) | தோபா வாவியும். 6 குளங்களும் |
| | | தாதுசேன மன்னன் (கி.பி. 455-473) | கலாபளுு. மாததுகம உட்பட18 குளங்களும் யோத கால்வாயும் |
| | | 2ஆம் முகல மன்னன் (கி.பி. 531-551) | நாச்சதுவ குளம் (பத்பகன் குளம்) பதவிய வாவி. |
| | | 1ஆம் அக்போ மன்னன் (கி.பி. 571-604) | மாமடுவ வாவி. குருந்து வாவி. சிறிவட்ட மானக வாவி என்பனவும் மினிப்பே அணையும். |
| | | 2ஆம் அக்போ மன்னன் (கி.பி. 604-614) | கிரிதலே வாவி. கந்தளாய் குளம். உட்பட ஹத்கொட அணையும் |
| | | | சோழர் காலத்தில் சிதைவடைந்த குளங்களை புனரமைப்புச் செய்தல் |
| | கி.பி. 1017 தொடக்கம் கி.பி. 1070 வரை | 1ஆம் விஜயபாகு மன்னன் (கி.பி. 1070-1110) | பராக்கிரம சமுத்திரம் தெதுரு ஓயா அபிவிருத்தி. பண்டுவஸ்நுவர |
| | | 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1153-1186) | பண்டாவாவி. களுத்துறை மாவட்டத்தில் சதுப்பு நிலத்தை நிரப்பி அபிவிருத்தி செய்தல். அங்கமெடில்ல அணை. |
| | | நிஸங்கமல்ல மன்னன் (கி.பி. 1187-1196) | சிதைவடைந்த குளங்களைப் புனரமைப்புச் செய்தல். |

தாதுசேன மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கலாவாவி உரு 1.5 இல் காடடப்பட்டுள்ளது. தாதுசேன மன்னனைப் போன்றே அக்காலத்தில் இருந்த எல்லா மன்னர்களும் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை மக்களுக்கு விநியோகிப்பதைத் தமது கடமையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். குளத்தை நிர்மாணித்து வயல்களுக்கு நீர் வழங்குவதற்கு வழிவகுத்துக் கொடுப்பது அனைத்து அரசர்களினதும் கடமையாக இருந்தது. குளங்களின் வரலாற்றை நோக்கும் போது ஆரம்பத்தில் சிறிய குளங்களும் பின்னர் படிப்படியாக நடுத்தர, பெரிய குளங்களும் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. மன்னர்கள் நீர்ப்பாசன முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளை பின்வரும் அட்டவணை மூலம் நீர் விளங்கிக் கொள்ளலாம்.




உரு 1.6 கால வாவியிலிருந்து ஜெய கங்கைக்கு நீர் வழங்கும் கலிங்கல்

வசப மன்னன் காலத்தில் சுரங்க வழி நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது. அநுராதபுரத்திலுள்ள "ரன்மசு"பூங்காவின் தடாகங்களுக்கு திஸா வாவியில் இருந்து சுரங்கக் கால்வாய்கள் மூலம் நீர் பெறப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பண்டைய அரசர்களிடத்தும் கலைஞர்களிடத்தும் காணப்பட்ட தொழில்நுட்பத்திறன் இதற்கொரு சிறந்த உதாரணமாகும். தரைத்தோற்ற சரிவினைப் பயன்படுத்தி தாதுசேன மன்னன் கலாவாவியில் இருந்து திஸாவாவிக்கு நீரைக் கொண்டு சென்ற ஜயகங்கை அல்லது யோத கால்வாய

ஒரு கிலோ மீற்றருக்கு 95 மில்லி மீட்டர் வரை முறை படிப்படியாக யோத கால்வாயின் சரிவு அமைக்கப்பட்டு நிலம் கழுவிச் செல்வது கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறான கால்வாய் மூலம் பரந்த வயல் பரப்புகளுக்கு நீர் வழங்குதல் இலகுவானதாகும். இக்கால்வாய் மூலம் நுவர கலாவிய எனும் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறு குளங்களுக்கும் நீர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் திஸாவாவிக்கும், பசவ குளத்துக்கும் நீரை வழங்கி அதற்கு வடக்கில் அமைந்துள்ள மல்வத்து ஓயாவின் இடதுகரை பிரதேசங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஜயகங்கை கால்வாய் மூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 1.7 புராதன கலிங்கற் தொட்டி - மாதுறு ஓயாப் பிரதேசம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பெற்று அப்பிரதேசம் முன்னேறியமைக்கு தந்திரி மலையிலுள்ள சிதைவுகள் ஆதாரமாக அமைந்துள்ளன. நவீன பொருளியலாளர்கள் கூட அத்தகைய ஒரு உருவாக்கத்தை வியந்து யோத கால்வாய் "புதுமையான கால்வாய்" என்று பாராட்டுகின்றனர்.

நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி இன்றைய பொருளியலாளர்கள் மாதுறு ஓய குள அணைக்கட்டின் கலிங்கற்றொட்டி அமைப்பதற்கான அகழ்வுகளை மேற்கொண்ட பொழுது அவ்விடத்தில் பழைய கலிங்கற்றொட்டி ஒன்றின் சிதைவுகளைக் கண்டுபிடித்தனர்.

அக்காலத்தில் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உயர் தொழில்நுட்பம் இதில் வெளிப்படுகின்றது. ராஜரட்டை முழுவதும் பரவியிருந்த குளங்களையும், கால் வாய்களையும் கருத்திற்கொள்ளும் பொழுது அநுராதபுர, பொலநறுவை இராசதானி மக்கள் வளர்ச்சியடைந்த நாடொன்றுக்குரியவர்கள் என்பது புலனாகின்றது.




உரு 1.8 இராசரட்டையில் காணப்படும் குளங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களை நிர்மாணித்த அவ்வரசர்கள் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர் என்பது மகாசேன மன்னன் "மின்னேரி தெய்வம்" என புகழப்பட்டதிலிருந்து தெளிவாகின்றது.

## கட்டிட நிர்மாணக் கலை

புராதன கட்டிடக் கலை தொடர்பான உயர் தொழில்நுட்பங்கள் பல அநுராதபுர. பொலநறுவை இராசதானிகளின் சிதைவுகளை ஆய்வு செய்யும் போது கிடைக்கின்றது. அக்காலத்தில் வாழ்ந்த வெவ்வேறு தொழில்நுட்பக் கலைஞர்களால் சிறந்த கட்டிட அமைப்புக்கள் உருவாக்கப்பட்டமைக்கான சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் குறிப்பிட்டு சொல்லக்கூடிய உருவாக்கங்கள் பலவற்றை உதாரணத்திற்காக இங்கு கற்போம்.



உரு 1.9 குட்டம் பொய்கை (பொகுன)

அநுராதபுரத்தில் அமைந்துள்ள சிறந்த நிர்மாணம் எனக் கருதப்படும் குட்டம்பொகுன உரு 1.9 இல் காட்டப்பட்டுள்ளது. செப்பனிடப்பட்ட கல்லைப் பாவித்து சோடியாக அமைக்கப்பட்ட இக்குளம் முதலாம் அக்போ மன்னன் காலத்துக்கு உரியதாகக் கருதப்படுகின்றது. இது "கஷார முல" என்ற புராதன பிரிவெனாக்களில் வாழ்ந்த பிக்குகளின் நீர்த் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட குளம் என்பது வரலாற்றுக் கருத்தாகும்.

அநுராதபுர காலத்தில் கட்டிட நிர்மாணக் கலையில் பின்வருமாறு பிரிவுகள் காணப்பட்டன.

* தாதுகோபம், போதிமனை, சிலைமனை

* விகாரமனை, போயமனை, ஆராமைகள், தியான மண்டபம், தான சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இராச மாளிகை அரண்
* நீராடற் பொய்கை, மலசலகூடம், வைத்தியசாலை
* சிவன் கோயில்

### தாது கோபம் (தூபி)

அநுராதபுரக் காலத்தில் சிறந்த கட்டிட படைப்பாக தாதுகோபம் என்ற தூபி கருதப்படுகின்றது. பௌத்த சமயத்தின் செல்வாக்கின் பின் இந் நாட்டின் கட்டிட நிர்மாணக் கலையில் விசேட மாற்றங்கள் பல இடம்பெற்றன. அதில் பிரதான இடத்தை தாது கோபம் பெற்றுக் கொள்கிறது. தாதுகோபமானது தாது, சைத்தியம், தூபி, ரூபய, விகாரை என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

புத்தர் வாழ்ந்த காலத்திலேயே இலங்கையில் சைத்தியங்கள் நிர்மாணிக்கப்பட்ட இரு சந்தர்ப்பங்கள் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சுமனசமன் கடவுளுக்கு கொடுக்கப்பட்ட புனிதகேசம் பதித்து வைத்து உருவாக்கப்பட்ட மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள மஹியங்கனை சைத்தியமாகும். மற்றையது தபசு, கல்லுக என்ற இரு சகோதர வியாபாரிகளுக்கு கிடைத்த புனித கேசம் பதித்து வைத்து உருவாக்கப்பட்ட திரியாய என்ற இடத்தில் அமைந்த தாகபையாகும். அப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்த கல்வெட்டில் இச் செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதலாவது தூபியாகக் கருதப்படுவது "தூபாராம" ஆகும். தேவநம்பியதீச மன்னனால் அமைக்கப்பட்ட இத்தாது கோபத்தில் புத்தரின் புனித வலது காறை எலும்பு பதித்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. பின்னர் பல சந்தர்ப்பங்களில் அது புனரமைப்புச் செய்யப் பட்டமையினால் அதன் ஆரம்ப வடிவத்தை இன்று காண முடியாதுள்ளது. துட்டகைமுனு மன்னன் காலம் முதல் பெரிய தாது கோபங்கள் உருவாக்கப்பட்டன என ஏற்றுக் கொள் ளப்பட்டுள்ளது. துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்டமகாதூபி என அழைக்கப்படும் ருவான்வெலி சாயாவும் மிரிச வெட்டி தாது கோபமும் வலகம்பாகு மன்னனால் அமைக்கப்பட்ட அபயகிரி தூபியும் மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட ஜேத்தவன தூபியும் இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். அனுராதபுரத்துக்கு வெளியேயும் பெரிய தூபிகள் அமைக்கப்பட்டன. களனி, திஸ்ஸமகாராம, தீகவாபி, சேருவில சோமாவதிய மகியங்கனை போன்ற இலங்கையில் அமைந்துள்ள தூபிகள் இதற்கு உதாரணங்களாகும்.

தாதுகோபம் ஒன்றில் பல்வேறு இயல்புகளைக் காணலாம். பௌத்த நூல்களில் ஆறு வடிவங்களிலான தூபிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன

நெற்குவியல் வடிவம்

கோயில் மணி வடிவம்

நீர்க்குமிழ் வடிவம்


பானை வடிவம்

தாமரை வடிவம்

நெல்லிக்கனி வடிவம்

இன்று இலங்கையில் நெற்குவியல் வடிவம், கோயில் மணிவடிவம், நீர்க்குமிழி வடிவம் ஆகியனவற்றையே காணலாம். நெற்குவியல் வடிவத்திற்கு உதாரணமாக களனி விகாரயைக் கூறலாம். அவ்வாறே மிகிந்தலை அம்பஸ்தல சைத்தியம் கோயில் மணி வடிவத்திற்கும் பொலநறுவை ரண்கொத் விகாரை நீர்க்குமிழி வடிவத்திற்கும் உதாரணங்களாகும். ஆரம்ப காலங்களில் இலங்கையில் உருவாக்கப்பட்ட சைத்தியங்கள் இந்தியாவின் மிகப் பெரிய சைத்தியமான சாஞ்சி தூபியை விட பெரியதாக இருந்தபோதிலும் இந்திய தூபிகளை விட சிறிய அளவிலேயே வித்தியாச முடையனவாக இருந்தன.

## தூபியொன்றின் பகுதிகள் 14




உரு 1.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபியொன்றின் பகுதிகள் உரு 1.10 இல் காட்டப்பட்டுள்ளது. இங்கு இல 01 இனால் காட்டப்பட்டுள்ளது முத்தட்டு வளையங்கள் ஆகும். இவ்வளையங்கள் மூன்று காணப்படும். ஒன்றன் மேல் ஒன்றாக அளவில் குறைந்து செல்லும் இம்மூன்று வளையங்களின் மீது கர்ப்பக் கிருகம் அமைக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். உரு 1.10 இல் இல 02 இல் காட்டப்படுவது **"கோலாகாரகர்ப்பம்"** ஆகும். புத்தரின் புனிதச் சின்னங்கள் தாதுகர்ப்பத்தில் பதிக்கப்பட்டுள்ளன.

கர்ப்பத்தின் முகட்டில் சற்சதுர அடைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது இல 03 இல் காட்டப்படுகின்றது. அதன் மத்தியிலும் புனித சின்னங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இல 04 இல் காட்டப்பட்டுள்ள வட்ட வடிவமான பகுதி கலசபீடம் (தேவர் மேடை) ஆகும். அதற்கு அடுத்ததாக கோபுரக் கலசத்தின் நுனியில் மாணிக்கத்தினால் அல்லது உலோகத்தினால் செய்யப்பட்ட கலசம் அமைந்திருக்கும்.

### வாயில் மண்டபம் (வாகல் கட)

தூபியுடன் இணைந்த வகையில் நான்கு திசைகளிலும் நான்கு வாயில் மண்டபங்கள் அமைந்திருக்கும். காலப்போக்கில் அது நுண் இழைய செதுக்கல் வேலைப்பாடுகளினால் அலங்கரிக்கப்பட்டது. தூபிக்கு மலர் ஆராதனை செய்வதற்கான கல் ஆசனங்களையும் இதில் காணலாம்

### தூபி மனைகள் (சைத்தியகர)

தூபிகளின் பாதுகாப்புக்காக நிர்மாணிக்கப்பட்ட மனைகள் தூபிகள் ஆகும். ஆரம்ப காலங் களில் நிர்மாணிக்கப்பட்ட சிறிய தூபிகளுக்கும் இவை அமைக்கப்பட்டன. தூபாராம, அம்பஸ் தவல போன்ற தூபிகளைச் சுற்றிக் காணப்படும் கற்றூண்கள் அவற்றின் எச்சங்களாகக் காணப் படும் சிதைவுகளே. கூரைகள் பலவகைகளால் ஆக்கப்பட்டிருந்ததாக நம்பப்படுகின்றது.

### வட்ட தாது மனைகள் (வட்டதாகே)

தூபி மனைகள் வளர்ச்சியடைந்து வட்டதாது மனைகளாக உருவாக்கப்பட்டன. இவை நில்த்திலும் பார்க்க சற்று உயரமான மேடையில் அமைக்கப்படும் வட்ட வடிவமான மனைகளாகும். கவன்கடுவ பிரதேசத்திலுள்ள மெதிரிகிரிய வட்டதாது மனை இதற்கு சிறந்த உதாரணமாகும்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளை உள்ளடக்கிய தூபியொன்றை நிர்மாணிப்பதில் பயன்படுத் தப்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றி நோக்குவது பயனுடையதாகும். தூபியின் அளவுக்கேற்ப அதன் அத்திவாரத்தை நிர்மாணிக்கும் போது அன்று பிரயோகித்த உயர் விஞ்ஞான கேத்திர கணித அறிவை இங்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாயுள்ளது. தூபியின் அடித்தளம் மிகப் பலம்மிக்க தாய் இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜேதவன அகழ்வாய்வுகளின் போது தெரிய வந்துள்ளது. தூபியின் வடிவினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்கள் காட்டிய திறமையும் அக்கால உயர் தொழில்நுட்பத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஜேதவனாராமய நிர்மாணத்தின் போது பாவிக்கப்பட்ட பொருட்களை அந்தளவு உயரத்திற்கு எவ்வாறு எடுத்துச் சென்றார்கள் என்பதும் வியக்கத்தக்கதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌதம புத்தரின் சிலைகள்

கருங்கல்லினால் புத்தர் சிலை வடிக்கும் பணி கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் ஆரம்பமாகியது. அச்சிலைகள் புத்த பெருமானின் ஞானம், கருணை போன்ற குணாம்சங்களை பிரதிபலிக்கின்றன. இதிலிருந்து உயர்தொழில்நுட்ப அறிவு, கலைத்திறன்கள், கலைப் படைப்புக்கள் என்பவற்றை விளங்கிக் கொள்ளலாம். அவுக்கன, சாஸ்ஸேருவ, புதுறுவகல, மாலிகாவில போன்ற இடங்களில் உள்ள பிரமாண்டமான நிற்கும் நிலை சிலைகள், அனுராதபுரத்தில் உள்ள சமாதி சிலை, தொழுவில சிலை, தந்திரிமலையிலுள்ள அமர்ந்தநிலை சிலை, பொலநறுவை கல்விகாரையிலுள்ள சயனநிலை சிலைகள் போன்றன இதற்கு உதாரணங்களாகும்.

உரு. 1.11 1.12 என்பவற்றில் இலங்கைச் சிற்பிகளின் திறமைகளைக் காணலாம்




அவுக்கன சிலை - நிற்கும் சிலை

உரு. 1.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 1.12 கல்விகாரை சயன சிலை

## சிற்பக்கலை

சிற்பக்கலை பற்றி ஆராயும் போது சிற்பிகளின் திறமைகளை மறக்க முடியாது. அவர்களில் செதுக்குவோரும் வார்ப்போரும் இருந்தனர். மிகிந்தலை கண்டக சைத்தியத்தின் வாயில் மண்டபத்தில் (வாகலகட) காணப்படும் மிருக உருவங்கள், கற்பகதருக்கள், பூரணகும்பம், சந்திர வட்டக்கல், (1.13 உருவிலும்) வாயிற் செதுக்கல்கள், (1.14 உருவிலும்) கொரவக்கல, (1.15 உருவிலும்) இசுருமுனிய காதலர், குதிரைமுக மனிதன் (1.16 உருவிலும்) போன்றவை எமது நாட்டின் செதுக்கல், வார்ப்புக் கலையின் சிறப்புக்களைப் பிரதிபலிக்கின்றன. அரசமாளிகை, கோட்டை என்பனவற்றை நிர்மாணிப்பதில் உயர்ந்த தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக சீகிரிய யப்பகூவ, கோட்டைகளைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 1.13 சந்திர வட்டக்கல்




உரு. 1.14 வாயிற் செதுக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 1.15 கொரவக்கல்



1.16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீகிரிய கோட்டை

ஆசியாவிலுள்ள முக்கிய புராதன இடங்களில் ஒன்று எனக் கருதப்படும். "சீகிரிய" சிறந்த தொழில் நுட்பப் படைப்பாக இருப்பதற்குக் காரணம். அங்கு ஆட்சி செய்த காசியப்ப மன்னனின் கலையார்வமும் கலை நுட்ப அறிவுமேயாகும் எனலாம்.

இராச சபை மண்டபம், நீர்ப்பூங்கா, கற்பூங்கா, மாடிப்பூங்கா, நீர் அகழிக்கோட்டை என்பன வற்றை உள்ளடக்கியதாக சீகிரிய அரச மாளிகை காணப்பட்டது. இன்று அவற்றின் சிதைவுகளே காணப்படுகின்றன. சீகிரிய சுவர் ஓவியங்கள் காசியப்ப மன்னனின் கலையார்வத்தையும், கலைத் திறமையையும் எடுத்துக் காட்டுகின்றன. உலகப் புகழ்பெற்ற இச்சுவரோவியங்களை வரை வதற்குப் பயன்படுத்தப்பட்ட வர்ணக் கலவைகளின் சிறந்த தரம் காரணமாக அவை இன்றுவரை பாதுகாப்பாக இருக்கின்றன. கலைநுட்பத்துறையில் சீகிரிய பிரசித்தி பெற்றிருப்பதற்குக் காரணம் அங்குள்ள சுவரோவியங்கள், மெருகூட்டப்பட்ட சுவர், சிங்க உருவ நுழைவாயில் என்பனவாகும்.

சீகிரிய கோட்டையைச் சூழவுள்ள நீர் அகழி நீர் ஊற்றுகளுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளமை அக்கால நீர்ப்பாசனத்திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சித்திரக் கலைபற்றி நோக்கும் போது வளர்ச்சியடைந்த சித்திரக் கலைஞர்கள் இருந்தமைக்கு இன்றுள்ள சிதைவுகள் சான்றுகளாகும். அனுராதபுர வாயில் மண்டபத்திலும், சிதுல்பவ்வ, கரம்பகல குகைகள் என்பனவற்றிலும் புராதன சித்திரங்களின் சுவடுகளை இன்றும் காணலாம். சீகிரியாவுக்கு அண்மையிலுள்ள பிதுரங்கல விகாரையில் உள்ள சித்திரங்களும் எமது நாட்டுக் கலைஞர்கள் தேசியக் கலையை முன்னேற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கான உதாரணங்களாகும். இவ்வாறான குகை ஓவியங்களை இந்தியாவின் அஜந்தாக் குகைகளிலும் காணலாம். நீண்டகாலம் பாவிக்கக்கூடிய வர்ணங்களை எமது நாட்டு சித்திரக் கலைஞர்கள் பயன்படுத் தியமைக்கு அபயகிரி அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட வர்ண ஓடுகள் ஆதார மாயுள்ளன. இவற்றை உரு. 1.17 இல் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 1.17 வர்ண ஓடுகள்


வைத்தியக் கலையும் அரசர்களின் உதவியுடன் அபிவிருத்தியடைந்தது. வைத்திய நூல்களிலிருந்தும் இலக்கிய நூல்களிலிருந்தும் பண்டைய தேசிய வைத்தியக் கலையின் ஒழுங்கமைப்பு பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாயுள்ளது. அன்றைய வைத்தியத் துறையானது விஞ்ஞான ரீதியாக முன்னேற்றமடைந்திருந்தமையை பல இடங்களில் கிடைத்துள்ள வைத்திய சாலை சிதைவுகளில் இருந்து அனுமானித்துக் கொள்ளலாம். பொலநறுவை "ஆலாஹன" பிரிவினையில் மேற்கொண்ட அகழ்வுகளின் போது இன்று பயன்படுத்தப்படும் வைத்திய உபகரணங்களுக்கு ஈடான தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. புராதன வைத்திய சாலை நுட்பங்கள், மலசலகூட அமைப்பு முறை, மருந்து ஓடம் போன்றன உயர் தரங்கொண்டவையாக விளங்கின. "ஆலாஹன" அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட புராதன வைத்திய சாலையின் சிதைவுகளுக்குள் மருத்துவ ஓடமும் காணப்பட்டது. உரு 1.18 ஐப் பார்க்க. இது 2.5 மீட்டர் அளவு நீளமுடைய ஒரு மருந்து ஓடமாகும். பாம்பு தீண்டியவர்களை இந்த மருத்துவ ஓடத்தில் படுக்க வைத்து வைத்தியம் செய்ததாக நம்பப்படுகிறது.




உரு. 1.18 மருத்துவ ஓடம் 2.5 மீட்டர் நீளமுடையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 1.18 A கைத் தொழில் உபகரணங்கள்



உரு. 1.18 B கைத் தொழில் உபகரணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றைய மன்னர்கள் வைத்தியத் துறைக்கு ஆற்றிய சேவைகள்:**

* பிக்குகளுக்கும், பொது மக்களுக்கும் வைத்தியர்களை நியமித்தல் (புத்ததாச மன்னன் பத்துக் கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.)
* வைத்தியசாலை, சுகாதார மத்திய நிலையங்கள் என்பனவற்றை நிறுவுதல். (முதலாம் அக்போ, முதலாம் சேனன், இரண்டாம் சேனன், ஐந்தாம் காசியப்பன், முதலாம் பராக்கிரமபாகு ஆகியோர் வைத்தியசாலைகளை அமைத்து செயற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. அனுராதபுரம், மிகிந்தலை, பொலநறுவை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது மாளிகைகளில் கண்வைத்திய நிலையங்கள் இருந்ததற்கான தகவல்கள் கிடைத்துள்ளன.
* வைத்தியர்களைப் பயிற்றுவித்தல்.
* பாம்பு வைத்தியம், பிரசவ வைத்தியம் என்பனவற்றை முன்னேற்றுதல்.
* "பெறுமதியான சஞ்சிகை"(சாராணார்த்த சங்கிரஹய) எனும் வைத்திய நூலை எழுதி வைத்தியர்களுக்கு விநியோகித்தல்.
* வலது குறைந்தோருக்கு வைத்திய வசதியளித்தல். (புத்ததாச மன்னன் இச் சேவையை செய்ததாக மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.)
* வைத்தியர்களின் சேவைகளுக்காக கிராம் சொத்துக்களை ஒதுக்குதல்.
* மூலிகைத் தோட்டங்களை உருவாக்குதல்.

பண்டைய சமுதாயத்தினரின் வெவ்வேறு விடயங்களையும் வெளிப்படுத்தும் புராதன பொருட்கள் பல அபயகிரி அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலோகக் கைத்தொழில் முன்னேற்றம் கண்டிருந்தது என்பதற்கு உரு 1.19 இல் காட்டப்பட்டுள்ள உலோகத் தொழிற்சாலை ஒன்றிலிருந்து பெறப்பட்ட சிதைவுகள் ஆதாரமாயுள்ளன.




உரு. 1.19 உலோகத் தொழிற்சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உலோகத்தை உருக்கி சிலைகள் வடித்துள்ளார்கள் என்பது இவ்வகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தேவைகளுக்காக உலோகங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதையும் அறிய முடிகின்றது. அபயகிரி அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட உலோக நாணங்கள் பலவற்றை உரு 1.20 இல் காணலாம். அத்துடன் வேறு பொருட்களையும் காணலாம்.



உரு 1.20 அவலோகேஸ்வரா
போதிசத்த ரூபாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 1.21 அகழ்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தங்க செதுக்கல் பூப்போன்ற தோற்றமுடையது.

* பெறுமதிமிக்க உலோகம், மாணிக்கம், வெவ்வேறு கற்கள்
* பவளங்களும் ஆபரணங்களும்
* "ஹஸ்எபுகஸாபண" என்ற பெயரைக் கொண்ட காசு
* உலோகப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உருக்கும் பாத்திரம் (புடக்குகை), அடுப்பு
* உள்நாட்டுப் பீங்கானும், கண்ணாடிப் பொருட்களும்
* வர்ண ஓடுகள்

அக்காலத்தில் ஏனைய கைத்தொழில்களாக தந்தாது செதுக்குதல், மரவேலை, நெசவு, வனைதல் ஆகியன முக்கியத்துவம் பெற்றிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகள்

01. ஆரியர் வருகைக்கு முன்னர் இந்நாட்டில் நிலவிய தொழில்நுட்பம் தொடர்பாக பரம் பரைக் கதைகள். தொல் பொருளியல் என்பனவற்றிலிருந்து தகவல்களைப் பெற்று தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிற்கு விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கு உமக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது எனக் கருதுக. அதற்கு நீர் முன்வைக்கும் விடயங்களைக் கோவைப்படுத்துக.

02. பண்டைய நீர்ப்பாசன முறையின் உயர் தொழில்நுட்பம் தொடர்பாக சமூகக் கல்வி வட்டத்தில் முன்வைப்பதற்கான உரையின் பிரதியொன்றைத் தயாரிக்க.

03. நீர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள பன்சல ஒன்றில் அமைந்திருக்கும் சைத்தியத்தின் உருவத்தை வரைந்து அதன் பிரதான பாகங்களுக்குப் பெயரிடுக.

04. புராதன இலங்கையின் கட்டடக் கலையின் முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் அபயகிரி அகழ்வுகளில் கிடைத்த தகவல்களையும் அது பற்றிய புகைப்படங்களையும் சேகரித்து உமது வகுப்பறை சுவரொட்டிப் பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றைத் தயாரிக்க.

05. சுதேச வைத்தியத் துறைக்கு அரசர்கள் செய்த உதவிகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| அரசன் | மேற்கொண்ட சேவை | பண்டைய இலக்கிய நூல்கள் | தொல்பொருளியல் நூல்கள் |
|---|---|---|---|
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அத்தியாயம்

# இலங்கையின் புராதன வெளிநாட்டுத் தொடர்புகள்

புராதன காலத்திலிருந்தே இலங்கை வெளிநாடுகளுடன் பொருளாதார. அரசியல். சமய. கலாச்சாரத் தொடர்புகளை வைத்திருந்தது என்பதற்கு அனேக சான்றுகள் உள்ளன. புராதன காலத்திலிருந்தே கிழக்கு மேற்கு நாடுகளின் வர்த்தக மத்திய நிலையமாக இலங்கை விளங்கியுள்ளது. ஐரோப்பா உட்பட மேற்கு நாடுகளுடனும் சீனா. இந்தியா போன்ற கிழக்கு நாடுகளுடனும் வர்த்தகப் பரிமாற்றங்களைக் கொண்டிருந்தமையினால் அன்றிலிருந்தே இலங்கை ஏனைய உலக நாடுகளுடன் வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தது என்பது வெளிப்படையாகும்.

சீனா உட்பட கீழைத்தேய நாடுகளில் இருந்து மலாக்கா நீரினை ஊடாக பெறுமதியான கற்கள். பட்டு. பீங்கான்கள் போன்ற வர்த்தகப் பொருட்களைக் கொண்டு வந்த கப்பல்கள் இலகுவாக எமது நாட்டை வந்தடைந்தன. மறுபுறம் ஐரோப்பிய நாடுகளிலிருந்து மத்திய தரை நாடுகள் ஊடாக தரைமார்க்கமாகக் கொண்டு வரப்பட்ட முத்து. மருந்துவகை போன்ற வர்த்தகப் பொருட்கள் செங்கடல். பாரசீக வளைகுடா ஊடே இந்தியாவைக் கடந்து எமது நாட்டை அடைந்தன.

வர்த்தகர்கள் முதன்முதலாக எமது அண்டை நாடான இந்தியாவிலிருந்தே இங்கு வந்தனர் எனக் கருதப்படுகின்றது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்த கொஸ்மஸ் இந்நாட்டில் இடம்பெற்ற வர்த்தகம் தொடர்பாக விளக்கமளிக்கையில் **“இத்தீவிற்கு இந்தியாவின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்து மட்டுமன்றி பாரசீகம். அபிசீனியா போன்ற நாடுகளில் இருந்தும் வர்த்தகக் கப்பல்கள் வந்துள்ளன.”** எனக் குறிப்பிட்டுள்ளார். முதலாம் விஜயபாகு மன்னன் காலத்தில் பர்மாவுக்கும் இலங்கைக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் இருந்ததாகவும் பெறுமதிமிக்க செல்வங்களை பர்மாவிற்கு அனுப்பியதாகவும். கவர்ச்சியான உடைகள். வாசனைத்திரவியங்கள். கற்பூரம் போன்ற பொருட்களை ஏற்றிக் கொண்டு இலங்கைத் துறைமுகத்திற்கு கப்பல்கள் வந்ததாகவும் வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அன்று கற்பிட்டி. மாதோட்டம். கோகர்ண. ஜம்புகோளப்பட்டினம். ஊராத்தொட்ட. தேவநகர. கொடவாய போன்றன இலங்கையின் பிரதான துறைமுகங்களாக இருந்தன. இலங்கையில் உரோம. பாரசீக. அராபிய. இந்திய. சீன. மலாய வர்த்தகர்கள் இத்துறைமுகத்திற்கு வந்திருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

அக்காலத்தில் காணப்பட்ட துறைமுகங்களை 2.1 உருவப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜம்புகோளப் பட்டினம்

ஊராத்தோட்டை

மஹாதித்த

மல்வத்து ஓயா


கோகண்ண

மஹாவலி கங்கை

வளவை கங்கை

தேவ நகர

கொடவாய




உரு 2.1 புராதன இலங்கையில் காணப்பட்ட புராதன துறைமுகங்கள்


இங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பண்டுதொட்டே வர்த்தகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. அக்காலத்தில் சீன வியாபாரிகள் இலங்கைக்குக் கொண்டுவந்த பட்டுத்துணிகளை. பாரசீக வர்த்தகங்கள் இந்நாட்டிலிருந்த சீன வியாபாரிகளிடம் கொள்வனவு செய்து உரோமாபுரிக்குக் கொண்டு சென்று அங்குள்ள வர்த்தகர்களுக்கு விற்பனை செய்ததாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்து இலங்கை ஒரு வர்த்தக மத்திய நிலையமாக அன்று விளங்கியது என்பதை அறியலாம். சீன வம்சக் கதைகளின் படி இலங்கைத் தூதுக்குழுவினர் அடிக்கடி சீனாவிற்குச் சென்று வந்துள்ளனர். இவர்கள் முத்து. மாணிக்கம். யானைத் தந்தம். ஆபரணங்கள் போன்றவற்றை சீனாவிற்குக் கொண்டு சென்றதாக சீன வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் ஒரு பெறுபேறாகவே சீன இனத்தவரான பாகியன் எனும் தேரர் கி.மு. 411 அளவில் விஜயம் செய்தார் என எண்ணலாம்.

பண்டைய இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகளில் உரோமும் முக்கியம் வாய்ந்ததாகும். கி.பி. 1ம் நூற்றாண்டு முதல் 5ம் நூற்றாண்டு வரை உரோமர் வர்த்தக நோக்கம் கருதி வந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. அபய மன்னன் செம்பவளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அழைபப்பித்தமையும், மாதோட்ட, தெவிநுவர, கறபிட்டி ஆகிய துறைமுகங்களிலும் அனுராதபுரம், மிகிந்தலை, சீகிரிய ஆகிய இடங்களிலும் உரோம நாணயங்கள் கிடைத்துள்ளமை யும் இதற்குச் சான்றாகும். அன்று எமது நாட்டுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த பல்வேறு இனத்தவர்கள் வெவ்வேறு பெயரில் இலங்கையை அழைத்தனர். கிரேக்கர் "தப்ர பேன்" எனவும் உரோமர் "செரண்டிப்" எனவும் இந்தியர், "தம்பபண்ணி", "இரத்தின துவீபம்", எனவும் அழைத்தனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிரேக்க இனத்தவரான தொலமி என் பாரினால் வரையப்பட்ட உலகப் படத்தில் இலங்கை, "தப்ரபேன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




உரு 2.2 இலங்கையுடன் புராதன காலத்தில் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்த நாடுகளும் கடற்பாதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையுடன் பல்வேறு நாடுகளும் வெளிநாட்டுத் தொடர்புகளை அதிகரித்துக் கொண்டமைக்கு இலங்கையின் புவியியல் அமைவு காரணமாகும். இலங்கையின் புவியியல் அமைவிடம் பற்றி நீங்கள் முன்னர் கற்றிருப்பீர்கள். அதனை சுருக்கமாகப் பின்வருமாறு நோக்கலாம்.

* இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்.
* இந்தியாவிற்கு அண்மையில் ஆனால் தனித்து அமைந்திருத்தல்
* கிழக்கு, மேற்குப் பட்டுப்பாதையின் கேந்திர நிலையத்தில் அமைந்திருத்தல்.
* பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட நீரோட்டப் பாதையில் அமைந்திருத்தல்.
* இயற்கையான துறைமுகங்களும், ஆற்றுத் துறைகளும் அதிகமாகக் காணப்படல்
* இந்தியா, சீனா, கிரீஸ், உரோமம், எகிப்து போன்ற பண்டைய நாகரீகங்களைக் கொண்ட நாடுகளுடன் சார்ந்து மையமாக அமைந்திருத்தல்.

இலங்கை வெவ்வேறு நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளின் தன்மை.

(அ) அரசியல்

(ஆ) கலாச்சாரம்

(இ) வர்த்தகம்

முதலாவதாக நாம் அரசியல் தொடர்புகளை நோக்குவோம். எமது நாட்டிற்கு அண்மையிலுள்ள இந்தியாவுடனான தொடர்புகளை நோக்கும்போது பெரும்பாலும் அரசியல் சார்ந்ததாகவே உள்ளது.

**இந்தியாவுடனான அரசியல் தொடர்புகளை பின்வரும் தலைப்புக்களில் தொகுக்கலாம்.**

| | |
|---|---|
| * இடப்பெயர்வு | * அரசாட்சிக்காகப் பெற்றுக் கொண்ட உதவிகள் |
| * முற்றுகை | * விவாகத்தொடர்புகள் |

இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனில் "சமூகக் கல்வியும் வரலாறும்" பாடம் தொடர்பாக நடாத்தப்பட்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றிய பேச்சாளர் முன்வைத்த கருத்துக்களை இங்கே சுருக்கமாகத் தருகின்றோம்.

இந்தியாவிலிருந்து எமது நாட்டிற்கு முதன் முதல் குடியேறியோர் விஜயனும் அவனது சகாக்களும் என நம்பப்படுகின்றது. அவர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வருகை தந்தனர். விஜயனின் இளவரசியாக மதுராபுரியிலிருந்து வரவழைக்கப்பட்டவரும் அவருடைய சகாக்களும் இரண்டாவதாக வந்த குழுவினர் ஆவர்.

* பண்டுவாச மன்னனும் சகாக்களும்
* பத்தகச்சானா குமாரியும் சகோதரர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மகிந்த தேரரும் மதத்தூதர்களும்
* சங்கமித்தா பிக்குனியுடன் வருகை தந்த பதினெட்டு கலைக்குழுவினர்

ஆகியோர் குடியேறியோராகக் கருதப்படுகின்றனர். இவர்களுள் ஆரம்பத்தில் வந்தோர் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டனர். அத்துடன் தமது தாய்நாட்டுடனும் அரசியல் தொடர்புகளை வைத்திருந்தனர்.

அடுத்ததாக **"இந்திய முற்றுகை"** என்ற தலைப்பில் அவர், தேவநம்பியதிஸ்ஸ மன்னனின் சகோதரன் "சூரதிஸ்ஸ" மன்னன் காலத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியை விளக்கினார். சேனன், குத்திகன் ஆகிய குதிரை வியாபாரிகள் சூரதிஸ்ஸ அரசனைக் கொன்று இராச தானியை கைப்பற்றிய விதத்தை அவர் முதலில் விபரித்தார்.

* கி.பி. 145 இல் அசேல மன்னனைக் கொன்று இராசதானியைக் கைப்பற்றிய எல்லாள மன்னன் பற்றி அடுத்து அவர் குறிப்பிட்டார். எல்லாளன் 44 வருடங்கள் இந்நாட்டை ஆட்சி செய்தான். இவன் சட்டத்தையும், நீதியையும் நிலைநிறுத்திய ஆட்சியாளன் என துட்டகைமுனு அரசன் கூட ஏற்றுக் கொண்டமையினால் அவனுக்காக நினைவுத்தூபி எழுப்பப்பட்டுள்ளது.
* வலகம்பா மன்னன் காலத்தில் வருகை தந்த தென் இந்திய ஆக்கிரமிப்பாளரான "பூலஹத்த" உட்பட ஏழுபேர் சிங்காசனத்தைக் கைப்பற்றியமை.
* தாதுசேன மன்னன் ஆட்சிபீடம் ஏறுமுன் வருகை தந்த பண்டு, பாரிந்த உட்பட ஐந்து ஆக்கிரமிப்பாளர்கள் சிங்காசனத்தைக் கைப்பற்றியமை.
* முதலாம் சேனன் காலத்தில் வந்த ஸ்ரீ மார வல்லப என்ற பாண்டிய அரசனின் ஆக்கிரமிப்பு
* ஐந்தாம் மிகிந்து காலத்தில் (கி.பி. 993) வந்த இராஜ இராஜ சோழ மன்னன் இலங்கையைக் கைப்பற்றிமை.

இத்தகவல்கள் பேச்சாளரினால் விபரமாக முன்வைக்கப்பட்டன. அவ்வாறே இந்த முற்று கைக்காக வந்த குழுவினரில் ஒரு பகுதியினர் இங்கு தங்கியதுடன் அவர்கள் எமது மக்களுடன் இணைந்த விதத்தையும் விபரித்தார்.

பின்னர் அவர் "அரசாட்சிக்காகப் பெற்றுக் கொண்ட உதவிகள்" பற்றியும் கூறினார். எமது நாட்டு அரசர்கள் தமது அரசாட்சியைப் பலப்படுத்துவதற்காகவே தென் இந்திய அரசர்களின் உதவியைப் பெற்றுக்கொண்டனர் என்பதையும் எடுத்துக் காட்டினார். குறிப்பாக ஆட்சி அதி காரத்தில் உரிமை கோரிய இளவரசர்களுக்கிடையில் பிளவுகள் ஏற்பட்டபோதே இவ்வுதவிகள் கோரப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் பலவற்றை பேச்சாளர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

* கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அபய நாக அரசர் தமிழ் ஆட்சியாளர்களின் உதவியை நாடியமை.
* முதலாம் முகலன் இளவரசன் தென் இந்திய அரசனின் உதவியைப் பெற்று தனது சகோதரன் காசியப்பனுடன் போர் புரிந்து ஆட்சியைக் கைப்பற்றியமை.
* சிறி நாக அரசன் தமிழ் ஆட்சியாளர்களின் உதவியைப் பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மூன்றாம் அக்போ மன்னன் தமிழ் மன்னர்களின் உதவியைப் பெற்றமை.
* கி.பி. 684 இல் மானவம்மன் பல்லவர்களின் உதவியை நாடியமை.

இவ்வாறு உதவிக்காக தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கூலிப்படையினரில் சிலர் விவாகத்தொடர்புகளினால் இந்நாட்டு மக்களுடன் இணைந்து கொண்டதை அவர் எடுத்துக் காட்டினார்.

விவாகத் தொடர்புகளினால் வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டதை மற்றுமொரு பேச்சாளர் எடுத்துக் கூறினார். முதலாவதாக எமது அசரர்கள் இவ்வாறான தொடர்புகளை உருவாக்கிய சந்தர்ப்பங்கள் பலவற்றை சுருக்கமாகப் பின்வருமாறு கூறினார்.

* விஜயன் மதுராபுரியில் இருந்து அரசியை வரவழைத்தமை.
* பண்டுவாசுதேவன் "சாக்கிய" வம்சத்தைச் சேர்ந்த பத்தகச்சானாவை வரவழைத்து திருமணம் புரிந்தமை.

திருமணங்களினால் ஏற்பட்ட உறவுகள் காரணமாக அரசியல் தொடர்புகள் வலுவடைந்த விதத்தையும், நான்காம் மகிந்தன் கலிங்க அரசியைத் திருமணம் செய்தமையையும், முதலாம் விஜயபாகு மன்னன் கலிங்க இளவரசியைத் திருமணம் செய்தமையையும், தனது சகோதரி யான மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்கு மணமுடித்து வைத்தமையையும் பேச் சாளர் விளக்கினார்.

இந்திய முற்றுகை தொடர்பான மற்றுமொரு அம்சத்தை அவர் அடுத்து எடுத்துக் கூறி னார். மேற்குறிப்பிட்ட முற்றுகைகளின்போது சிறை பிடிக்கப்பட்டோரை தமது நாடுகளுக்குக் கொண்டு செல்லும் கொள்கையை இரு நாடுகளும் பின்பற்றியதை அவர் விளக்கினார்.

வங்க நாசித திஸ்ஸ மன்னன் காலத்தில் சோழ மன்னர் எமது நாட்டை முற்றுகையிட்டு பன்னிரெண்டாயிரம் சிங்களவர்களை சிறைப்படுத்தி இந்தியாவக்குக் கொண்டு சென்ற சந்தர்ப்பத்தை அவர் விளக்கினார். அதற்குப் பழிக்குப் பழி தீர்க்கும் வகையில் அவனது மகன் கஜபா மன்னன் கி.பி. 112 இல் சோழ நாடு சென்று யுத்தம் புரிந்து இந்நாட்டிலிருந்து பிடித்துச் சென்ற பன்னிரெண்டாயிரம் பேருக்கும் மேலதிகமாக பன்னிரெண்டாயிரம் பேரைக்கொண்டு வந்து இங்கு குடியேற்றியதை எடுத்துக் கூறினார்.

அதுமட்டுமன்றி, பொலன்னறுவையில் ஆட்சி செய்த முதலாம் பராக்கிரபாகு மன்னன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து அங்கு சிறைப்பிடிக்கப்பட்டோரை இங்கு கொண்டு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கினை நிறைவு செய்வதற்கு முன்னர் செவிமடுப்போரின் வினா ஒன்றிற்று விடையளித்த பேச்சாளர் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இந்தியாவை மட்டுமன்றி பர்மா தேசத்தையும் முற்றுகையிட்டதாக வராற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார். இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட கலாச்சாரத் தொடர்புகளை கவனிப்போம். எமது எழுத்துமுறை, மொழி, கலாச்சாரம், வேறும் பலதரப்பட்ட கலைகள் வளாவதற்கு இந்தியாவுடன் இருந்த தொடர்புகள் காரணமாயிற்று.


**கலாசாரத் தொடர்புகள்**

கீழேயுள்ள உரு 2.5 2.6 என்பனவற்றை அவதானியுங்கள். முதலாவது உரு இந்தியாவின் குப்தகாலத்திற்குரிய அஜந்தா சுவர் ஓவியமாகும். இரண்டாவது சீகிரிய ஓவியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இத்தகைய கலாசார தொடர்புகள் இடம்பெற்ற பல சந்தர்ப்பங்களைக் காணலாம். அசோக மன்னன் தேவாநம்பிய தீச மன்னனுடன் கொண்டிருந்த நட்பினால் கி.மு. 247 இல் எமது நாட்டுக்கு புத்த சமயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக பிரதான கலாச்சாரத் தொடர்பு ஏற்பட்டது. உரு 2.3 இல் காணப்படும் சமாதி சிலையை அநுராதபுரத்தில் மகாமேகவன பூங்காவில் நீங்கள் காணலாம். புத்த பெருமாரின் காருண்யம், இரக்கம் ஆகிய குணாம்சங்களை பிரதிபலிக்கும் விதத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது அதன் சிறப்பம்சமாகும். இவ்வா றான சமயத் தொடர்பினை பின்பற்றி அசோக கல்வெட்டில் உள்ள பிராமிய எழுத்துக்கள் சிங்கள மொழியின் ஆரம்ப எழுத்துக்களாக அமைந்தன. இதனை உரு 2.4 இல் காணலாம். அன்றியும் அசோக மன்னனால் எமது நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட முடிசூடும் முறையினை எமது மன்னர்கள் பின்பற்றியதாக கூறப்படுகிறது. அதனால் அசோக மன்னனை "இரண்டாந் தந்தை" என புகழப்பட்டான்.



உரு. 2.3 சமாதி நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 2.4 பிரஷமி எழுத்துக்களில் அசோக கற்தூண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 2.5 அஜந்தா சுவர் ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 2.6 சிகிரிய சுவர் ஓவியம்

இந்தியாவில் சமுத்திர குப்த மன்னன் காலத்தில் இலங்கையின் கீர்த்திசிறி மேவன மன்னனால் (கி.பி. 301 - 328) இலங்கை யாத்திரிகர்களுக்காக புத்த கயாவில ஓய்வு மண்டபம் அமைக்கப்பட்டது. இம் மன்னன் காலத்திலேயே ஹேமாலா தத்த இளவரசன் ஆகியோரால் புனித தந்த தாது இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

அஜந்தாவின் ஓவிய மரபுகள் எமது சீகிரிய சித்திரத்திலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது சில விமர்சகர்களின் கருத்தாகும். சமாதி சிலை, தொலுவில சிலை, இசுறு முனி காதலர் சிலைகள் போன்றன குப்த செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன. அவ்வாறே தென் இந்திய அமரா வதி செதுக்கல்கள், வார்ப்புக்கள் என்பனவற்றின் செல்வாக்கிற்கும் இலங்கை உட்பட்டுள்ளது.

அக்காலத்தில் இலங்கை பௌத்த நாடுகளுடன் தொடர்புகளை கொண்டிருந்ததாகத் தெரிய வருகின்றது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சீன இனத்தவரான பாகியன் பிக்கு அபயகிரி விகாரையில் மூன்றாண்டுகள் தங்கியிருந்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 718 இல் வப்ரபோதி என்ற பெயருடைய தென் இந்திய பிக்கு ஒருவர் இலங்கைக்கு வந்ததாகவும் கூறப்படுகின்றது.


பொலன்னறுவையை சோழர்களின் ஆட்சியிலிருந்து மீட்டெடுத்த முதலாம் விஜயபாகு மன்னன் பர்மாவிலிருந்து பிக்குகளை வரவழைத்து "உபசம்பதா" சடங்கினை இங்கு நடத்தினான்.

தென் இந்திய வருகைகளும், முற்றுகைகளும் காரணமாக இந்துக் கலாச்சாரத்தின் செல்வாக்கிற்கு எமது நாடு உட்பட்டது. சோழர் காலத்தில் பொலனறுவையில் நிர்மாணிக்கப்பட்ட உரு இல 2.7 இல் காட்டப்படும் சிவாலயக் கட்டடங்கள் இந்துக் கலாச்சாரங்களுக்கு உட்பட்டவையாகும். தொல்பொருளியல் ஆய்வுகளின் போது இந்துக் கடவுள்களின் சிலைகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிவன், விநாயகர் சிலைகளும் இவற்றுள் அடங்கும். இந்துக்கள் எருதினை பரிசுத்தமான தொன்றாகக் கருதுகின்றனர். அனுராதபுரத்தில் உள்ள சந்திரவட்டக் கற்களில் பதிக்கப்பட்டிருந்த எருது உருவம் பொலநறுவை சந்திர வட்டக் கற்களில் நீக்கப்பட்டுள்ளமைக்கு இந்து செல்வாக்கே காரணமாகும்.

கொழும்பில் அல்லது கண்டியில் அமைந்துள்ள நூதனசாலையை பார்வையிடச் செல்லும் சந்தர்ப்பத்தில் இந்துக் கடவுள்களின் சிலைகளை பார்க்கத் தவறாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 2.7 இந்துத் தெய்வத்தின் உருவம்

பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் இருந்து முஸ்லீம்கள் இங்கு வரத்தொடங்கியதனால் இஸ்லாம் மதமும் கலாச்சாரமும் எமது நாட்டின் கரையோரப் பகுதிகளில் பரவத் தொடங்கியது. புத்தளம், சிலாபம், பேருவளை, அளுத்கமை, காலி, வெலிகம, அம்பாந்தோட்டை, கல்முனை, மட்டக்களப்பு, சம்மாந்துறை போன்ற இடங்களில் முஸ்லிம் குடியேற்றங்கள் உருவாகின.

### வியாபாரத் தொடர்புகள்

மகரகம மகாவித்தியாலய பத்தாம் தர மாணவர்கள் **"இலங்கையின் புராதன வியாபாரத் தொடர்புகள்"** என்ற தலைப்பில் பாடசாலை சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்றை சமர்ப்பித்தனர். பின்வரும் தகவல்கள் அதில் அடங்கியிருந்தன.

"இலங்கைக்கு ஆரியர் வருகை தந்தபோது அப்போது இங்கு வாழ்ந்த இயக்க, நாக வம்சத்தினர் வெளிநாட்டிலிருந்து வந்த வர்த்தகர்களுடன் பண்டங்களைப் பரிமாற்றிக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக நோக்குடன் வருகை தந்த தபஸ்ஸ, பல்லுக ஆகிய வர்த்தக சகோதரர்கள் புத்தரின் புனித கேசத்தை வைத்து திரியாய பிரதேசத்தில் ஹிரிகடு தூபியை அமைத்ததாக கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குரியதாகக் கருதப்படும் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திர குப்த மௌரிய அரசரின் சபையிலிருந்த கிரேக்க தூதுவரான "மெகஸ்தனீஸ்" தனது அறிக்கையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு யானைகளை அனுப்பியதாக குறிப்பிடுகின்றார்.

மகாவம்சத்தில் குறிப்பிடப்படுவது போன்று விஜய மன்னனும், பின்னர் தேவநம்பியதீச மன்னனும் பரிசுப் பொருட்களாக முத்து, மாணிக்கம் என்பனவற்றை தூதுவர்கள் மூலம் இந்தியாவிற்கு அனுப்பியுள்ளனர்.

சூரதிஸ்ஸ மன்னனின் காலத்தில் இலங்கையை முற்றுகையிட்ட சேனன், குத்திகன் ஆகிய இருவரும் குதிரை வியாபாரிகள் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் வியாபாரப் பண்டங்களைக் கொண்டு செல்வதற்காக மகாதித்த (மாதோட்ட), ஜம்புகோளப்பட்டினம் (தும்பகொளபட்டுன) ஆகிய துறைமுகங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. மகாதித்த துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட உரோம நாணயம், உரோம, அராபிய, சீன பாத்திரங்களின் சிதைவுகள், மணிகள் போன்றன மூலம் ஆரம்ப நூற்றாண்டுகளில் மகாதித்த பிரசித்தமான துறைமுகமாக இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.


இந்தியாவைத் தவிர வேறு நாடுகளுடனும் இலங்கை கொண்டிருந்த வர்த்தக உறவுகள் சம்பந்தமான விடயங்கள் "கொஸ்மஸ்" என்பாரின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில், இலங்கையின் துறைமுகங்களில் பாரசீக, எதியோப்பிய கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து கிரீஸ், உரோம் உட்பட மத்திய தரை நாடுகள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் கிரேக்க வியாபாரிகள் இந்தியாவிற்கு வந்து இலங்கையின் வியாபாரப் பொருட்களைக் கொண்டு சென்றுள்ளனர்.

கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்தே இலங்கை உரோமுடன் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தது. அது "பிலினி" என்ற வரலாற்றியலாளரின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. "எனியுஸ் ப்ளோ கொமியுஸ்" என்ற பெயரைக் கொண்ட உரோமக் கப்பல் தலைவனுடன் இலங்கையில் அன்று இருந்த "பாதிகாபய" மன்னன் வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தான். அதன் பெறுபேறாக இம்மன்னன் உரோம மன்னனுக்கு இலங்கைத் தூதுவர்களை அனுப்பி வைத்தான்.

கி.பி. 1409 இல் இலங்கைக்கு வந்த சேனாதிபதி சிறிபாத தலத்துக்கு பூசைகளை மேற கொள்ள பெறுமதியான பொருட்களை கொண்டு வந்தான் என காலியில் காணப்பட்ட திரிபாஷை கல்வெட்டு தெளிவாக கூறுகிறது. பர்மா, மலேசியா,இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் இலங்கை வியாபாரத் தொடர்புகளை கொண்டிருந்தது என அறிய முடிகிறது. 12ம் நூற்றாண்டில் இலங்கை வர்த்தகர்கள் பர்மா நாட்டுடன் வியாபாரத் தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 2.8 புராதன இலங்கையிலிருந்து
ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள்




உரு. 2.9 புராதன இலங்கைக்கு
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட பொருட்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தனர். மரபு வழி கதைகளாய்க் கூறப்படுகின்றது. கீழே தரப்பட்ட படங்களை அவதானிக்குக. 2.8 உருவப் படத்தி இலங்கையிலிருந்து வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களையும் 2.9 உருவப் படத்தி வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பொருட்களையும் காணலாம். அவற்றினால் வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான விளக்கத்தையும் பெறலாம்.

குளோடியஸ் மன்னன் காலத்தில் உரோமுக்குச் சென்ற இத் தூதுக் குழுவினர் இலங்கை திரும்போது பவளங்களைக் கொண்டு வந்ததாகவும் அவற்றைக் கொண்டு ரூவன்வலி சாயாவை அலங்கரித்ததாகவும் மகாவம்சக் கவிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சீகிரிய அகழ்வுகளின்படி சீகிரியா சர்வதேச வர்த்தக மத்திய நிலையமாகத் திகழ்ந்தது என்பது அறிஞர்களின் அபிப்பிராயமாகும்.

கி.பி. 7ம் நூற்றாண்டின் பின்னர் இந்து சமுத்திரத்தின் வர்த்தக ஆதிக்கம் அரேபியர்களுக்குக் கைமாறி அவர்கள் இலங்கையுடன் வியாபாரத் தொடர்புகளை கொண்டனர். அனுராதபுரத்தில் அராபிய, பாரசீக வியாபாரிகள் தங்கியிருந்ததாக சான்றுகள் உள்ளன. கி.பி. 1344 இல் இபுனு பதூதா என்ற முஸ்லிம் பயணியும் இலங்கைக்கு விஜயம் செய்தார். இலங்கையின் மேற்குக் கரையோரத் துறைமுகங்களுக்கு அயலில் வர்த்தகம் செழிப்பாக இடம் பெற்றதாகவும் அவை முஸ்லிம்கள் வசம் இருந்ததாகவும் வரலாற்று மூலங்களிலிருந்து தெரியவருகின்றது.



உரு. 2.10 சீன மட்பாண்டங்களும் சீன நாணயங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் புராதன நகரங்க்ளில் மேற்கொண்ட அகழ்வுகளின் போது சீன நாணயம் கண்டெடுக்கப்பட்டமை. சீனாவுடன் வர்த்தகத் தொடர்புகள் இருந்தமைக்கான ஆதாரமாகக் கருதலாம். கலாச்சார முக்கோணத்திட்டத்தில் அபயகிரி, ஜேதவனாராம பகுதிகளில் மேற் கொண்ட அகழ்வுகளின் போது சீன மட்பாண்டங்களின் துண்டுகள் கண்டெடுக்கப்பட்டன.

கி.பி. 1409 இல் இலங்கைக்கு வந்த "சென் ஓ" சேனாதிபதி சிவனொளிபாத பூசைக்காகப் பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொண்டு சென்றதாக காலி "திரிபாஷா" கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகின்றது.

பர்மா, சீயம், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுடனும் இலங்கை வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது. கி.பி. 12ம் நூற்றாண்டில் இலங்கை வர்த்தகர்கள் பர்மாவுடன் யானை வியாபாரம் செய்ததாக வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.8, 2.9 சித்திரங்களைப் பார்க்க. இதில் முதலாவது படத்தின் மூலம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்ற பொருட்களையும், இரண்டாவது படத்தின் மூலம் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவந்த பொருட்களையும் பற்றி அறிந்து கொள்ளலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்த பொருட்கள் | இலங்கையிலிருந்து வெளிநாட்டிற்குக் கொண்டு சென்ற பொருட்கள் |
|---|---|
| பீங்கான் விசிறி பொருட்கள் | யானையும், யானைத் தந்தமும் |
| கற்பூரமும் வாசனைத் திரவியங்களும் | முத்துக்கள், மாணிக்கங்கள் |
| துணிவகை, முத்து, பவளம் | கடலாமை ஓடுகள் |
| குதிரைகள் | பலசரக்கு |
| அலங்கார மட்பாத்திரங்கள், கம்பளங்கள் | பருத்தித் துணி |

புராதன காலத்தில் இலங்கைக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் இடையில் நிலவிய வர்த்தகத் தொடர்புகள் பற்றி நோக்கும் போது சாதக நிலைமைகள் மட்டுமன்றி பாதகங்களும் இருந்து வந்துள்ளன.

புத்த, சமயத்தின் வருகையினால் எமது நாட்டின் கலாசாரம் பெருமளவு முன்னேற்றம் கண்டது. சிங்கள அரிச்சுவடி முறையும், மொழி, இலக்கியம், கலைத்திறன் என்பனவும் விருத்தி ய டைந்தமை அதன் பெறுபேறே ஆகும்.

இந்து சமயம் இந்நாட்டிற்கு வந்ததன் பின்னர் அதனுடன் இணைந்ததான கலாசார அபிவிருத்தி ஏற்பட்டது. இதன் பிரகாரம் இந்து சமயத்தை வழிபடும் தமிழ் மக்களும் எமது நாட்டு மக்களுடன் இணைந்து கொண்டனர். தென் இந்திய கலைநுட்ப நிர்மாண முறைகளின் செல்வாக்கும் இங்கு ஏற்பட்டது. பொலனறுவையில் உள்ள சிவ தேவாலயம் அதற்கு உதாரணமாக உரு இல. 11 உரு இல 12 இல் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரேபியர் வருகையினால் இஸ்லாம் சமயமும் எமது நாட்டு மதங்களுள் ஒன்றாகியது. அரபியக் கட்டிடக் கலை பாரம்பரியங்களுக்கேற்ப பள்ளிவாசல்களும் கட்டிடங்களும் அமைக்கப்பட்டன.

பல்வேறு இனத்தினர்களும், மதங்களும் இந்நாட்டிற்கு வருகை தந்தமையால் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் ஒத்தாசைகள் ஏற்பட்டன. சில சிங்கள அரசர்களின் படைகளில் தமிழர், ஏனைய இன வீரர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. தமிழ் இன பிக்குமார்கள் பற்றி வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அனுராதபுர யுகத்தில் சில மன்னர்களின் அரசவைகளில் "தமிழ் அதிகாரி" என்ற பதவி இருந்ததாகக் கூறப்படுகின்றது. சிங்கள மொழியில் பல தமிழ்ச் சொற்களும் சேர்ந்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வுகள் குறைந்த சந்தர்ப்பங்களில் இலங்கை மக்களுக்கிடையில் சச்சரவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றியும் அறியமுடிகின்றது. எனினும் அதனை முற்றவிடாது புத்திசாலித்தனமாகத் தீர்த்துவைப்பதற்கான பிரயத்தனங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

சோழ, கலிங்க படையெடுப்புக்களின்போது இராசரட்டையில் குளங்கள், பௌத்த வழிபாட்டுத் தலங்கள் பௌத்த தர்மம் எழுதப்பட்ட ஏடுகள், புத்தகங்கள் போன்றன அதிகளவில் அழிவுக்கு உட்பட்டதாக சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## செயற்பாடுகள்

01. உங்கள் சமூகக் கல்வி ஆசிரியரின் ஆலோசனையின்படி இலங்கை புராதன வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட நாடுகளை தேசப்படத்தில் குறிக்க.

02. "புராதன வெளிநாட்டுத் தொடர்புகளில் செல்வாக்குச் செலுத்திய புவியியல் காரணிகள்" என்ற தலைப்பில் உமது பாடசாலை சமூகக் கல்வி சங்கத்தில் நீங்கள் ஆற்றவேண்டிய உரையின் பிரதி ஒன்றைத் தயாரிக்கவும். அதற்காகப் பின்வரும் குறிப்புக்களைக் கருத்திற் கொள்க.

    உலகப் படத்தில் இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை. பருவப் பெயர்ச்சிக் காற்று, நீரோட்டைகள் என்பனவற்றின் செல்வாக்கு. இலங்கையைச் சூழவுள்ள இயற்கைத் துறைமுகங்கள்.

03. இந்தியா, சீனா, உரோம், அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வியாபாரப் பண்டங்களும் அந்நாடுகளுக்கு எமது நாட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பண்டங்களும் உள்ளடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகள்

01. உங்கள் சமூகக் கல்வி ஆசிரியரின் ஆலோசனையின்படி இலங்கை புராதன வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட நாடுகளை தேசப்படத்தில் குறிக்க.

02. "புராதன வெளிநாட்டுத் தொடர்புகளில் செல்வாக்குச் செலுத்திய புவியியல் காரணிகள்" என்ற தலைப்பில் உமது பாடசாலை சமூகக் கல்வி சங்கத்தில் நீங்கள் ஆற்றவேண்டிய உரையின் பிரதி ஒன்றைத் தயாரிக்கவும். அதற்காகப் பின்வரும் குறிப்புக்களைக் கருத்திற் கொள்க.

உலகப் படத்தில் இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை, பருவப் பெயர்ச்சிக் காற்று, நீரோடைகள் என்பனவற்றின் செல்வாக்கு, இலங்கையைச் சூழவுள்ள இயற்கைத் துறைமுகங்கள்.

03. இந்தியா, சீனா, உரோம், அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வியாபாரப் பண்டங்களும் அந்நாடுகளுக்கு எமது நாட்டிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பண்டங்களும் உள்ளடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.

| நாடு | இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பண்டங்கள் | இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பண்டங்கள் |
|---|---|---|
| | | |

04. இலங்கையின் பின்வரும் புராதன துறைமுகங்கள், ஓடத்துறைகள் என்பனவற்றுக்கான இன்றைய பெயர்களைத் தருக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ. | மகாதித்த | ஆ. | கோகண்ண | இ. | ஊரத்தொட்ட |
| ஈ. | தேவநகர | உ. | ஜம்புகொளப்பட்டுன | ஊ. | கொடவாய |

05. இலங்கை புராதன காலத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்த கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளைப் பெயரிடுக. இந்நாடுகள் இன்று எமது நாட்டுடன் கொண்டிருக்கும் தொடர்புகளைப் பற்றிக் கலந்துரையாடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 03

# கண்டி இராசதானி

மூன்று நூற்றாண்டுகளுக்கு வரலாற்று உரிமை கோருகின்ற இராசதானி செங்கடகல இராசதானி என அழைக்கப்படும். அது இயற்கையான பாதுகாப்பான இடத்தில் அமைந் துள்ளது. அதன் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நடவடிக்கைகளையும் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் ஆகியோருடன் காணப்பட்ட தொடர்புகளையும், அங்கு வாழ்ந்த தலைவர்கள் பற்றிய விளக்கத்தையும் பெற்றுக் கொடுப்பது இவ் அத்தியாயத்தின் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

சர்வதேச உரிமையாக உலக மக்களின் ஆதரவுக்கு உட்பட்ட தலதா மாளிகை கண்டி நகரிலேயே அமைந்துள்ளது. தலதா மாளிகையை மையமாக வைத்தே மலைநாட்டு இராதானியின் உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மக்களின் பாராட்டுக்கு இலக்கான கண்டிப் பெரஹரா வருடம்தோறும் நடைபெற்று வருகின்றது. இவ் முக்கியத்துவம் மிக்க கலாசார விழாவை சில வேளை நீங்களும் கண்டு களித்திருக்கலாம்.


மத்திய மலைநாட்டின் கண்டி இராச்சியத்தின் புவியியல் பின்னணி இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட வேறுபட்டது. இங்கு வடகீழ், தென்மேல் பருவக்காற்றுக்கள் மூலம் மழை கிடைப்பது காலநிலையின் விசேடத்துவமாகும். மலைகளிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் நதிகளும், நீரோடைகளும் இங்கு அதிகமாக உள்ளன. இங்கு காணப்படும் நீர் வீழ்ச்சிகளும் இயற்கை அழகை மேம்படுத்துவதற்கு காரணமாகும்.

நீர் அரண், வன அரண், மலை அரண் என்பவற்றைக் கொண்ட கண்டி இராசதானி இயற்கையான பாதுகாப்புப் பெற்ற பிரேதசமாகும். கண்டி இராசதானியின் இயற்கை வனப்பை உரு 3.2 இல் காணலாம்.

16ம், 17ஆம் நூற்றாண்டுகளில் கரையோரப் பிரதேசங்களில் அதிகாரத்தை பலப்படுத்திக் கொண்ட போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய மேல்நாட்டவர்களுக்கு கண்டி இராசதானியை ஆக்கிரமிக்க முடியாமைக்கு காரணம் இயற்கையிலேயே அது பாதுகாப்பிடமாக அமைந் திருந்தமையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 3.1 தலதா பெரஹராவின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு. 3.2 கண்டியைச் சுற்றிக் காணப்படும் இயற்கையழகு

## கண்டி இராச்சியத்தின் நிர்வாக அமைப்பு

கண்டி இராச்சியத்தில் அதன் தலைவன் அரசனேயாவான். நாட்டின் சகல நிலங்களின் உரிமையும் அவனுக்கே சொந்தமானது. அரச நிருவாக நடவடிக்கைகளுக்காக அரசனால் நியமிக்கப்பட்ட அரசனுக்கு உதவி புரியும் குழு ஒன்று இருந்தது. அரசரின் பெயரினால் நாட்டு மக்கள் அந்த அதிகாரிக்கு மதிப்பளித்தனர்.

தம் ஆசனத்திலிருந்து நீக்கப்பட்ட சிறீ விக்கிரமராஜசிங்க எனும் மன்னன் ஆங்கில இனத்தவரான மேஜர் ஹூக் என்பவருடன் செய்துகொண்ட வெளியிடுதல் ஒன்று இங்கேயுள்ளது. அதனை அறிந்து கொள்ளுங்கள்

"கோபம் கொண்ட வேளை எதையும் செய்ய இடமளிக்காத ஆலோசகர்கள் ஆங்கிலேய ஆளுனரிடம் இருக்கின்றார்கள். உங்கள் மத்தியில் தண்டனை குறைவது அதனாலேயாகும். எனினும் எங்கள் கோபம் தீர்கின்ற போது குற்றவாளி இறந்து விட்டிருப்பார்." மேஜர் ஹூக்கும் சிறிவிக்கிரம ராஜசிங்கனுக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி இராச்சியத்தில் நீதியும், அதிகாரமும் படைத்தவனாக விளங்கியவன் அரசன் ஆகும் என்பது மேலேயுள்ள வாசகத்திலிருந்து தெளிவாகின்றது. எனினும் நிருவாகம் தொடர்பான முடிவுகள் எடுப்பதற்கு முன்பு பிரதான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததாக இந்நாட்டிலிருந்தவரான றொபட் நொக்ஸ் என்பவரின் "எதாஹெலதிவ" எனும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசன், பிரபுக்கள் அடங்கிய மலையக அரச சபை 'மா அமைச்சு மண்டபம்' எனும் பெயரில் அழைக்கப்பட்டது.

கண்டி இராச்சிய அரச சபை பற்றிய சிறு குறிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரு 3.3 ஐப் பார்க்கவும்.



**உரு. 3.3 மலையகத்தின் அரச சபை**


அரசனும் பிரதான அதிகாரிகளையும் கொண்ட குழுவே கண்டி அரசின் அரச சபை மகவாசல, மகா மந்திரி சபை என பல பெயர்களால் அழைக்கப்படும்.

3.3 உருவப் படத்தினைப் பார்க்கவும். அதனால் கண்டிய அரச சபை பற்றிய எண்ணக் கருக்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்களில் திசவானி நிலமேயும் பஸ்நாயக்க நிலமேயும் அரசனுக்கு அடுத்த படியில் புகழும், அதிகாரம் பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். மேற் கூறப்பட்ட மா அதிகாரங்களின் கீழ் ஆட்சியை மேற்கொள்வதற்கு திசாவைகள், ரட்டமாகாத் மயாக்கள், கோரளைகள், முகாந்திரங்கள் ஆகிய அதிகாரிகள் காணப்பட்டனர். இவர்கள் நாட்டுப் பகுதி, கிராமப் பகுதி, பட்டத்து மாளிகைப் பகுதி விகாரைச் சொத்துக்கள் என்பவற்றைப் பரிபாலித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப் பகுதி : அக்காலத்தில் நிருவாக நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக இராசதானி பல பிரதேசங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. பிரதேசங்களின் நிரு வாக நடவடிக்கைகள் நாட்டுப் பகுதி (ரட்ட வசம) என்னும் பிரிவாலேயே நடை பெற்றன. அதன் நிருவாகத் தலைவர் அதிகாரி எனப்பட்டார். நேர் மையை நிலைநாட்டல், வருமானத் தைச் சேகரித்தல், அரச கட்டளை யைச் செயற்படுத்தல், விகாரை களைத் தூய்மையாக வைத்திருத் தித்தல் போன்ற நடவடிக்கைகள் அவரைச் சார்ந்த பொறுப்பு களாகும்.



உரு. 3.4 பிரதானி ஒருவர்

கிராமப் பகுதி :


கிராமப பகுதி (பத்தே) என்று கூறப்பட்ட செயலணி மூலம் வரியைச் சேகரிக்கும் வேலை நடைபெற்றது. கிராம விதானை கள் என அழைக்கப்பட்ட வரி அறவிடும் அதிகாரிகள் மூலம் சேற்று வரி, சுண்ணாம்பு வரி, பெரும் வரி, உப்பு வரி போன்ற வரிகள் அறவிடப்பட்டன.

பட்டத்து மாளிகைப் பகுதி : அரச மாளிகையின் நடவடிக்கை கள் திட்டமிடப்படல், பட்டத்து மாளிகைச் செயலணி மூலம் நடைபெற்றது. யானைகளைப் பரிபாலிப்போர்கள், கொடியேற்றுவோர்கள், அரச களஞ்சியத் தலைவர்கள் போன்றோர் அங்கு வேலை செய்த அதிகாரிகளில் சிலராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விகாரைச் சொத்துக்கள்** : விகாரைச் சொத்துக்கள் பற்றிய அனைத்து நடவடிக்கைகளும் இச் செயலணி மூலம் நடைபெற்றன. இச் செயல்கள் யாவும் "தியவன நிலமே' மார்களுக்கும், தேவாயலங்களின் பிரதானிகளுக்கும் உரிய பொறுப்பாக அமைந்தன. நிருவாகத்தின் முக்கியமான ஒரு பிரிவு நீதிமன்றங்களாகும். இங்கு நீதித் துறைக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது. மலையகத்தில் இருந்த அனைத்து அதிகாரிகளுக்கும் அவரவர் பதவிக்கு ஏற்ப பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. முக்கியமான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் அரசனுக்கு மட்டும் இருந்தது. முக்கியமான தலைவர்கள் தொடர்பான வழக்குகள், விகாரைகள், புத்த பிக்குகள் சம்பந் தமான வழக்குகள் இராசத்துரோகம் சம்பந்தமானவை, கிளர்ச்சிகள் தந்திரங்கள் போன்ற வழக்குகள் யாவும் அரசன் விசாரித்து தீர்ப்பளிப்பன வாகும். அன்று குற்றவாளிகளுக்கு வழங்கிய தண்டனைகள் உரு 3.4 இல் பார்க்கலாம்.




* கையால் அறைதல்
* கசையடி – தென்னை குலைக் காம்பினால் அடித்தல்
* தண்டம் விதித்தல்
* பலகையில் வைத்து ஆணியறைதல்

* அடைத்து வைத்தல்
* நாடு கடத்தல்
* தலைமுடியை வெட்டுதல்
* இழி குலத்துக்குள் அனுமதித்தல்
* கொல்லுதல் – நீரில் அமிழ்த்திக் கொல்லுதல் யானையால் கொல்லுதல்

உரு 3.4 குற்றவாளிகளுக்கான தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இராசதானியின் சமூக நடவடிக்கைகள்

பண்டைய மலையகச் சமூகமானது பிரதானமாக கிராமிய சமூகமாகவே காணப்பட்டது. சிறு வீடுகள் சிலவற்றை மாத்திரம் கொண்டமைந்தது. கிராமத்தின் வீடுகளின் அமைப்பு முறைபற்றி கண்ட 'றெபேட் நொக்ஸ்' பின்வருமாறு உரைக்கின்றார்.

> மலைநாட்டுச் சிங்களவர்களின் வீடுகள் ஓலையால் அல்லது வைக்கோலால் வேயப்பட்ட சிறு வீடுகளாகும். வரிச்சுக் கட்டி மென்மையான சுவர்களைக் கொண்டிருந்து. பிரவுக்கள் தவிர சாதாரண மக்கள் தச்சர்களினதும், கொத்தர்களின் உதவியை நாடவில்லை. -
>
> றெபேட் நொக்ஸ்

மேலே காட்டியவாறு பிரவுக்களின் வீடுகளுக்கும், சாதாரண மக்கள் வசித்த வீடுகளுக்கும், இடையே தெட்டத் தெளிவான வேறுபாடுகள் காணப்பட்டன. பிரவுக்கள் வசித்த வீடுகள் சுவர்கள், யன்னல்கள், கதவுகள் வைத்து வரிச்சு முறையில் கட்டப்பட்டு வெள்ளைச் சுண்ணாம்பு பூசப்பட்டன. கூரைக்கு ஓடு போடப்பட்டிருந்தது. சாதாரண மக்களது வீடுகள் கிடுகுகளினால் அல்லது வைக்கோலினால் வேயப்பட்டிருந்தது. திண்ணைகள் பொதுவாக எல்லா வீடுகளிலும் காணப்பட்டன. திண்ணைகள் என்பது ஏறக்குறைய அரை மீற்றர் உயரத்தில் மண்ணினால் அமைக்கப்பட்ட ஒரு மேடையாகும். விருந்தினர் இத் திண்ணையில் உட்காரவும், உறங்கவும் பயன்படுத்தினர். வீடுகளின் முன்பக்க வேலி மரக்கம்புகளால் கட்டப்பட்டிருந்தது. எல்லா வீடுகளிலும் நெல்லை வைப்பதற்குரிய நெற்கூடைகள் அல்லது கோர்க்காலிகள் காணப்பட்டன. உரு 3.5 தைப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 3.5 வீச்ச - நெற்கூடையுடன் கிராம வீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமான எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உற்பத்திகள் கிராமத்தில் காணப்பட்டன. கிராமிய. சமூக அமைப்பில். இம்முறை முக்கியத்துவம் பெற்றிருந்தது. குல அமைப்புகளுக்கு அமைய தேவைகள் நிறைவு செய்யப்பட்டன. குல அமைப்பினை கருத்தில் கொண்டுதான் உதவிகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. கத்தி, மண்வெட்டி என்பன உற்பத்தியில் கொல்லர்களும், மட்பாண்ட உற்பத்தியில் குயவர்களும் முன் நின்றமை இதற்கு உதாரணங்களாகும்.

விவசாய சமூகம் ஒன்று காணப்பட்ட மலைநாட்டுப் பிரதேசத்தில் காணி உரிமை மற்றுமொரு திட்டமிடப்பட்ட சமூகக் காரணியாகும். அதிகமான சமூகத் தொடர்புகளும், பழக்க வழக்கங்களும் காணி உரிமையின் அடிப்படையில் அமைந்திருந்தது. இங்கு அரசனே சகல காணிகளுக்கும் உரித்துடையவனாவான். மலையக இராச்சியத்தில் நிலவிய காணி உரிமையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பல பிரிவுகளாக வேறுபடுத்தலாம்.

அது பற்றிய விளக்கத்தை கீழே உள்ள அட்டவணையைக் கற்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**கபாடகம்** : அரச மாளிகையின் உபயோகத்துக்கென ஒதுக்கப்பட்ட விசேஷ நிலம் கபாடகம் எனப்பட்டது. இந் நிலங்களில் வாழ்ந்த மக்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு குறிப்பிட்ட ஒரு பங்கினை விளைவிலிருந்து அரசனுக்கு கொடுக்க வேண்டும்.

**நிந்தகம்** : அதிகாரம், திசாவை போன்ற உயர் பதவிகளை வகித்தவர்கள் வழங்கிய சேவைக்காக அவர்களுக்கு அரசனால் வழங்கப்பட்ட நிலங்கள் 'நிந்தகங்கள்' எனப்பட்டன. நிந்தகங்கள் முழுக் கிராமங்களாக அல்லது கூறுகளாக வழங்கப்பட்டன. இவை உறுதி அல்லது சிறு பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்டன. நிந்தகங்கள் பரம்பரையானதா அல்லது அவரது சேவைக்காலம் வரையிலானதா என்பது அரசனாலேயே முடிவு செய்யப்படும். பரம்பரை உரிமை கொண்ட நிந்தகங்கள் மானிய முறை நிந்தகங்கள் எனப்பட்டன. இவற்றில் வாழ்ந்த மக்கள் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு விளைவின் குறிக்கப்பட்ட ஒரு பகுதியை நிந்தகச் சொந்தக்காரருக்கு கொடுக்க வேண்டும்.

**விகாரைக் காணிகள்** : இந்நிலங்களின் உரிமைகள் பொதுவாக பரம்பரை பரம்பரையாகக் கை மாறியது. இவற்றைப் பிறருக்கு கையளிக்கவோ அல்லது விற்பனை செய்வதோ தடை செய்யப்பட்டிருந்தது.

**மானிய நிலங்கள்** : சாதாரண மக்கள் பயன்படுத்திய நிலங்களே மானிய நிலங்கள் எனப்பட்டன. இவை ஒவ்வொரு கிராமங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தி வந்த நிலங்களாகும். உரிமையை மாற்றும் அதிகாரம் அரசனுக்கு இருக்க வில்லை. ஆயினும் மக்கள் தாம் பயன்படுத்திய நிலம் தொடர்பாக அரசனுக்கு ஏதேனும் ஒரு சேவையை அல்லது உற்பத்தி செய்யப்பட்ட விளைவின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பகுதியை அரசனுக்கு வழங்க கடமைப்பட்டவர்களாக இருந்தனர். இப்படியாக சேவை முறை "இராசகாரிய முறை" எனப்பட்டது.

## கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட விவாக முறைகள்

* நீள் திருமணம் (மணமகளை மணமகன் வீட்டுக்கு கூட்டிச் செல்லல்)
* பதிதற் திருமணம் (மணமகன் மணமகள் வீட்டில் தங்குதல்)
* பல புருஷ திருமணம் (ஒரு பெண்ணுக்கு பல் சகோதரர்கள்/கணவர்களாக ஒரே வீட்டில் வசித்தல்)

சமூகத்தில் மிகச் சிறிய அலகாக குடும்பம் விளங்கியது. குடும்பத்தில் நெருக்கமானதும், சுமுகமானதுமான உறவு நிலவியது. குடும்பம் தந்தை வழி கொண்டது. விவாகப் பிணைப்பினை பாரதூரமாக கருதாத சமூகத்தில் குடும்ப அலகானது பலம் பொருந்தியதாக இருந்தமையை விசேடமாக கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என பேராசிரியர் ரால்வ் பீரிஸ் குறிப் பிட்டுள்ளார்.

பண்டைய மலையக சமூக அமைப்பில் பௌத்த கோயில்களுக்கும் அங்கிருந்த பௌத்த பிக்குகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது. கிராம வாசிகளின் எல்லாச் செயற்பாடு களுக்கும் புத்த பிக்குகள் அழைக்கப்பட்டனர். எனவே அக்காலத்தில் புத்த பிக்குகள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். வாழ்க்கையின் சகல கருமங்களும் புத்த பிக்குகளால் நிறை வேற்றப்பட்டன. கிராமத்தில் இருந்த புத்த கோவில்கள் கல்விக் கூடங்களாகவும் இருந்து வந்தது. அதன் மூலம் கிராமிய மக்கள் கல்வியைப் பெறக்கூடியதாய் இருந்தது. வைத்தியத்திலும், சுப நேரங்களை கணிப்பதிலும், சாஸ்த்திரம் பார்ப்பதிலும் புத்த பிக்குகளே பிரசித்தி பெற்றவர் களாக இருந்தனர். புத்த பிக்குகளால் மனித சமுதாயத்துக்கு ஆற்றப்பட்ட சேவைகள் உரு 3.6 ப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.



உரு 3.6 பௌத்த சமய பிக்குகளால் சமூகத்துக்கு ஆற்றப்பட்ட சேவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இராசதானியின் பொருளாதார அமைப்பு


மலையக இராச்சிய காலத்தில் விவசாய பொருளாதார முறை முக்கியத்துவம் பெற்றிருந்தது. அது சமுதாயத்தின் நுகர்வை மையமாக கொண்டிருந்தது. மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலே நெற் செய்கை மலைச் சரிவுகளில் படி போன்று அமைக்கப்பட்ட வயல்களிலேயே செய்கை பண்ணப்பட்டது. மலையக இராச்சியத்தில் அதிகளவு நிலங்கள் சேனைப் பயிற்செய்கைக்காவே ஒதுக்கப்பட்டிருந்தது. இங்கு குரக்கன், சாமை, சோளம் போன்ற தானியங்களும் கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டன. வீட்டுத் தோட்டங்களில் பலா, ஈரப்பலா, மிளகு, சாதிக்காய், ஏலம், கராம்பு, பாக்கு முதலியன பயிரிடப்பட்டன. நெல் உற்பத்தி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் போதியதாக இல்லாததால் பலா, ஈரப்பலா, கிழங்கு போன்றவற்றையும் உணவாக உட்கொண்டனர்.

மலையக இராச்சியத்தில் வர்த்தகம் பண்டமாற்று முறையைக் அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. அன்றாட வாழ்க்கைக்கு தேவையான விவசாய உபகரணங்களும், வீட்டு உபகரணங்களும், அணிகலன்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

நிலங்கள் உழுவதற்காகவும், பால் பெற்றுக் கொள்வதற்காகவும் எருமைகளையும், பசுக்களையும் வளர்த்தனர். கிராமத்தில் மந்தை வளர்ப்பும் நடைபெற்றுள்ளது என்பது புலனாகின்றது.

மலையகத்தில் தன்னிறைவு பெற்றிருந்த கிராமங்கள் ஒற்றையடிப் பாதையூடாக தொடர்புபட்டிருந்தன. அரச கருமங்களில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளும், வியாபாரிகளும் போக்கு வரத்துச் செயவதற்காவே இவ் ஒற்றையடிப் பாதைகள் தோன்றின. அந்த ஒற்றையடிப் பாதைகளின் அருகே சிறிய கடைத்தெருக்கள் காணப்பட்டன. இக் கடைத்தெருக்களில் உடுபுடைவைகள், புகையிலை, சுண்ணாம்பு, மருந்துகள், ஆயுதங்கள், மட்பாண்டங்கள், உலோகப் பாண்டங்கள் என்பன விற்கப்பட்டன.

அங்கு பண்டமாற்று முறை பெருமளவுக்கு நடைபெற்றுள்ளதுடன் சிறிய அளவு பணப் புழக்கமும் இருந்துள்ளது. மலையக இராச்சியத்தில் பாவனையில் இருந்த நாணயங்கள் சிலவற்றை இங்கே உரு 3.7 இல் காணலாம்.



உரு 3.7 கண்டி இராச்சிய நாணயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 3.8

குருநாகல் மாவட்டத்திலுள்ள
ரிதி விகாரையில் காணப்படும் புத்தரின் சித்திரம்.
பின்னணியாக மகாதோரணம் காணப்படுகிறது.



உரு 3.9

பூ சித்திரம் -ரிதி விகாரை

குருணாகல்



உரு 3.10

பூ சித்திரம் -ரிதி விகாரை

குருணாகல்



உரு 3.11

மனித உருவங்கள் ரிதி விகாரை

குருநாகல்

மலை நாட்டு சித்திரக்கலையின் மகிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி இராச்சியத்தின் கலாசார அமைப்பு

கரையோரப் பிரேதசங்களைப் போலல்லாது இயற்கைப் பாதுகாப்பரண்களோடு அமைந்த மலையக இராசதானி சுயாதீனத்திலும், கலாசாரத்திலும் கேந்திர நிலையமாக அமைந்தது. மலையக ஆட்சிக் காலத்திலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போல் இடம் பெற்ற அரசியல் பிணக்குகள் காரணமாக சமய, கல்வி வளர்ச்சி பாதிக்கப்பட்டன. கண்டியரசில் சமய, கல்வி மறுமலர்ச்சி ஏற்படுத்துவதில் முதலாம் விமலதர்ம சூரியன் (1592-1604) ஈடுபட்டான். மலையகத்தின் சமய வரலாற்றில் 'வெலிவிட்ட சிறீ சரணங்கர' தேரவுக்கு முக்கியமானதொரு இடம் உண்டு. இவர் அங்கிருந்த காலத்தில் இலங்கையில் 'உப சம்பதா' அடைந்த பிக்குகள் காணப்படாமையால் அவரின் வழிகாட்டலின் கீழ் சீயம் நாட்டில் இருந்து புத்த குருமார் வரவழைக்கப்பட்டு 'உப சம்பதா" என்ற சடங்கு நடாத்தப்பட்ட பின் மல்வத்து விகாரை நிர்மாணிக்கப்பட்டதாகவம் மல்வத்து விகாரையில் உள்ள ஏடுகள் சான்று பகர்கின்றன.

உபசம்பதா அடைந்ததும் சிறீ சரணங்கரா தேரர் தமது சீடர்களுடன் புத்த சமய வளர்ச்சிக்கு பெரும் சேவை செய்தார்.

கி.பி. 1739 இல் நாயக்க அரச வம்சத்தவர்கள் மலையக இராச்சியத்தின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்து சமயத்தவர்களான நாயக்கர்கள் பௌத்த சமயத்துக்கு மாறிக் கொண்டாலும், இந்து சமய வழிபாடுகளை தொடர்ந்தும் மேற் கொண்டார்கள். இந்து சமய வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது என்பதற்கு தலதா மாளிகையின் அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நான்கு ஆலயங்களும் சான்றாகும். மேலும் நான்கு ஆலயங்களின் 'பெரஹராக்கள்' தலதா பெறஹராவுடன் தொடர்பபடுத்தப்படுவதும் முக்கியமானதாகும். இவ் வகையில் பௌத்தர்கள் இந்து சமயத்துக்கு கௌரவம் அளித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

## கலைகளும் தேசிய கைத்தொழில்களும்

மலையக இராச்சியத்தின் காலப் பகுதியில் தேசிய கலைகள் வளர்ச்சிக்கு ஆதரவு கிடைத்தது. சித்திரக் கலை இக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது. ஜாதக் கதைகளையும், புத்தரது வாழ்க்கையையும் சித்திரமாக வரைவது அக்காலத்தில் பிரபல்யமாக இருந்தது. 'மாறனை வென்றமை' தர்மசக்கர பரிவர்த்த சூத்திரப் போதனை' 'வெஸ்ஸன்தர ஜாதக" முதலியன கண்டிய காலத்து ஓவியங்களில் முக்கிய தொனிப்பொருளாகும்.

கங்காராமை, பம்பரகல, லங்காதிலக, தலதாமாளிகை, தெகல தொருவை, மெதவெல, ரிதி விகாரை போன்ற விகாரைகளில் கண்டிய காலத்துக்குரிய சித்திரங்கள் பலவற்றைக் காணலாம். மலையகச் சித்திரக் கலையின் மகிமையைக் காட்டுகின்ற உரு 3.8 இல் அவதானிக்குக.

மலையக இராச்சியத்திலே சித்திரக்கலையில் பல இலட்சணங்கள் உண்டு. மனித உருவம், மரஞ் செடிகொடிகள், இயற்கைக் காட்சிகள், ஆடை அணிகள் ஆகியவற்றின் பினனணி அமைப்பை நோக்கும்போது பண்டைய சித்திரக் கலைக்கும், மலையகச் சித்திரக் கலைக்கும் இடையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைநாட்டு ஓவியங்கள் சுவர்களிலும் பனை ஓலைச் சுவடிகளிலும் வரையப்பட்டிருந்தன. அத்துடன் மலையகச் சித்திரங்களை வரைந்த ஓவியனின் நோக்கமாக அமைந்தது லௌகீக வாழ்க்கையாகும். அதற்காக கண்களைக் கவரும் ஓவியங்களை வரைந்தான். அத்துடன் பொதுமக்களைப் புத்த சமயத்தின் பால் பக்தி ஏற்படுத்தும் நோக்கில் அதனைப்பற்றி தெளிவான அறிவைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் கதைகளாக அமைந்தன. தார்மீக வாழ்க்கையினால் ஆன்மீக சுகம் ஏற்படும் என்பதையும், பாவச் செயல்களில் ஈடுபடுவதால் நரகத் துன்பம் ஏற்படும் என்பதனையும் இச் சித்திரங்கள் எடுத்துக் காட்டின.

இலங்கை வரலாற்றில் மலையகச் செதுக்கல் கலைக்கு முக்கியமானதொரு இடம் உண்டு. அவ்வாறான செதுக்கல்கள் உரு 3.12 அ இல் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானிக்குக.



3.12 கண்டிய நூல் நூற்றற் கலை



3.12 அ கண்டிய செதுக்கல் கலை

கல்வெட்டுக்களான கலைப்படைப்புக்களை மேலே உள்ள படத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அன்று மலையக மக்கள் செதுக்கல் வேலைகளுக்காக கல், பலகை, யானைத் தந்தம் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். மரப்பலகைகளிலான செதுக்கற் கலைப்படைப்புக்களுக்கு அம்பக்கே தேவாலயம் பிரசித்தி பெற்றது. அங்கு மரப்பலகைகளினாற் செதுக்கப்பட்ட ஒரு சித்திரத்தை உரு 3.13 இல் காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 3.13 அம்பக்க மரச் செதுக்கல்

இதனைத் தவிர யானைத் தந்தத்தைக் கொண்டு செய்யப்பட்ட பல்வேறு கலைப்படைப் புகளையும் காணலாம். சீப்புகள், வளையல்கள், நகைப் பெட்டிகள் என்பன இதற்கு உதார ணங்களாகும். யானைத் தந்த சிற்ப வேலைகள் கொண்ட கதவுகள் இவற்றில் சிறந்தனவாகும். "ரிதி" விகாரையில் உள்ள பண்டகசாலை அறையில் யானைத் தந்தத்தினால் செதுக்கப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றை உயர் கலைப் படைப்புகளுக்குச் சிறந்த உதாரணங்களாகக் குறிப்பிடலாம்

தங்கம், வெள்ளி, பித்தளை ஆகிய உலோகங்களினால் நுண்ணியதாகச் செய்யப்பட்ட விளக்கு, பேனை, கெண்டி, தட்டுகள் ஆகிய உபகரணங்களும் ஆபரணங்களும் இக்கால சிற்பக் கலையின் வளர்ச்சியினை எடுத்துக் காட்டுவனவாகும். உரு 3.14 ஐப் பார்ப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.


கண்டிய மலைநாட்டுச் சித்திரங்கள் சிற்பங்கள் ஆகியோர் அமுத சுரபி, அன்னாசனம், அன்னாசி ஆகியவற்றை அலங்காரங்களாகப் பெரிதும் கையாண்டனர்.

நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ளும் அளவுக்கு மலையக இராச்சியத்தின் நிலைமைகள் காணப்பட்டபோது சுதேசிய கைத் தொழில்களும் விருத்தியடைந்திருந்தன.

மட்பாண்ட கைத்தொழிலும் நன்கு விருத்தியடைந்திருந்தது. மட்பாண்ட அலங்கரிப்பு வேலைகளில் பல்வேறுபட்ட முறைகளைக் கையாண்டனர். கண்டி நூதனசாலையில் சிற்ப வேலைப்பாடுகள் கொண்ட மட்பாண்டங்களை உங்களால் காணக்கூடியதாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 3.14 பித்தளையில் செதுக்கற் கலை

"வாகடை" உற்பத்தி இக்கலையகத்தில் காணப்பட்டது. கொடிக்கம்பு, பனையோலை விசிறி, நகைப் பெட்டி போன்ற பொருட்களுக்கான அலங்கார வேகைள் இங்கு செய்யப்பட்டன.

பருத்தித் துணி நெய்தல் மலைநாட்டில் காணப்பட்ட மற்றுமொரு கைத்தொழில் ஆகும். துப்பட்டி, ஒஸரி, துவாய், அங்கார விரிப்புகள், சட்டை, தலையணை உறைகள் என்பன மலை நாட்டு நெசவாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. துணிவகைகளை அலங்காரம் செய்யும் பணியும் இங்கு நடைபெற்றது. தங்க நிற நூல், வெள்ளிநூல் மூலம் எம்பிரொயிடர் எனும் அலங்கரிப்பு இக் காலத்தில் செய்யப்பட்டது.

பாய் பின்னல், பண்டைக் காலம் முதல் "தும்பற மிட்டியாவத்த" என்னும் இடத்தில் பிர சித்தி பெற்றுள்ளது. தாளை என்னும் தாவரத்தின் நாரைக் கொண்டு பாய் பின்னல் கைத்தொழிலில் இடம்பெற்றிருந்தது. கொத்மலே என்னும் பகுதியில் இரும்பு உற்பத்தியும், சிரிவவுல (உடுநுவரை) பித்தளைக்கும் பிரசித்தி பெற்றிருந்தது.

இந்தக் காலத்தில் சிங்கள இலக்கியத்துறை வளர்ச்சியும் காணப்பட்டது. அதேபோன்று பல பெயர்களால் காவியங்கள் காணப்பட்டன. இராஜ தோத்திர சிங்களக் காவியங்கள் காணப்பட்டன. இராஜதோத்திர சிங்களக் காவியங்களின் இரசனை தரும் பாடல்கள் இக்காலத்தில் மிகவும் விரும்பப்பட்ட பாடல் வடிவங்களாகும். இவற்றிற்கு உதாரணங்களாக இராஜசிங்க சிரித, இராஜசிங்க வர்ண "இங்கீரிசிசட்டன" என்பவற்றைக் கொள்ளலாம். "வெலிவிட்ட சங்கராஜ" பிக்குகளினால் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பகுதிக்குப் பரவத் தொடங்கியமை இக்காலத்தில் காணப்பட்ட விசேட அம்சமாகும். அத்துடன் கவியால் கதைக்க முயன்ற கவிஞர்கள் பௌத்த இலக்கியத்தாலும் "சனக் கதா" இலக்கியத்தினாலும், தமிழ் இலக்கியத்தினாலும் வளம் பெற்றது. முத்துக் குமார, முத்துக்குமாரி கதைகள், வேதாலன் கதைகள் ஆகியவைகளும் உதாரணங்களாகும்.

கண்டி இராச்சியத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலை பற்றிக் கற்ற உங்களுக்கு போர்த்துக்கேயருக்கும், கண்டிய அரசுக்கும் இடையில் இருந்த தொடர்பை இப்போது கற்கக் கூடியதாக இருக்கும்.

## போர்த்துக்கேயருக்கும் கண்டிய அரசுக்கும் இடையில் இருந்த தொடர்பு

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையின் இராசதானி மூன்று பகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதை நீங்கள் 9ஆம் தரத்தில் கற்றிருப்பீர்கள். இச்சந்தர்ப்பத்தில் கண்டி இராசதானி சேனா சம்மத விக்கிரமபாகு என்னும் அரசனால் ஆளப்பட்டு வந்தது.

போர்த்துக்கேயர் மலையக அரசனுடன் தொடர்பு கொள்ள இரண்டு நோக்கங்கள் இருந்தன. அவையாவன,


* வியாபாரம் தொடர்பாக கறுவாவைப் பெற்றுக் கொள்ளுதல்
* மலையகத்தில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புதல்

கி.பி. 1582 இல் முதற்தடைவையாக முதலாம் இராஜசிங்கன் மலையக இராச்சியத்தை ஆக்கிரமித்துக் கொண்டான். அப்போது கலியரத்த பண்டாரன் மலையகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தான். முதலாம் இராஜசிங்க மன்னன் கலியரத்த மன்னனைத் தோற்கடித்தான். கலியரத்த பண்டாரன் தனது குசுமாசன தேவியுடனும், மருமகனான யமசிங்கபண்டார என்பவனுடனும் பாதுகாப்புக் கருதி போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்தான். போர்த்துக்கேயர் வரவேற்புடன் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதுடன் கத்தோலிக்க மதத்தைத் தழுவிக் கொண்டனர். குசுமாசனா தேவி தொன் கதரினா என்னும் பெயரையும், யமசிங்க பண்டார தொன் பிலிப்பு என்ற பெயரையும் வைத்துக் கொண்டனர். இந் நிகழ்ச்சி நடந்து சிறிது காலத்தில் கலியரத்த பண்டாரன் மரணமடைந்தான்.

அக்காலத்தில் கோட்டை இராச்சியத்தில் தமது அதிகாரத்தைப் பரப்பிக் கொண்டு இருந்த் போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்திலும் தமது ஆதிக்கத்தைப பரப்புவதிலும் ஒரு தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அதற்கு உரிமையானவளான குசுமாசனா தேவி அவர்கள் பாதுகாப்பில் இருந்தமையால் போர்த்துக்கேயருக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 3.15 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையினால் அரசியல் பிரிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில் சீதாவாக்கை இராசசிங்கன் மேற்கொண்டிருந்த கடும் நடவடிக்கைகள் காரணமாக மலையக மக்கள் அவனிடத்தில் அதிக வெறுப்புக் கொண்டிருந்தனர். இக்காலப் பகுதியில் மலையக இராச்சியத்தின் உரிமையாளர் மாத்திரமன்றி, வீரசுந்தர பண்டாரனின் மகனான கொனப்பு பண்டாரனும் போர்த்துக்கேயரிடம் பாதுகாப்பு பெற்று வந்தான். இச் சந்தர்ப்பத்தில் போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றி தொன் பிலிப்பினைக் (யம சிங்கபண்டாரனை) அரசனாக்குவதற்கு கொனப்பு பண்டாரவின் தலைமையில் (தொன் யுவான்) ஒரு படையை மலையகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

தொன் பிலிப்பை அரசனாக்கும் பணியை படைகள் நிறைவேற்றின. போர்த்துக்கேயரால் அனுப்பி வைக்கப்பட்ட படையைத் தனது இராச்சியத்திலிருந்து துரத்துவதற்கு இராசசிங்க மன்னன் முயற்சித்தான். ஆயினும் மலையக மக்களின் உதவியைப் பெற்றுக்கொண்ட கொனப்பு பண்டாரனின் படைகள் "கனேதன்னை" என்னும் இடத்தில் இராசசிங்க மன்னனது படைகளை தோல்வியடையச் செய்தன.

தொன் பிலிப்பு அரசனாகி சிறிய காலத்துக்குள் கொனப்பு பண்டார அவனைத் தந்திர மாகக் கொன்று விட்டு விமல தர்ம சூரிய என்ற பெயருடன் மலையக இராச்சியத்தின் அர சனானான்.

### முதலாம் விமலதர்ம சூரியன்

முதலாம் விமல தர்ம சூரியன் (1592 - 1604) நீண்ட காலமாக போர்த்துக்கேயரின் அர வணைப்பில் வளர்ந்தமையால் போர்த்துக்கேய யுத்த முறைகளையும் நனகு அறிந்து இருந்தான். இந்த யுத்த அனுபவத்தின் மூலம் போர்த்துக்கேயருக்கு எதிராக நின்று யுத்தம் செய்து மலையக இராச்சியத்தை நிலை பெறச் செய்தான். மலையக இராச்சியத்தைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியில் முடிந்தாலும் போர்த்துக்கேயர் முயற்சியை முற்றாக கைவிடவில்லை.

> தொன் யுவான் வீரம் மிக்க சேனாதிபதியாவான். இவன் திறமை மிக்கவனாகக் காணப் பட்டான். இதனாலேயே இவனுடைய பரிபாலன அமைப்பு சிறப்புற்று மேலோங்கியது. குற்றவாளியை கண்டவிடத்து உரிய தண்டனை வழங்கக்கூடியவனாகக் காணப் பட்டான். அரச நிருவாகியாக இவன் விளங்கியதுடன் அயல் அரசர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அநியாயத்தைத் தடுத்து நட்பை வளர்த்தது. எனினும் இலங்கை முழுவதும் பரவச் செய்த இவ் அதிகாரத்தை பொறுக்க முடியாத போர்த்துக்கேயர் தொன்யுவானின் எதிரிகளாகக் காணப்பட்டனர்.

கி.பி. 1594 ல் பேருலொ பேஸ்தசூஸா என்பவன் குசுமாசன தேவியையும் சேர்த்துக்கொண்டு ஒரு பெரும் படையுடன் மலையகத்துக்குச் சென்றான். செங்கடகல என்னுமிடத்துக்கு வந்த போர்த்துக்கேயர் குசுமாசன தேவியை மலைநாட்டு அரசியாக நியமித்தனர். போர்த்துக்கேயர் குசுமாசன தேவியின் பேரில் அதிகாரத்தை உறுதிப் படுத்திக் கொள்ள எடுத்த முயற்சியை விளங்கிக் கொண்ட சிங்கள மக்கள் விமலதர்ம சூரியன பக்கம் சார்ந்து கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் சூசா பின்வாங்கத் தொடங்கினான். அச்சமயத்தில விமலதர்ம சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரைத் தாக்கத் தொடங்கினான். போர்த்துக்கேயருக்கும் மலையக மக்களுக்கும் இடையில் தந்துரே என்னும் இடத்தில் நடைபெற்ற இந்தப் போர் இலங்கை வரலாற்றில் இது வரை நடைபெற்ற போர்களில் அதிமுக்கிய போராக விளங்கியது. இதில் லோ போந்த சூசாவினது படைகள் தோல்வியடைந்தன.

சிங்களப் படையினால் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்ததைக் கபித்தான் ருபேருவின் "சீலான் திவயினே சேதி ஹாஸிக கேதவாசனய" என்னும் கிரந்தத்தில் பின்வருமாறு விளக்கம் கொடுக்கப்படுவதை கவனிக்கவும்.

அம்பு, வில் துப்பாக்கி ஏந்திய வீரர்கள் ஒளித்திருந்து வெளியே இருந்த ஆயுதப் படையினை தொடர்ச்சியாக தாக்கத் தொடங்கினர். எங்கள் படை "பலன" என்னும் இடத்துக்கு வருவ தற்கு முயற்சித்த போதிலும் பெரும்படையொன்று பாதையை மறைத்து இருப்பதைக் காண முடிந்தது. இவ்வாறாக சேனாதிபதி கபித்தான் நாயகமும் அவரது மருமக்கள் இருவரும் உட்பட எமது அனைத்து மக்களும் மிகவும் அபகீர்த்தி மிக்க மரணத்துக்கு ஆளாயினர்.

தந்துரே போரில் விமலதர்ம சூரிய மன்னன் தனது ஆதிக்கத்தை சுலபமாக உறுதிப்படுத்திக் கொண்டான். சட்டப்படி மலையக இராச்சியத்தின் உரிமையைக் கொண்டிருந்த குசுமாசனா தேவியை தனது இராணியாக்கிக் கொண்ட விமலதர்ம சூரியன் சட்டத்துக்கு அமைந்த முறை யில் மலையக மன்னனான். இவ்வகையில் தந்துரைப் போர் மலையக வரலாற்றில் மாத்திர மன்றி இலங்கையில் நடைபெற்ற அதியுறுதியான போர்களில் ஒன்றாகும்.

முதலாம் விமலதர்ம சூரியன் தெல்கம விகாரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்ததாதுவை மீண்டும் கண்டிக்கு எடுத்துச் சென்றதுடன், அங்கு தலதா மாளிகையை கட்டு வித்து அங்கேயே அதனை வைப்பித்தான். அரச உரிமையின் சின்னமாக கருதப்பட்ட தந்த தாதுவின் உரிமை கிடைத்தமை விமலதர்ம சூரிய மன்னனின் ஆட்சி மேலும் உறுதிப்படுத் தப்பட்டது. அவனின் ஆதிக்கம் ஓங்குவதற்கும் காரணமாக அமைந்தது எனலாம்.

மலையகத்தின் இக்காலப் பகுதியில் நிலவிய பிரச்சனைகளும், கிளர்ச்சிகளும் சமய முன்னேற்றத்துக்கு தடையாக இருந்தது. கல்வி தொடர்பாக ஒரு சீர்திருத்தத்தை ஏற்படுத்திய முதல் மன்னனாக விமலதர்ம சூரிய அரசன் விளங்கினான். பர்மா (மியன்மார்) நாட்டிலிருந்து புத்த பிக்குகள் வரவழைக்கப்பட்டு, இவர்களைக் கொண்டு மீண்டும் உபசம்பதா ஏற்படுத் தப்பட்டது. இலங்கா திலக, கடலாதெனியா விகாரைகள் அமைக்கவும் இம் மன்னன் கார ணமாக இருந்தான்.

முதலாம் விமலதர்ம சூரியன் மலையகத்தில் அரசனானதும் போர்த்துக்கேயரின் எதிர் பார்ப்புகள் தவிடுபொடியாயிற்று. தமது அபிலாசைகள் நிறைவேறாமையைக் கண்ட போர்த்துக் கேயர் விமல தர்ம சூரியனைப் பழிவாங்கும் நோக்கில் பல தடவைகள் அவனுக்கு எதிராகப் படையெடுத்தனர். அவ் ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் படுதோல்வியடையச் செய்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டான்.

கி.பி. 1602 இல் மலையக இராச்சியத்துக்கு எதிரா மேற்கொண்ட படையெடுப்பில் கபித்தான் ஜெனரலாக "தொன் ஜெரனிமோத அஸவேது" தலைமை தாங்கினான. "பலன" என்ற இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை சென்ற இந்த ஆக்கிரமிப்பு படையை விமலதர்ம சூரியன் துரத்தியடித்து தனது இராச்சி யத்தைப் பாதுகாத்துக் கொண்டான்.

ஒல்லாந்த தூதுக் குழுவினர் இருவர் மலையகத்துக்கு மன்னனைச் சந்திப்பதற்காக வந்தார்கள். இதனால் விமலதர்ம சூரியன் அவனுடைய பிற்காலத்தில் கீழைத்தேசத்துக்கு வருகை தந்துள்ள இன்னொரு ஐரோப்பிய இனத்தவரான ஒல்லாந்தருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயன்றான் எனத் தோன்றுகின்றது. விமலதர்ம சூரியன் 1604 இல் மரணமடைந்தான். அப்போது மலையக இராச்சியம் இலங்கையில் மிகவும் பலம் வாய்ந்த ஓர் இராச்சியமாக விளங்கியது.



உரு 3.16 தலதா மாளிகை

விமல தர்ம சூரிய மன்னன் இறந்த பின்னர் அவனுடைய சகோதர முறையிலான இளவர சன் செனரத் என்பவன் அரசனாவான். இவன் விமல தர்மசூரியனின் பட்டத்து இராணியையே தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டான். செனரத் மன்னன் ஆட்சிக் காலத்தின் முற்பகுதி குழப்பம் நிறைந்ததாகக் காணப்பட்டது. ஆயினும் பிற்பகுதியில் அமைதி காணப் பட்டதுடன் இராச்சியமும் வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செனரத் மன்னனின் ஆட்சியில் காணப்பட்ட வளர்ச்சி**

* ஏழு கோறளை
* நான்கு கோறளை
* மூன்று கோறளை
* சபரகமுவா ·
* திருகோணமலைத் துறைமுகத்தையண்டிய எல்லா உட்பிரதேசங்களும்.
* கிழக்கு தென் கிழக்குத் திசைகளில் வன்னி அரசனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசங்கள்.

செனரத் மன்னனின் ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேயர் மேற்கொண்டு வந்த நாச வேலைகளினால் கண்டி இராச்சியத்தின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இவர்கள் கண்டி இராச்சியத்திற்கு சொந்தமான பல்வேறு கிராமப்பகுதிகளுக்குள் வருடத்தில் ஒரு தடவையாவது அத்துமீறிப் பிரவேசித்து எல்லாப் புறச் சொத்துக்களையும் நாசம் செய்து வருவது அவர்களது வழக்கமாகும்.

செனரத் மன்னனுடைய இறுதிக் காலத்தில் அதாவது 1629 இல் அவன் தனது இராச்சியத்தை மூன்றாகப் பிரித்து விஜயபால, குமாரசிங்க, இராசசிங்க என்னும் தனது மூன்று புதல்வர்களுக்கும் ஒப்படைத்தான். 1635 இல் செனரத் மன்னன் இறந்தான். அவன் பின் இரண்டாம் இராசசிங்க மன்னன் மலையக இராச்சியத்தின் மன்னனான். இவன் 1630 இல் போர்த்துக்கேயருடன் வெல்லவாயா "றன்தெனிவெல" என்னும் இடத்தில் நடந்த போரில் போர்த்துக்கேயரைப் படு தோல்வியடையச் செய்தமை அவனின் திறமையை எடுத்துக் காட்டுகின்றது. ஊவா மாகாணத்துக்கு பொறுப்பாக இருக்கையில் அஸ்தான குமாரருக்கும், கொண்ஸ்தயின் டிசூசா என்பவனுக்கும் இடையில் இப்போர் நடைபெற்றது.

கி.பி. 1635 இல் இரண்டாம் இராசசிங்கன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுடன் ஒல்லாந்தருக்கும் மலையகத்திற்கும் இடையில் தொடர்புகள் ஏற்படலாயின. "தியோகு த மெல்லோ" என்பவனின் தலைமையின் கீழ் 1638 இல் பெரியதொரு படையெடுப்பினை போர்த்துக்கேயர் மேற்கொண்டனர். இப் படையெடுப்பின் போது போர்த்துக்கேயரின் படைகள் தோல்வி அடைந்தன. இரண்டாம் இராசசிங்கனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் கன்னொருவா என்ற இடத்தில் இப்போர் நடைபெற்றது. இப்போர் கன்னொருவைப்போர் எனக் குறிப்பிடப்படுகிறது.

**ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்துடனான தொடர்பு**

கி.பி. 1602 இல் ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்த போதிலும் மலையகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. இத் தொடர்பை 1638 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கீசர்களைப் போலவே ஒல்லாந்தரும் இலங்கையில் வெளிநாட்டு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்திப்பை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. போர்த்துக்கேயரை இலங்கையில் இருந்து நாடு கடத்துவது இரண்டாம் இராசசிங்கனின் நோக்கமாக இருந்தது. இதற்காக ஐரோப்பாவிலேயே கடற்படைச் சக்தி வாய்ந்தவர்களான ஒல்லாந்தரது உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்பட்டது. இதனடிப்படையில் 1638 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் மலையக இராச்சியத்தின் தொடர்பு ஒல்லாந்தருக்கு ஏற்பட்டது.



உரு 3.17 அசவிடோ

**ஒல்லாந்தரின் பிரதேச எல்லைகள் 1658 – 1670**


போர்த்துக்கேயர்களை இலங்கையிலிருந்து நாடுகடத்துவது தொடர்பான ஒப்பந்தம் இராசசிங்க மன்னனுக்கும், ஒல்லாந்தருக்கும் இடையில் இடம் பெற்றது. எனினும் அதில் முரண் பாடுகள் இருந்தன. இந்த ஒப்பந்தம் ஒல்லாந்த மொழியிலே எழுதப்பட்டிருந்தது. அதன் பிரதிகள் இரண்டு காணப்பட்டன. போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் கைப்பற்றும் கோட்டைகளை மன்னனின் விருப்பத்துடன் மாத்திரமே ஒல்லாந்தர் வைத்திருக்கலாம் என மன்னனிடம் இருந்த ஒப்பந்தப் பிரதியில் கூறப்பட்டிருந் தது. ஆயினும் "மன்னனுடைய விருப்பத்துடன் மாத்திரமே" என்ற வாசகம் ஒல்லாந்தருடைய பிரதியில் இருக்கவில்லை. இது ஒல்லாந்தர் கையாண்ட ஒரு தந்திரம் என அரசன் எண்ணினான்.

**1638 ஒப்பந்தம்**

* போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்துவதற்கு இரண்டாம் இராசசிங்க மன்னனுக்கு உதவி செய்ய வேண்டும்.
* யுத்த செலவினங்களை அரசன் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். செலவினங்களை அரசன் கொடுத்த பின்பு அரசனுக்கு மீண்டும் கோட்டையை ஒப்படைத்தல் வேண்டும்.
* ஒல்லாந்தர்களுக்கு துறைமுகங்களையும், வர்த்தக தனியுரிமைகளையும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 3.18 ஒல்லாந்தரது பிரதேச எல்லைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் பிடித்துக்கொண்ட கோட்டைகளை மன்னரிடம் விசாரிக்காமல் தாமே வைத்துக் கொண்டனர். அரசன் இச் செயலை எதிர்த்தான். கி.பி. 1639 இல் திருகோணமலையையும், மட்டக்களப்பையும் ஒல்லாந்தர் கைப்பற்றி ஒப்பந்தத்தின்படி மலையக மன்னனிடம் இக்கோட்டை களை ஒப்படைத்தனர். ஆயின் 1640 இல் நீர்கொழும்பு, காலி ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் அவற்றை மலையக மன்னனிடம் ஒப்படைக்காது தம்மிடமே வைத்திருந் தனர். கோட்டைகளைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட செலவினங்களை மன்னர் செலுத்தவில்லை என அதற்கு காரணம் கூறினர். மலையக மன்னனிடம் இக் கோட்டைகளை ஒப்படைக்காமைக்குரிய உண்மையான காரணம், அவை கறுவா உற்பத்தி அதிகளவில் செய்யப்படுமிடங்களில் கோட்டைகள் அமைந்திருந்தன என்பதேயாகும்.

கி.பி. 1640 இல் ஐரோப்பாவில் ஒல்லாந்தருக்கும், போர்த்துக்கேயருக்கும் இடையில் உண்டான நட்புறவு காரணமாக 1642 இற்கும் 1650 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையிலும் போர்த்துக்கேயரை ஒல்லாந்தர் எதிர்க்காது இருந்தனர். எனினும் இந்த ஒற்றுமை நெடுங்காலமாக இருக்கவில்லை. 1652 இல் இவர்களுக்கிடையில் மீண்டும் போர்கள் இடம்பெற்றன. இப்போர்களின் போது களுத்துறை, அங்குறுவாதோட்ட ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகளைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1656 இல் கொழும்பு கோட்டையையும், மன்னர், யாழ்ப்பாணக் கோட்டைகளையும் ஒல்லாந்தர் கைப்பற்றினர். 1505 இல் இருந்து இலங்கையின் கடற்கரையோரப் பிரதேசங்கள் பலவற்றிலும் நிலைகொண்டிருந்த போர்த்துக்கேயரின் ஆதிக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திலிருந்த கோட்டைகள் அதன் பின்னர் ஒல்லாந்தின் நிர்வாகத்தின் கீழ் வந்தன.

1658 ஆம் ஆண்டு முதல் ஒல்லாந்தருக்கும் மலையக இராச்சியத்துக்குமான தொடர்பு அல்லது உறவு மிகச் சிக்கலானதாக இருந்தது. ஒல்லாந்தர் சில காலங்களில் ஆக்கிரமிப்பாளராகவும், சில காலங்களில் நண்பர்களாகவும் விளங்கினார்கள்.

1659 இன் பின்னர் போர்த்துக்கேயர் வசமிருந்த பல பிரதேசங்களை மீண்டும் மலைநாட்டுடன் தொடர்புபடுத்திக் கொள்வதில் இரண்டாம் இராசசிங்கன் வெற்றி பெற்றான். வன்ஹுரன்ஸ் என்னும் ஆள்பதியுடன் யுத்தப் போக்கினைக் கடைப்பிடித்து கண்டி இராச்சியத்தின் நிலைமையை அதிக பலம்மிக்கதாக கொண்டுவரக்கூடிய திறமை மிக்கவனாக இரண்டாம் இராசசிங்கன் விளங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 3.19 இரண்டாம் இராசசிங்கன்

தீவின் பிரதான அரசனாக இருக்கும் எதிர்பார்ப்பு அரசனிடம் இருந்ததுடன், இதற்காக " சிறி சிங்கலாதீஸ்வர" என்னும் புகழ்மாலைக் காவியத்தை இவன் பயன்படுத்தியுள்ளான். ஒல்லாந்தருக்கும் இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் ஆரம்பத்திலிருந்த தொடர்புகள் பிற் காலத்தில் துண்டிக்கப்பட்டது.

போர்த்துக்கீசர்களை இலங்கையில் இருந்து விரட்டியடிப்பதற்காக ஒல்லாந்தரை தன் பக்கம் சேர்ந்து கொண்டமை பிற்காலத்தில் அச்சமுடைய பெறுபேற்றையே தரக்கூடியதாக இருந்தது. இராஜசிங்க மன்னனின் செயல் "இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்கியது போன்றது" என்ற பிரபல்ய பழமொழியை ஒத்த செயலாகும். இரண்டாம் இராஜசிங்கன் அந்நியர்களி டமிருந்து இலங்கையை மீட்டுக் கொள்வதற்காகக் கடைசி வரை போர் செய்த மன்னனாவான்.

## இரண்டாம் விமலதர்ம சூரியன்

இரண்டாம் இராசசிங்க மன்னனின் பின்னர் அவனின் மகன் இரண்டாம் விமலதர்ம சூரியன் (1687-1707) அரசனானான். இவன் அரசனானதும் இவனது ஆட்சிக்காலத்தில் கண்டி மக்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் அமைதியான சூழ்நிலை காணப்பட்டதாகக் குறிக் கப்படுகின்றது. அரசனின் சமய, அரசியல், பொருளாதார நிலை தொடர்பான குறிப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளது. அவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

* மிகவும் அமைதியான ஆட்சியாளராக இருந்தமை.
* ஒல்லாந்தருடன் நட்புடன் செயற்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சீனாவில் இருந்து பிக்குகளை வரவழைத்து "உபசம்பதாவை" மீண்டும் ஏற்படுத்தல்
* தலதா மாளிகையை மூன்று மாடிகள் கொண்டதாக அமைத்து மேலும் முன்னேற்றமடையச் செய்தல்.

இராஜசிங்க மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தர் கைப்பற்றிய கண்டி இராச்சியத்துக்குரிய துறைமுகங்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு மலையக மன்னன் தொடர்ந்து கேட்டு வந்தான். எனினும் ஒல்லாந்தர் அதனை மறுத்தனர். எனவே இரு பகுதிகளின் நோக்கங்களுக்கிடையே ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்ள முடியாமற் போனதால் உறுதியான நல்லுறவை தொடர்ந்து பேணுவது முடியாத காரியமாயிற்று.

**சிறீ வீர பராக்கிரமபாகு நரேந்தி சிங்கன்**

இரண்டாம் விமலதர்ம சூரியனுக்கு பின்னர் அவனின் மகன் சிறி வீரபராக்கிரமபாகு நரேந்திர சிங்க 1707 இல் அரசனானான். இவன் திறமைமிக்க அரசனாகவோ, அமைதியை நிலை நாட்டக் கூடியவனாகவோ விளங்கவில்லை. அவனன் அவசரக் கோபக்காரன் எனவும், திறமையற்ற ஒரு மன்னனுமாவான் என வரலாறு கூறியது. இச் சந்தர்ப்பத்தில் பிரதானிகள் தமது அதிகாரத்தை மேம்படுத்திக் கொண்டனர். விவசாயம், கல்வி, சமயம் தொடர்பாக போதிய கவனம் செலுத்தவில்லை.

இக்காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகத்தை மேற்கொள்ளும் பொருட்டு கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்களைத் திறந்து விடுமாறு மலைநாட்டுப் பிரதானிகள் கேட்டிருந்தனர். ஆனால் ஒல்லாந்தர் அக்கோரிக்கைகளைப் பற்றிப் பாராமுகமாக இருந்தனர். எனவே ஒல்லாந்தரது யானைத்தந்த வியாபாரத்துக்கு ஊறு செய்யும் நடவடிக்கைகளை மலையகத்து மக்கள் மேற்கொண்டனர். அதாவது கடவைகளை மூடி ஒல்லாந்தர் கண்டிய பிரதேசங்களூடாக யானைகளைக் கொண்டு செ்வதை தடை செய்தனர்.

இதே காலப்பகுதியில் கரையோரப் பிரதேச மக்கள் ஒல்லாந்தரினால் அறவிடப்பட்ட அதிக வரி காரணமாக ஒல்லாந்தருக்கு எதிராக கிளர்ச்சிகள் செய்யத் தொடங்கினர். இக் கிளர்ச்சிகளுக்குள் கறுவா உரிக்கும் தொழிலாளர்கள் 1757 இல் மேற்கொண்ட கிளர்ச்சி மிக முக்கியமானதாகும். இக் கலவரங்களுக்கு கண்டி அரசனது உதவி வழங்கப்பட்டதாக ஒல்லாந்தர் சந்தேகித்தனர்.

மலைநாட்டு மன்னனுடைய இராச்சியத்துக்கூடாக யானைத் தந்தம் கொண்டு செல்வதற்கு தடை விதித்தான். பாக்கு, மிளகு போன்ற வாசனைத் திரவியங்களைப் போல் மலையகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களையும் மக்கள் ஒல்லாந்தருக்கு விற்கக் கூடாது தடை விதித்தான்.

சிறி வீரபராக்கிரம நரேந்திரன் சிங்கள இராசவம்சத்து அரசனாக விளங்கினான் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இரண்டாம் இராஜசிங்க மன்னனுடைய காலத்திலிருந்து தென் இந்தியாவின் மயுராபுரத்திலிருந்து நாயக்கவம்ச அரச குடும்ப இளவரசிகளை வரவழைத்து விவாகம் செய்து கொள்ளும் வழக்கம் அரசர்களிடம் இருந்து வந்தது. நரேந்திரசிங்க மன்னனின் தாயும், மனைவியும் மாத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி தந்தையின் தாயும் மயுராபுரத்து பெண்களாவர். இவர்களுடன் வந்த குடும்பத்தவர்களை அரசன் அரச சபையில் உயர் பதவிகளில் நியமித்தான். பிற்காலத்தில் ஆட்சியாளராக வருவதற்கு இச் செயல்கள் காரணமாக அமைந்தது. இந்த நிலை சிங்கள உயர் பிரதானிகளின் கோபத்தை ஏற்படுத்த காரணமாயிற்று.

### சிறீ விஜய இராசசிங்க மன்னன் (1739 - 1743)

கி.பி. 1739 இல் நரேந்திர சிங்க மன்னன் இறந்தான். அவன் பின் அரச பதவியை ஏற்பதற்கு இவனுக்கு ஒரு வாரிசு இருக்கவில்லை. நாயக்க குலத்து அரச உரிமை வழக்கத்தின்படி மன்னனுடைய மகாராணியின் இளைய சகோதரன் சிறி விஜய இராசசிங்க என்ற பெயருடன் அரசனானான்.

அந்நிய நாட்டவரான இவன் அரசனானதும் கண்டி இராச்சியத்தில் புதிய அரச பரம்பரை ஒன்று ஆரம்பமாயிற்று. அதுநாயக்க அரச வம்சம் எனப்பட்டது. நாயக்க வம்சத்தவர்கள் ஆட்சி செய்த காலத்திலேயே சிங்கள பிரதானிகளின் அதிகாரம் மேன்மேலும் அதிகரித்தது என்பது தெட்டத் தெளிவான ஒரு விடயமாகும். சிறி விஜய இராசசிங்க மன்னனும் நாயக்க வம்சத்தைச் சார்ந்த இளவரசி ஒருத்தியையே திருமணம் செய்து கொண்டான்.

இவ்வாறு புதிய அரச குலத்தவர்களான நாயக்கர்கள் அந்நிய குலத்தவர்களாக இருந்த போதும் சிங்கள அரச பரம்பரையினருடன் ஏற்படுத்திக் கொண்ட இரத்த உறவுகள் மூலம் அவர்கள் சிங்களப் பெயர்களை வைத்து, புத்த சமயத்தை தழுவி நாட்டின் பழக்க வழக்கங்களை ஏற்று அவற்றுக்கேற்ப ஆட்சி செய்தனர்.

ஆயினும் ஒரு அந்நிய அரச பரம்பரையினர் கண்டியில் ஆட்சி உரிமையைப் பெற்றமை, இந்த நாட்டின் இறுதித் தேசிய இராச்சியமான மலையக இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பல வழிகளில் காரணமாக அமைந்தது என்பது பின்வரும் விடயங்களிலிருந்து தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

* அரச சபைப் பிரதானிகள் அதிகாரம் அதிகரித்தமை
* நாயக்க வம்சப் பிரதானிகளுக்கும், சிங்களப் பிரதானிகளுக்கும் இடையில் அரச சபையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டமை.
* சிங்களப் பிரதானிகளுக்கும் அரசனுக்கும் இடையில் மனத்தாபங்கள் ஏற்பட்டமை
* மலையக இராச்சியத்தின் சுதந்திரத்துக்குப் பெரிதும் கைகொடுத்த மக்களது ஆதரவை மன்னன் இழந்தமை.

நாயக்க வம்சத்தினர்கள் மலையக இராச்சியத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றமை, ஒல்லாந்தருக்கும். மலையக மக்களுக்கும் இடையில் நீண்டகாலம் இருந்த தொடர்பு குறைவதற்கு காரணமாயிற்று. 1739 முதல் இது வரை காணப்பட்ட தொடர்புக்கும் பக்கம் ஏற்பட்டது. ஒல்லாந்தரின் கடும் எதிர்ப்புகளை பெற்றிருந்த மன்னன் சிறி விஜய இராச சிங்கன் 1747 இல் இறந்தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்திஸ்ரீ இராசசிங்க மன்னன் (1742 – 1782)

கி.பி. 1747 இல் சிறிவிஜய இராசசிங்கமன்னன் இறந்ததும் அவனுடைய மகாராணியின் சகோதரனான கீர்த்தி சிறி இராசசிங்கன் அரசனானான். (1747–1782) இவ் அரசன் நாயக்க அரசர்களில் சிறப்பான ஓர் இடத்தை பெறுகிறான். இந்த மன்னன் காலத்தில் மலையகத்தின் மீது ஒல்லாந்தர் படையெடுப்பு ஒன்று இடம் பெற்றது. அதில் 'வான் எக்' என்னும் தேசாதிபதி. தலைமை தாங்கினான். இந்த ஆக்கிரமிப்பு 1765 இல் இடம் பெற்றது.

இந்த ஆக்கிரமிப்பு தனக்கு பாதகமாக அமையும் என எண்ணிய மன்னன் சமாதானம் செய்து கொள்ள விருப்பத்தை தெரிவித்தான். மலையக மகுடத்தைத் தம்மிடம் ஒப்படைத்து விட்டு வருடம் தோறும் கப்பம் செலுத்தும் ஒரு சிற்றரசன் நிலமையை மன்னன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஒல்லாந்தர் விதித்த முக்கிய நிபந்தைனயாகும். நிலமை தனக்கு பாதகமாக அமைவதைக் கண்ட மன்னன் தலை நகரைக் கைவிட்டு விட்டு ஓடினான். இந்த வேளையில் மலையக இராச்சியத்தினுள் புகுந்து ஒல்லாந்தப் படைகள் தலைநகரைச் சூறையாடி அதற்குத் தீ வைத்தனர். வர்த்தகர்களுக்குப் பல இடையூறுகளை ஏற்படுத்தியதுடன் மலையக இராச்சியம் வெளி நாட்டவர்களுடன் வைத்திருந்த கொடுக்கல் வாங்கல்களையும் குழப்பினர். மேலும் படைகளை அனுப்பி மலையக பயிர்களையும் அழித்து வந்தனர். மலையக இராச்சியத்தின் பொருளாதாரத்தை பலவீனமடையச் செய்து அதனை அடிபணியச் செய்வதே இவர்களுடைய முக்கியமான நோக்கமாகவும் இருந்தது.

இந்தச் சமயத்தில் மலையக இராச்சிய இராச சபையில் தேசிய பிரதானிகளுக்கும் மன்னனுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் காணப்பட்டமையால் தேசாதிபதி 'லிலெம்பலக்' கையாண்ட தந்திரங்களை முறியடிக்க முடியாத நிலையில் இருந்த மன்னர் ஒல்லாந்தருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினான். மன்னனுடைய திக்கற்ற நிலையைக் புரிந்து கொண்ட தேசாதிபதி ஒல்லாந்தருக்கு சாதகமான நிபந்தைனகளுடன் ஓர் ஒப்பந்தத்தை தயாரித்து. மன்னனிடம் அனுப்பி வைத்தான். இவ்வொப்பந்தம் 1766 இல் ஒல்லாந்தருக்கும் மலையக மன்னனுக்கும் இடையில் கைச்சாட்திடப்பட்டது.பின் வருமாறு அவ்வொப்பந்தம் அமைந்தது.

* மாத்தறை, கொழும்பு, காலி யாழ்ப்பாணம் ஆகிய திசாவைகளும், கற்பிட்டிப் பகுதி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் ஒல்லாந்தரின் ஆட்சிக்குக் கீழ் இருத்தல் வேண்டும்.
* கடற்கரையோரப் பிரதேசங்கைள ஒல்லாந்தருக்குப் பரிசாக ஒப்படைத்தல் வேண்டும்.
* கடற்கரைப் பிரதேசங்கைள ஒல்லாந்தருக்கு ஒப்படைப்பதன் மூலம் நஷ்டம் ஏற்படுமாயின் வருடாந்தம் ஒல்லாந்தரினால் ஒரு குறிப்பிட்ட பணம் கொடுத்தல் வேண்டும்.
* கண்டி இராச்சியத்துக்குச் சென்ற கரையோரச் சிங்களவர்கள் மீண்டும் கரையோரப் பிரதேசங்களுக்கு வருவதுடன் கரையோரப்பிரதேசங்களுக்கு சென்ற மலையகச் சிங்களவர்கள் மீண்டும் மலையகத்துக்கு வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி சிறி இராசசிங்கன் இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒரு மன்னன் என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடியதான காரணங்களைக் கீழே காணலாம்.

- இலங்கையில் இக்கால வரையும் பின்னடைவில் தள்ளப்பட்டிருந்த புத்த சமயத்தை மீண்டும் வளர்ச்சியடையச் செய்யும் முகமாக பர்மா, சீயம் ஆகிய நாடுகளிலிருந்து 'உபசம்பதா' பிக்குகளை வரவழைத்து 'உபசம்பதா' சடங்கினை நடத்த வழி செய்தமை.
- வருடாந்தம் தலதா பெரஹரா நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டமை
- கண்டியில் 'லேவல்லே'என்னும் இடத்திலுள்ள கங்கராமை, குண்டசாலை விகாரை, குரு நாகல் ரிதி விகாரை ஆகிய விகாரைகளில் புத்த சிலைகளை அமைக்க ஒழுங்கு மேற்கொண்டமையும் இம் மன்னனுடைய காலத்திலேயாகும் என சூழவம்சம் குறிப்பிடுகின்றது. விஜய சுந்தராமையில் உள்ள யானைத்தந்தத்தினால் செதுக்கப்பட்ட புத்த சிலையை சீயம் நாட்டுக்கு அனுப்பிவிப்பதற்காகச் செய்யப்பட்டது என்பது தெரிய வருகின்றது. இதற்கு புறம்பாக வலிவிட்ட 'சரண சரண சரணங்கர சங்கராஜ' பிக்குவின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட பௌத்த சாசனத்தின் வெற்றிக்கு அரசனால் வழங்கப்பட்ட சேவை மகத்தானது. இதனால் கண்டியிலும், கரையோரப்பகுதிகளிலும் கற்றோர் தொகை அதிகரித்தது. இவ்வாறு கல்வி வளர்ச்சிக்கும், கலாச்சார வளர்ச்சிக்கும் மன்னன் பெரும் சேவை செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பாடுகள்

1. முதலாம் இராசசிங்க மன்னனுக்கும், இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் இடையில் இருந்த ஒற்றுமை வேற்றுமைகளை தேடிப்பெற்று அவர்களின் உயர்தன்மையை எடுத்துக் காட்டும் கடிதம் ஒன்றை வரலாற்றுச் சஞ்சிகைகக்கு எழுதுக.
2. தந்துரைப் போர் என்னும் தலைப்பில் வரலாற்றுச் சங்கக் கூட்டத்தில் வழங்குவதற்கு ஒரு கருத்துரையை தயாரிக்குக
3. கி.பி. 1505 இல் இருந்து போர்த்துக்கேய-கண்டிய இராச்சிய தொடர்பு பற்றியும், 1602 முதல் 1796 வரையிலான ஒல்லாந்தர் கண்டிய இராச்சிய தொடர்பு சம்பந்தமாகவும் எடுத்துக் கூறுக.
4. கீர்த்தி சிறி இராசசிங்கனால் பௌத்த சாசனத்துக்கு ஆற்றப் பெற்ற சேவையைப் பற்றி போற்றும் முகமாக இலக்கிய சங்கத்தில் கருத்துரை ஒன்றை முன் வையுங்கள்.
5. கண்டி இராச்சியமும் நாயக்க மன்னர்களும் என்ற தலைப்பின் கீழ்
   1. அவர்கள் ஆட்சிப் பொறுப்பைக் ஏற்ற விதம்,
   2. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மன்னர்களின் விபரங்கள் என்பவற்றைக் சேகரிக்கவும்.
6. 'கண்டி இராச்சியத்தின் இயற்கையமைப்பே சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு காரணமாகும்' இது பற்றி சமூகக் கல்வி சங்கத்துக்கு உரை நிகழ்த்த ஆயத்தமாகுக.
7. மலையகத்தின் கலாச்சாரம் சம்பந்தமாக ஒரு சிறிய ஆக்கம் அமைக்குக. அதில் மலை நாட்டுச் சித்திரம், சிற்பம், கலைத்திறன் மிக்க பொருட்கள் போன்றவற்றின் படங்களையும் அதில் பதியுங்கள்.
8. 15ஆம் நூற்றாண்டிலிருந்து பிரித்தானியர் ஆட்சிக்காலம் வரை மலையகத்தில் ஆட்சி செய்த மன்னர்களைப் பிழையற்ற ஒழுங்கு முறையில் தருக. இதற்காக கீழே உள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| அரசன் | காலம் |
|---|---|
| 1. சேனாசம்மதவிக்கிரமபாகு | 1469-1604 |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. முதலாம் விமலதர்ம சூரியன் | 1592-1511 |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |
| 11. | |
| 12. கீர்த்தி சிறீ இராசசிங்கன் | 1747 - 1781 |
| 13. | |
| 14. சிறீ விக்கிரம ராசசிங்கன் | 1798 - 1815 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் அத்தியாயம்

# இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி

### பிரித்தானியர் ஆட்சிக்கு வருதல்

இலங்கைக்கு பிரித்தானியர் வருகையும் அவர்களின் ஆக்கிரமிப்புகளும், ஆட்சி முறைகளும், அக்கால அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளையும், இன மத கலாசார நிலைமைகளையும் சுதந்திர போராட்டம் தொடர்பான அறிவையும் இவ் அத்தியாயத்தினை கற்பதன் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கு ஐரோப்பிய அரசுகள் குடியேற்ற நாடுகளை தாபிப்பதிலும், வியாபார நோக்கமாகவும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தொடர்பு கொண்டன. இதன் பெறுபேறாகவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோர் இலங்கைக்கு வந்தனர். பிரித்தானியர் இலங்கையில் கரையோரப் பிரதேசங்களை 1796 இல் ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டனர். 1815 இல் பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். இவ்வாறு அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் வந்த இலங்கை 1948 பெப்பிரவரி 4ஆம் திகதி பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது. பிரித்தானியர் ஆட்சிக்கு கீழ் இருந்த காலம் 133 வருடங்களாகும்.


### பிரித்தானியர் கீழைத்தேசங்களை அடைதல்

17ஆம் நூற்றாண்டளவில் ஒல்லாந்தர் கீழைத்தேச வியாபாரத்தில் ஏகபோக உரிமை பெற்றவர்களாக காணப்பட்டனர். வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் அதிக இலாபம் ஈட்டுவதைக் கண்ட ஆங்கிலேயர் கீழைத்தேச வர்த்தகத்தில் தாம் பங்குகொள்ள முனைந்ததோடு, பிற்காலத்தில் பெருமளவுக்கு தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். 1600 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி இதில் முக்கிய பங்காற்றியது. பிரித்தானியர் கி.பி. 1600 ஆண்டளவில் முதன் முதல் இந்தியாவை அடைந்தனர். 1625 ஆம் ஆண்டில் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள சூரத், திருவாங்கூர் என்னும் இடங்களிலும் கிழக்குக் கரையோரத்தில் மசுலிப் பட்டணத்திலும் வர்த்தக நிலையங்களை நிறுவினர். அதன் பின்னர் 1639 ஆம் ஆண்டில் சென்னையிலும் 1661 ஆம் ஆண்டில் மும்பாயிலும் 1690 ஆம் ஆண்டில் கல்கத்தாவிலும் வர்த்தக நிலையங்களைத் தாபித்தனர்.

கீழைத்தேச வர்த்தகத்தைப் பெற்றுக்கொள்ள பிரித்தானியர் முயன்றபோது இந்தியாவில் பிரான்சியருடன் மோதவேண்டி ஏற்பட்டது. கீழைத்தேச வர்த்தகத்தை நிலைபெறச் செய்ய வேண்டுமாயின் நங்கூரமிட்டு பாதுகாப்பாக கப்பல்களை வைத்திருக்க வேண்டிய துறைமுக வசதி தேவைப்பட்டது. இலங்கையில் உள்ள இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகம் அதற்கேற்றதாக இருந்தமையால் பிரித்தானியர் அதன் மீது கவனம் செலுத்தினர். ஆங்கிலேயரது கவனம் இலங்கை மீது ஏற்பட்டமைக்குரிய காரணங்கள் பல கீழே தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 4.1 இந்தியாவில் பிரித்தானியரது வியாபார நிலையங்கள்

* பருவ காலத்தில் பாதுகாப்பாக கப்பல்களை நங்கூரமிட்டு வைத்திருக்கக் கூடிய வசதி கொண்ட இயற்கைத் துறைமுகமான திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் இருந்தமை.
* கீழைத்தேய மேலைத்தேய வியாபாரத்துக்கான போக்குவரத்துப் பாதையில் மையமாக இலங்கை அமைந்திருந்தமை.
* இந்தியாவில் மேற்குக் கரையோரங்களிலும் கிழக்கு கரையோரங்களிலும் இடம்பெறும் கப்பல் போக்குவரத்தினை நிர்வகிக்கக் கூடிய மத்திய நிலையமாக இலங்கை இருந்தமை.

கி.பி. 1658 இல் இருந்து 1796 ஆம் ஆண்டு வரை இலங்கையின் கரையோரப் பிரதேசங் களை ஒல்லாந்தர்கள் ஆட்சி செய்தனர். மலைநாட்டை ஆட்சி செய்த கீர்த்தி சிறீ இராசசிங்கன் ஒல்லாந்தரின் ஆட்சிப் பலத்தை முறியடிப்பதற்காக ஆங்கிலேயர்களின் உதவியை நாடினான். கி.பி. 1762 இல் ஜோன் பய்பஸ் என்பவன் மலையக மன்னனை சந்திப்பதற்காக இலங்கைக்கு வந்தான். ஆனால் அவ்வருகையால் ஆக்கபூர்வமாக எதனையும் சாதிக்க முடியவில்லை.

இது வரையில் ஐரோப்பாவில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் ஆகியோர்களுக் கிடையில் அரசியல் பிரச்சினைகள் தோன்றியிருந்தன. இதன் பலாபலனாக 1792 இல் பிரெஞ்சுப் படைகள் ஒல்லாந்தை ஆக்கிரமித்தது. அப்போது ஒல்லாந்தை ஆட்சி செய்து கொண்டிருந்த இளவரசன் வில்லியம் பாதுகாப்புக்காக இங்கிலாந்துக்கு ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் சந்தர்ப்பத்திலேயே பிரான்சுக்கும். ஒல்லாந்துக்கும் எதிராக இங்கிலாந்து போர்ப் பிர கடனம் செய்தது. ஒல்லாந்தர் வசம் இருந்த இலங்கை உட்பட கீழைத்தேச பிரதேசங்களை பிரான்சியர் கைப்பற்றிக் கொள்வார்கள் என அஞ்சிய ஆங்கிலேயர் இவற்றைத் தாம் கைப் பற்றிக் கொள்வதற்குரிய தந்திரத்தைக் கையாண்டனர். அதாவது ஒல்லாந்தர் படையினுக்கு ஆணையிடும் அலுவலகரான இளவரசன் "வில்லியம்" என்பவரிடம் இருந்து ஒல்லாந்த பிர தேசங்களில் இருந்த ஆளுநர்களுக்கு ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொண்டனர். இக் கடிதத்தை வாங்கிய போது இளவரசன் வில்லியம் இங்கிலாந்தில் "கியூ" மாளிகையில் இருந்தான். எனவே இக் கடிதம் "கியூ" கடிதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

"கியூ" கடிதத்தின் படி செயற்படுவதற்கு இலங்கையில் இருந்த ஒல்லாந்த தேசாதிபதியான வான் எங்கல்பெக் முதலில் மறுத்தான். எனவே ஆங்கிலப் படை 1795 ஆகஸ்ட் மாதம் ஒல்லாந் தரைத் தாக்கித் திருகோணமலைத் துறைமுகத்தையும், செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிக் கொண்டது. அதன் பின் மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகளையும் 1796 இல் கொழும்புத் துறைமுகத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். ஒல்லாந்தர் வசமிருந்த எல்லாப் பகுதிகளையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் 1796 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆளுநர் "வான் எங்கல் பெக்" என்பவரால் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தால்ஆளப்பட்டு வந்தன. இவ்வாறு கிழக்கிந்தியக் கம்பனியிடம் ஒப்படைப்பதற்குக் காரணம், போருக்கான முழுச் செலவுகளையும் கம்பனியே செலவழித்தமையாகும். இதன் விளைவாக இலங்கையின் கரையோரப் பகுதிகள் பிரித்தானிய மன்னனுடைய பெயரால் கையேற்க்கப்பட்டதாயினும் அவற்றின் நிருவாக நடவடிக்கைகள் யாவும் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினாலேயே கொண்டு நடத்தப்பட்டது. இதற்கு இர ண்டு முக்கிய காரணங்கள் இருந்தன. ஐரோப்பிய யுத்தங்களின் முடிவில் இப்பகுதிகளை மீண்டும் ஒல்லாந்தர்களுக்கு கையளிக்க வேண்டும் என ஆங்கிலேயர் கருதியமையாலும், இப் பகுதிகளை கைப்பற்றுவதில் ஏற்பட்ட செலவை முடிந்தளவில் விரைவாக சேகரித்துக்கொள்ள வேண்டும் என கம்பனி விரும்பியமையுமே அக்காரணங்களாகும்.

இதற்காக முடியுமான அளவுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அபிலாசை காரணமாக பல புதிய வரிகளை இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். இதனால் கரையோர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். ஆங்கில கிழக்கிந்திய கம்பனியால் அறவிடப்பட்ட வரிகள் இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

1. தென்னை வரி.
2. சாராய வரி
3. மீன் வரி
4. உப்பு வரி
5. கள் வரி
6. புகையிலை வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் திரட்டும் பொருட்டு "அமில்தார்" எனப்பட்ட அலுவலர்கள் குழுக்கள் இருந்தனர். பண்டங்கள் மூலம் வரி செலுத்திய இலங்கையருக்குப் பணம் மூலம் வரி செலுத்துவது பெரும் கஷ்டமாக இருந்தது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர். வரி சேகரிக்கும் உரிமையை மேற்குறிப்பிட்ட அமில்தார்கள் ஏல விற்பனைகளில் கொள்வனவு செய்தனர். வரி சேகரிப்பதற்கு இவர்கள் கையாண்ட கொடிய முறைகளினால் நாட்டு மக்கள் பெரிதும் வெறுப்புற்றிருந்தனர்.

இவ்வரி முறை தொடர்பாக புகார்கள் செய்தும் எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. இதனால் விரக்தி அடைந்த மக்கள் கிழக்கிந்திய வர்த்தக கம்பனி நிர்வாகத்துக்கு எதிராக 1797 ஆம் ஆண்டில் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை அடக்குவதற்குப் பல காரணங்கள் குறுக்கீடாக இருந்தன. கிளர்ச்சியை அடக்கிய பின் அதற்குரிய காரணங்களை ஆராய்வதற்கு மூவர் கொண்ட குழுவொன்று கம்பனியால் நியமிக்கப்பட்டது. இது "மியுறன்" குழு எனக் குறிக்கப்படுகின்றது.

மியுறன் குழுவின் சிபார்சுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை.

* வரி ஏல விற்பனை முறை ஒழிக்கப்பட வேண்டும்
* புதிதாக விதிக்கப்பட்ட வரிகள் நீக்கப்பட வேண்டும்.
* வரி சேகரிப்பதற்கு இந்நாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
* காணிச் சட்ட முறை மீண்டும் செயற்படுத்த வேண்டும்.

1798 முதல் 1802 வரை இலங்கையின் கரையோரப் பகுதிகளில நிலவிய ஆட்சி முறை "இரட்டை ஆட்சி முறை" எனப்படும். இக் காலப் பகுதியில் நிர்வாகம் பிரித்தானிய முடியினாலும், வரி சேகரித்தல் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியாலும் மேற்கொள்ளப்பட்டமையாலும் இரட்டை ஆட்சி என வர்ணிக்கப்பட்டது. இரட்டை ஆட்சி முறை தோல்வி கண்டமைக்குரிய காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


* பிரித்தானிய அரசாங்கத்தில் ஆளுநரின் அலுவலர்களுக்கும் வர்த்தக கம்பனியின் அலுவலர்களுக்கும் நல்லுறவும் ஒற்றுமையும் காணப்படாமை.
* அரசாங்க அலுவலர்கள் திறமையற்றவர்களாக காணப்பட்டமை

## ஆளுநர் பிரடரிக் நோர்த்

இரட்டை ஆட்சி முறை தோல்வி கண்டதால் இலங்கையில் பிரித்தானியர் வசமிருந்த பிரதேசங்கள் 1802 ஆம் ஆண்டில் பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக்கப்பட்டது. 1798 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஆளுநராக கடமையாற்றிய பிரடரிக் நோர்த் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஆங்கிலேயரது ஆதிக்கத்தை வலுப்படுத்துவதில் ஈடுபட்டதோடு 1803 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தையும் கைப்பற்ற முயற்சி செய்தான். கண்டி இராச்சியம் அல்லது மலையக இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஆளுநர் பிரடரிக் நோர்த்தை தூண்டிய காரணங்கள் சிலவற்றை கீழே காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உரு. 4.2 பிரடரிக் நோர்த்

* நாட்டினுள்ளே சுதந்திரமான இராச்சியங்கள் இருப்பது பிரித்தானியரது நடவடிக்கைகளைப் பாதிக்கும் என்று கருதியமையால்.
* பிரித்தானியருக்கு தேவையான வர்த்தகப் பொருட்களை மலையகத்தில் இருந்து கொள்வனவு செய்யும் போது கரையோரத்துக்கும் கண்டி இராச்சியத்திற்கும் இடையில் இருந்த கடைவைகளில் வரி செலுத்த வேண்டி இருந்தமை.
* பிரித்தானியரது ஆட்சி மையமான கொழும்புக்கும் துறைமுகமான திருகோணமலைக்கும் இடையில் தரைமார்க்க தொடர்பை வைத்திருப்பதில் மலையக இராச்சியம் தடையாக இருந்தமை.
* அந்நிய ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு கரையோரப் பிரதேசத்தில் படைகளை வைத்திருந்ததோடு மலையக எல்லைகளிலும் பாதுகாப்பு நிலையங்களை வைத்திருப்பது பாதுகாப்புச் செலவினங்களை அதிகரிப்பதாக இருந்தது.

மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக மலையக இராச்சியத்தை கைப்பற்றிக் கொள்வதற்காக படையொன்றை நோர்த் ஆளுநர் அனுப்பி வைத்தார். ஆங்கில படைகளுக்கு முகம் கொடுக்காத மலையக மன்னன் தனது படையுடன் "ஹங்கிராங்கெத்த" பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றான். இந் நிலையில் நிர்வாக மையநகரான கொழும்புடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் பல தடைகள் ஏற்பட்டதோடு, மலையகத்துள் புகுந்த ஆங்கிலப் படையினர் நோய்களினால் பீடிக்கபபட்டனர். உணவைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர் நோக்கினார். அத்துடன் மழைக்காலம் தொடங்கியமையால் ஆங்கிலப் படைகள் பெரும் சிரமத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. இந் நிலையில் மலையக மன்னனின் படைகள் முன்னேறிச் சென்று ஆங்கிலப் படைகளைத் தாக்கியமையால் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. நோர்த் ஆளுநரின் முயற்சி தோல்வி கண்டது.

நோர்த்தின் ஆட்சிக் காலத்தில் கரையோரப் பகுதிகளில் நிர்வாகம் சம்பந்தமாக பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றின் சிலவற்றை இங்கே காணலாம்.

* அரசாங்க நிருவாகக் கருமங்களை செவ்வனே செய்யும் பொருட்டு பல திணைக்களங்கள் அமைக்கப்பட்டன. உதாரணமாக தபால் திணைக்களம், பொது வேலைத் திணைக்களம், அளவைத் திணைக்களம்.
* இராசகாரிய முறை நீக்கப்பட்டமை
* சட்டத்துறையில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டமை.

இவரால் கொண்டுவரப்பட்ட பல நிருவாக சீர்திருத்தங்கள் இலங்கையில் சமூக, பொருளாதார துறைக்கு பொருத்தமில்லாது அமைந்தமையால் நடைமுறைக்குப் பொருந்தாது போயிற்று.

## ஆளுநர் தோமஸ் மெயிற்லன்ட்

ஆளுநர் பிரடரிக் நோர்த் பதவி விலக 1805 இல் தோமஸ் மெயிற்லன்ட் புதிய ஆளுநராக பதவியேற்றார். இவர் 1805 இல் இருந்து 1812 இல் வரை பதவி வகித்தார். இவர் இலங்கையில் அனைத்துப் பகுதிக்கும் சென்று அவர்களைப் பற்றி நன்கு விளங்கிக் கொண்டார். இவர் முதலில் கண்டி இராச்சியத்துடன் அமைதியான முறையில் நல்லுறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முயன்றார். பிரடரிக் நோர்த் காலத்தில் நீக்கப்பட்ட இராசகாரிய முறை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. சிவில் நிர்வாக அதிகாரிகள் சிங்கள, தமிழ் மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் பிரித்தானிய அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது அவரது கருத்தாகும். குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்காக 1810 இல் யூரிமார் முறையை இலங்கைக்கு கொண்டுவந்தார்.


## ஆளுநர் றொபேட் பிறவுன்றிக்

1812 இல் றொபேட் பிறவுண்றிக் ஆளுநராக பதவி ஏற்றார். மலையக இராச்சியத்தை ஒரு சுதந்திர இராச்சியமாகக் வைத்திருக்க வேண்டும் என பிரித்தானிய அரசாங்கம் ஆலோசனை வழங்கியது.

இலங்கையில் வர்த்தகத்தை முன்னேற்றமடையச் செய்வதே பிரித்தானியரது நோக்கமாகும். கண்டிய மன்னனுடன் வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள எடுத்த முயற்சி சாத்தியமாகவில்லை. எனவே யுத்தத்தின் மூலமாவது மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இச் சந்தர்ப்பத்தில் கண்டி இராச்சியம் நிலை குலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4.3 றொபேட் பிறவுண்றிக்

குலைந்து காணப்பட்டது. மலையக மன்னனுடன் பிரதானிகள் கொண்டிருந்த வெறுப்புணர்ச்சியினைக் கண்ட பிறவுண்றிக் பிரதானிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள வழி செய்தான்.

நிலைமை இவ்வாறு இருக்க 1814 ல் கரையோரப் பகுதியிலிருந்து மலையகத்துக்குச் சென்ற வியாபாரக் குழுவினர் ஒற்றர்கள் என ஐயப்பட்டமையால் துன்புறுத்தப்பட்டனர். அது போலவே கண்டிய இராச்சியத்திலிருந்து தப்பி ஓடிய கிளர்ச்சிக் காரர்களைப் பின்தொடர்ந்த கண்டிய படையினர் சில பிரித்தானியருக்கு சொந்தமாக இருந்த நிலங்களில் இருந்த குடியேற் றங்களுக்குத் தீ வைத்தனர். இச் செயல் பிரித்தானிய அதிகாரத்துக்கு ஏற்படுத்திய பங்கம் என பிரித்தானிய அரசு கருதியது. இக் காரணங்களைக் கருத்திற் கொண்டு கண்டிய இராச்சியத்துக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தது. இங்கு கண்டிய பிரதானிகளின் உதவி ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. மலையக இராச்சியத்தின் இறுதி மன்னனாக இருந்த ஸ்ரீ விக் கிரம இராசசிங்கன் தப்பியோட முயற்சி எடுத்த போதும் ஆங்கில சேனையால் பிடிக்கப்பட்டு இறுதியில் சிறையில் அடைக்கப்பட்டான். இவ்வாறு 1815 இல் கண்டிய இராச்சியம் ஆங்கிலே யரால் கைப்பற்றப்பட்டது.

1815 ஆம் ஆண்டு 2ம் திகதி கண்டி கொலு மண்டபத்தில் ஆளுநர் றொபேட் பிரண்றிக்கும் கண்டிப் பிரதானிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் பின் மலையக இராசதானி ஆங்கிலேயருக்கு ஒப்படைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற முயற்சி

1815 இல் மலையக இராச்சியத்தின் ஆட்சி பிரித்தானியர் வசமானது. புதிய ஆட்சி முறை பற்றி மலையக மக்கள் அதிருப்தி கொள்வதற்கு நெடுங்காலம் எடுக்கவில்லை. படிப்படியாக வளர்ந்த குரோதம் 1818 இல் ஒரு கிளர்ச்சியாக மாறியது. வெல்லச என்னும் இடத்தில் ஆரம்பித்த இக்கிளர்ச்சிகளுக்கு பின்னணிகள் பல உள. அவற்றில் சில கீழே காணப்படுகின்றன.

### 1818 இல் ஏற்பட்ட கண்டியக் கிளர்ச்சிக்குக் காரணங்கள்

* பாரம்பரிய நிருவாக முறையில் நிருவாகத்தை மேற்கொள்வதாக ஆங்கிலேயர் 1815 இல் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் விருப்பம் தெரிவித்த போதிலும் அது செயலில் கொண்டு வரப்படாமை.
* கண்டியப் பிரதானிகளுக்குக் கிடைத்துவந்த வருமான மார்க்கம் இல்லாமற் போயினமை யும் உரிமைகள் நீக்கப்பட்டமையும் அவர்களது எதிர்ப்புக்கு காரணமாதல்.
* கண்டியப் பாரம்பரியங்கள், சம்பிரதாயங்கள் பின்பற்றப்படாமையாலும், அவற்றினை தகர்த்தெறிந்தமையாலும் ஏற்பட்ட சமூகக் குரோதங்கள்
* பௌத்த சமயத்திலும் அது சம்பந்தமான வழிபாட்டு முறைகளிலும் குறுக்கிடுவதில்லை எனவும் அவற்றைப் பாதுகாப்பது எனவும் வழங்கப்பட்ட உத்தரவாதத்தை மீறியதால் ஏற்பட்ட மனத்தாக்கங்கள்.

சிங்களவர் அதிகமாக வாழ்ந்த வெல்லஸப் பிரதேசத்தில் முஸ்லீம் முகாந்திரமான ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டமையே போராட்டத்துக்கு உடனடிக் காரணமாயிற்று. வெல்லஸப் பகுதியில் உருவான இக் கிளர்ச்சி மலையகம் முழுவதும் பரவியது. குழப்பத்தை அடக்கு வதற்கு அனுப்பி வைக்கப்பட்ட கெப்பற்றிப் பொல திசாவை குழப்பக்காரர் பக்கம் சார்ந்து குழப் பத்துக்கு தலைமை தாங்கினான். கெப்பற்றிப்பொல மடுகல்லவும் கிளர்ச்சிக்காரருக்கு சார்பாக இருந்தனர். போராட்டத்தை ஆரம்பித்து சிறிது காலத்துக்குள் கிளர்ச்சிக்காரர் புனித தந்த தாதுவை பெற்றுக் கொண்டமை அவர்களுக்கு ஒரு பெரும் அநுகூலமாக இருந்தது.

ஒவ்வொரு பிரதேசத் தலைவர்களும் தம் தம் விருப்பப்படி கிளர்ச்சிகளை மேற்கொண்டமையால் ஒழுங்கமைப்பு பொருத்தமாக அமையவில்லை. போராட்டத்தை அடக்குவதற்கு பிரித்தானியர் மேற்கொண்ட கொடிய முறைகள் மலையகத்து சாதாரண மக்களைப் பெரிதும் பாதித்தது. இவர்களது நிலபுலங்கள் தீ வைத்து நாசம் செய்யப்பட்டன. அத்துடன் புனித தந்ததாதுவை ஆங்கிலேயர் திருப்பிக் கைப்பற்றிக் கொண்டமை அவர்களுக்கு சாதகமான நிலை ஏற்படலாயிற்று.

மொல்லிக்கொட மகா அதிகாரம் ஆங்கிலேயர் பக்கம் சார்ந்திருந்தமை அவர்களுக்கு மேலும் அநுகூலமாக இருந்தது. அவருடைய திசாவனியைச் சேர்ந்த மூன்று கோரளை, நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரளை என்னும் பகுதிகளுக்கூடாகவே கொழும்புக்கும் கண்டிக்கும் இடைப்பட்ட பாதைகள் அமைந்திருந்தது. இதனால் கொழும்பில் இருந்து கண்டிக்கு இராணுவத்தையும், ஆயுதங் களையும் கொண்டு செல்வதில் எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. இது தவிர போராட்டத்தை அடக்குவதற்கு ஆங்கிலேயர் கொடூரமான பல வழிவகைகளைக் கையாண்டனர். கிளர்ச்சித் தலைவர்களான கெப்பற்றிப் பொல, மடுகல்ல ஆகியோர் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு ஆங்கிலேயருக்கு எதிராக மலையகத்தில் ஏற்பட்ட புரட்சி தோல்வி கண்டது.

ஆங்கில ஆட்சிக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போர 1848 இல் இடம்பெற்றது. 1818 ஆம் முதலாவது சுதந்திர போராட்டத்தில் பிரதானிகளுக்கிடையில் பிளவுகள் இருப்பதை உணர்ந்த சாதாரண மக்கள் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கு தயாரானார்கள்.

## 1848 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்கள்

* கிராம சபைகளுக்கு இருந்த அதிகாரங்கள் நீதிமன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததால் சிறிய பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெறுவதற்கு நீதிமன்றங்களுக்கு செல்லவேண்டி இருந்தமை.
* 1840 ஆம் ஆண்டு தரிசு நிலச் சட்டத்தின் கீழ் விளைவிக்கப்படாத அனைத்து நிலங் களையும் அரசு கையேற்றமை.
* பாரம்பரிய நிலங்களை சாதாரண மக்கள் இழந்தமையால் கால் நடை வளர்ப்புக்கு சுதந்திர மான நிலங்கள் இல்லாது போனமை
* கிராமிய மக்களது தொழில் விவசாயமாகையால் வாழ்க்கை முறை சிக்கலானமை.
* ஆங்கில ஆட்சியமைப்பு சாதாரண மக்களுக்கு விருப்பமில்லாது இருந்தமையும், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் அமையாமையும்.
* மதுபானக் கடைகள் பரவியமையால் ஏற்பட்ட தீய விளைவுகள்.

1847 இல் இங்கிலாந்துச் சந்தையில் கோப்பியின் விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் கோப்பி யினால் கிடைத்த வருமானம் குறைந்தது. இதன் பொருட்டு ஆளுநர் டொரிங்டன் புதிய வரி களை கொண்டுவந்தார். கடைத்தெரு வரி, வண்டி வரி, தோணி வரி, தெரு வரி, துறைமுக வரி, துப்பாக்கி வரி என்பன அவற்றில் சிலவாகும். சாதாரண மக்கள் மீது விதிக்கப்பட்ட இவ்வரி களால் எதிர்ப்பு தெரிவித்து கிளர்ச்சிகளை மேற்கொண்டனர். கிளர்ச்சிகளுக்கு முன்னணி வகித்தவர்கள் குடாபொல பிக்கு, கொங்காலேகொட பண்டா, வீர புரன் அப்பு ஆகியோர் களாகும்.

மலையகத்தில் சில பிரதேசங்களில் பரவி இப்போராட்டத்தை அடக்கிய ஆங்கிலேயர் இதற்கு தலைமை தாங்கியவர்களைக் கொலை செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக அரசியல் மாற்றங்கள்

1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதி கண்டி கொலு மண்டபத்தில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இலங்கையின் முழு ஆட்சியும் பிரித்தானியர் வசமாயிற்று. பிரித்தானியர் தமது நாட்டின் அரசியல். நிர்வாக முறைக்கு ஒத்ததான முறை ஒன்றை இங்கு மேற்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. கோல்புறூக் சீர்திருத்தக் குழுவினால் முதலாவது சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

1829 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த வில்லியம் கோல்புரூக்கின் ஆலோசனைகள் பின்வருவன தொடர்பாக அமைந்தது

1. இலங்கையின் நிர்வாகம்
2. வரவும் செலவும்
3. அரச தாபனங்கள்

1830 இல் வந்த சசிள்ஸ் எவ் கமறன் என்பவர் கோல்புறூக்கு உதவியளித்தார். அவர் நீதித் துறை பற்றி அறிக்கை சமர்ப்பித்தார். இறுதியில் இருவரும் சேர்ந்து தாம் எடுத்த ஆலோசனை களை முன் வைத்தார்கள். 1833 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கோல்புறூக் ஆணைக் குழுவின் சிபார்சுகள் பின்வருமாறு


1. இலங்கை ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.
2. சட்டவாக்க கழகம். சட்ட நிருவாகக் கழகம் அமைக்கப்படல்.
3. 16 நிருவாக மாகாணங்கள் 5 மாகாணங்களாக குறைக்கப்படல்.
4. இராசகாரிய முறை ஒழித்தல்
5. பொருளாதாரத் துறையில் அரசாங்கத்துக்கு இருந்த ஏகபோக உரிமைகளை ஒழித்து தனியார் முயற்சிக்கும். சுதந்திரமான வர்த்தகத்துக்கும் இடம் அளித்தல்.
6. கிராம சபைகளுக்கு இருந்த நீதித்துறை அதிகாரங்களைக் குறைத்து நீதிமன்ற முறையை ஏற்படுத்தல்.

இதுவரையும் பிரித்தானியாவில் பரந்திருந்த லிபரல் (தாராளவாதம்) யாப்பு முறையை கோல்புறூக் குழுவினர் நன்கு அறிந்திருந்தமையால் அம் முறை இலங்கைக்கு பொருத்த மில்லையாயினும் அவர்களது சிபார்சுகளில் அதன் செல்வாக்குக் காணப்பட்டது.

இது வரைகாலமும் வெவ்வேறாக ஆட்சி செய்யப்பட்டு வந்த மலையகப் பகுதிகளும். கரை யோரப் பகுதிகளும் ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே முக்கியமான ஆலோசனையாகும். 16 நிர்வாகப் பிரிவுகள் மூலம் நாடு ஆளப்பட்டு வந்தமை அர சாங்கத்துக்கு அதிக செலவை ஏற்படுத்தியது. எனவே இந்த நிருவாகப் பிரிவுகளின் எண்ணிக் கைகளைக் குறைத்து நாடு முழுவதும் ஐந்து மாகாணங்களாக் குறைக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டது. உரு 4.4 ஐந்து மாகாணங்களையும் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 4.4 கோல்புறூக் சிபார்சின்படி மாகாணப் பிரிவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி, கொழும்பு, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை மையமாக கொண்டு ஐந்து மாகாணங்களும் பிரிக்கப்பட்டன. இவ்வாறு மாகாணங்கள் பிரிக்கப்படுவதால் மலையகத்தின் தன்னாதிக்க நிருவாகத்தை ஓரளவுக்கேனும் குறைக்கலாம் என்பது சிலரின் கருத்தாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட போதும் கண்டி இராச்சியத்தைச் சேர்ந்த பகுதிகள் கரை யோரப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டன.

இலங்கையில் இருந்து வந்த இராசகாரிய முறையானது பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் எல்லை மீறிச் செயற்பட்டதையும் அது மக்களுக்குப் பெரும் துன்பம் விளைவித்தமையையும் கண்ட கோல்புறூக் அந்த முறை சுதந்திரமான சமுதாயத்துக்குப் பொருத்தமற்றது என எடுத்துக் காட்டினார். முதல் ஆங்கில ஆள்பதியான நோர்த்தின் காலத்திலும் இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதை எடுத்துக் கூறினார்.

இது வரைகாலமும் பொருளாதாரத் துறையில் அரசாங்கத்துக்கு இருந்து வந்த ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டு தனியார் முயற்சிகளுக்கும், சுதந்திரமான வர்த்தகத்துக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என சிபார்சு செய்தார்கள். இதனால் பொருளாதார கலாசார, சமூக மாற்றங்களுக்கு உட்படலாம் என்பதையும், தோட்டத்துறை வளர்ச்சியடையும் எனவும் விளக்கப்பட்டது.

நீதித் துறைக்கு சிபார்சுகளை வழங்கிய கமறன் மேல் நீதி மன்றம் நாட்டின் நீதித்துறையில் உச்ச தாபனமாக இருக்க வேண்டும் என சிபார்சு செய்தார். இதன் மேற்பார்வையின் கீழ் மாவட்ட நீதி மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் விதந்துரைத்தார். இங்கிலாந்தில காணப்பட்ட நீதி மன்ற முறையைப் போல ஒன்றினை இலங்கையிலும் அமைப்பது அவரது நோக்கமாக அமைந்தது. இதன் மூலமாக கிராம சபைகளுக்கு இருந்த நீதித்துறை அதிகாரங் கள் குறைக்கப்பட்டமையால் பொது மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்றங்களுக்கு செல்ல வேண்டியேற்பட்டது.

சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் என இரு கழகங்கள் அமைக்கப்பட்டமை பிரதிநிதித்துவத்தின் ஆட்சி முறை இலங்கையில் ஆரம்பமானதைக் குறித்து நிற்கிறது. 1833 இல் இலங்கையில் நடைமுறைக்கு வந்த சட்டவாக்க கழகத்தின் அமைப்பினை கீழ் உள்ள ஒழுங்கமைப்பினால் விளங்கிக் கொள்ள முடியயும்.

1833 ஆம் ஆண்டு சட்டவாக்கக் கழகம்

உறுப்பினர்

15

உத்தியோகச் சார்புள்ளோர்கள் — 9

- ஐரோப்பியர்கள் 3
- பறங்கியர்கள் 1

உத்தியோகச் சார்பற்றோர் — 6

- சிங்களவர் 1
- தமிழர் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக அமைக்கப்பட்ட இரு கழகங்களும் ஓரளவுக்கு ஆளுநருக்கு இருந்த வரையறை யற்ற அதிகாரங்களைக் குறைக்க உதவ இல்லை. ஆளநர் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. எனினும் நாட்டு மக்களுக்கு தமது தேவைகளை முன் வைக்கக்கூடியதாக இருந்தது. உத்தியோகச் சார்பற்றோர் பட்டியலில் சிங்களவர். தமிழர் இருந்தமையால் இச் சந்தர்ப்பம் கிடைத்தது. மேற் கூறப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் முழுமையாக நிறைவு செய்யப்படாமையால் பிரச்சினைகள் அதிகரிக்க வாய்ப்புகள் இருந்தன. அவற்றின் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. சிறு பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொள்வதற்கும் அதிக பணம் செலவழிக்க வேண்டியிருந்தமை.
2. கிராமிய விவசாயிகளுக்குத் தொல்லைகள் ஏற்படுத்தியமை
3. கலாச்சார சீரழிவு ஆரம்பமானவை

தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என உத்தியோகச் சார் பற்றோர் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் முன்னணியில் நின்றோர் ஐரோப்பியர்களேயாகும். மேலும் தமது அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதே நோக்கமாக இருந்தது. ஆயினும் 19ம் நூற்றாண்டின் இறுதியில் இந் நாட்டவர்களே இதில் முன்னணியில் நின்றனர். இவர்கள் தங்கள் பிரசாரத்தைக் கொண்டு நடத்தும் பொருட்டு பல சங்கங்களை அமைத்துக் கொண்டனர். இலங்கைத் தேசிய சங்கம், சிலாப சங்கம், யாழ்ப்பாணச் சங்கம் என்பன இவற்றுக்கு உதார ணங்களாகும்.

உத்தியோக சார்பற்றோரின் உறுப்பினர் தொகையை உயர்த்துதல் பிரதேச அடிப்படையில் பிரதிநிதிகளை நியமித்தல், சட்ட நிருபண சபைக்கு மேலும் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியனவே போராட்டத்தை கொண்டு நடாத்தியவர்களின் முக்கிய நோக் கங்களாக இருந்தன.

இவற்றின் பெறுபேறாக 1910 இல் அதாவது ஆளுநர் மக்கலம் காலத்தில் இக்கோரிக்கைகள் சிலவற்றைச் சேர்த்து யாப்பு முறை திருத்தியமைக்கப்பட்டது. இந்த யாப்பு 1912 ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட்டது.

### 1912 ஆம் ஆண்டு சட்டவாக்க கழகம்


| உத்தியோக சார்புள்ளோர் | உத்தியோக சார்பற்றோர் |
|---|---|
| 11 | 10 |
| ஆளுநரால் நியமிக்கப்பட்டோர் | தேர்தல்மூலம் |
| கீழ்நாட்டுச் சிங்களவர் - 2 | ஐரோப்பியர் 2 |
| தமிழர் - 2 | பறங்கியர் - 1 |
| கண்டிச் சிங்களவர் - 1 | கல்வி கற்ற இலங்கையர் - 1 |
| முஸ்லீம் - 1 | |
| 06 | 04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் வரையறுக்கப்பட்ட வாக்குகள் மூலமாக தெரிவு செய்யப்பட்டோர் சட்டவாக்க கழகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனவே இவ் யாப்பு ஒரு வகையில் சிறப்பானது எனக் குறிப்பிடலாம். இங்கு ஆளுநர் பெயரில் ஒரு வேட்பாளர் சேர்த்துக்கொள்ள இவர் இடமளித்துள்ளார்.

இது வரைக்கும் வாக்குரிமைக்கு உரித்துடையோர் முழுச் சனத்தொகையில் 4% ஆகும். படித்தோருக்கும் பணம் படைத்தோருக்கும் மட்டுமே வாக்குரிமையிருந்தது. யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான வேண்டுகோள்கள் அதிகரித்து வந்தன. நிலமை இவ்வாறு இருக்கையில் 1915 ஆம் ஆண்டில் இடம் பெற்ற முஸ்லீம்-சிங்கள கலவரத்தை அடக்குவதற்கு அரசாங்கம் கையாண்ட கடும் நடவடிக்கைகளும் இக் கிளர்ச்சியைத் தீவிரமாக்குவதற்கு ஏதுவாக இருந்தது. இதன் காரணமாக 1921 இல் ஆளுநர் மனிங் ஒரு யாப்பு முறைச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதன்படி சட்டவாக்க கழகத்தில் 37 உறுப்பினர் பிரதிநிதித்துவம் பெற்றனர்.




1912 இல் 21 உறுப்பினர்களைக் கொண்டிருந்த சட்ட்வாக்க கழகம் 1921 இல் 37 ஆக அதிகரித்தது. அதன்படி உத்தியோகத்தர் சார்புடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 14, ஆகவும், உத்தியோகசார்பற்றோர் எண்ணிக்கை 23 ஆகவும் உயர்த்தப்பட்டன. இங்கு வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்டோர் 16 ஆக உயர்ந்தது. அதில் மாகாண அடிப்படையில் 11 பேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்டனர். நிருவாக கழகத்துக்கு இலங்கையர் மூவர் நியமிக்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

1921ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்கள் பற்றி திருப்தி கொள்ளாத இலங்கையர்கள் மிகவும் விரிவான யாப்பு ஒன்று வேண்டும் எனக் கிளர்ச்சிகள் செய்தனர். 1924 ஆண்டு யாப்பு அக்கிளர்ச்சிகளின் விளைவாக ஏற்பட்டதொன்றாகும். இந்த யாப்பின் படி சட்டவாக்க கழகத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக அதிகரிக்கப்பட்டது. உத்தியோக சார்புடையோர் தொகை 12 ஆகவும், உத்தியோக சார்பறறவர் தொகை 37 ஆகவும் உயர்த்தப்பட்டது. வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்டோர் தொகை 29 ஆக அதிகரிக்கப்பட்டது. உறுப்பினர் தொகை அதிகரிக்கப்பட்டாலும் ஆளுநர் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. ஆளுநர் அதிகாரங்களைக் குறைப்பதற்கு இலங்கையர் மேற்கொண்ட நடவடிக்கைகள் கை கூடவில்லை.

அதிகாரமும் பொறுப்பும் வேறாக இருந்தமை 1924 ஆம் ஆண்டு யாப்பு முறையின் முக்கிய குறைபாடாகவே இருந்தது. எனவே மிகவும் பொருத்தமான யாப்பு முறை ஒன்றினைச் சிபார்சு செய்யும் பொருட்டு 1927 இல் டொனமூர் பிரபுவின் தலைமையின் கீழ் ஆணைக் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இக் குழு நேரடியாகச் சென்று பல தாபனங்களையும், தனிப்பட்டவர்களையும் நேரடியாக சந்தித்து விபரங்களைப் பெற்றுக் கொண்டதுடன் பொதுமக்களிடம் இருந்தும் விபரங்களைப் பெற்றுக் கொண்டனர். உரிய ஆதாரங்களுடன் கிடைத்த தகவல்களைக் கொண்டு தயாரிக் கப்பட்ட அறிக்கையைப் பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைத்தனர். இதனை ஏற்றுக் கொண்ட பிரித்தானிய அரசு 1931 இல் இருந்து டொனமூர் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியது. இதனடிப்படையில் 1931 இல் அரசுக் கழகம் அமைக்கப்பட்டது.

## 1931 ஆம் ஆண்டு அரசுக்கழகம்

| அரச அதிகாரிகள் | பிரதேச பிரதிநிதிகள் 50 | ஆளுநரால் சிறுபான்மையருக்காக நியமிக்கப்பட்டவர்கள் |
|---|---|---|
| | 50 | 8 |

1. அரசுச் செயலாளர்
2. சட்டச் செயலாளர்
3. முதல் செயலாளர்

இது வரை இருந்த முறைகளை விட 1931 இல் அரசுக் கழகத்தில் மக்களால் தெரிவு செய் யப்பட்டோருக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. 1910 இல் படித்தோருக்கும் பணம் படைத்தோருக் கும் இருந்த வாக்குரிமை இப்பொழுது சர்வ சன வாக்குரிமையாக மாறியது. டொனமூர் குழுவினரால் கொண்டு வரப்பட்ட ஆலோசனைகள் பின்வருமாறு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை
(21 வயதுக்கு மேற்பட் டோருக்கு)

2. பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கப்பட்டமை

3. அரசுக் கழகம் நிறுவப்பட்டமை

4. நிருவாகக் குழு முறை ஆரம்பிக்கப்பட்டமை

பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் ஆகியோரை அரசுக் கழகத்திலிருந்து நீக்க முடியாது என்றும், அவர்கள் ஆளுநருக்கு மாத்திரம் பொறுப்புடைய உத்தியோகத்தர்களாக செயற்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபார்சு செய்திருக்கின்றது.

அரசுக் கழகத்தில் இருந்த செயலாளர்களை விட ஏனைய 58 உறுப்பினர்களும் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அக் குழுக்கள் பின்வருமாறு

1. விவசாயம்

2. உள்நாட்டு அலுவல்கள்

3. சுகாதாரம்

4. கல்வி

5. உள்ளூராட்சி

6. பொது நிர்வாகம்

7. தொடர்பாடல், கட்டுமானம்.

ஏற்கனவே இருந்த யாப்பு முறைகள் ஆட்சியாளர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் எவ்விதமான தொடர்புகளும் இல்லாது இருந்ததோடு நிருவாக பயிற்சி எதுவும் பிரதிநிதிகளுக்கு கிடைக்காது இருந்த குறைபாட்டை நீக்குவதற்காகவே மேற்குறிப்பிட்ட நிர்வாகக் குழுமுறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. நிர்வாகக் குழு முறையானது யாப்பு முறை சீர்திருத்த வரலாற்றில் முக்கியத்துவமுடையதாகும்.

டொனமூர் யாப்பு முறையிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற முடியவில்லை. ஆளுநரதும், அரச உத்தியோகத்தர்களினதும் அதிகாரங்கள் மக்கள் பிரதிநிதிகளிலும் பார்க்க அதிகமானதாக இருந்தது. இதனால் அதிருப்தியடைந்த மக்கள் பிரதிநிதிகள் திருப்திகரமற்ற ஒரு யாப்பு முறை என்பதை எடுத்துக் காட்டியதோடு, பொருத்தமான ஒரு யாப்பு முறையை உருவாக்குமாறு கிளர்ச்சி செய்தனர். இதனடிப்படையில் 1944 இல் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

சோல்பரி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய 1947 ஆம் ஆண்டில் யாப்பு முறை மாற்றம் ஏற்பட்டது.

சோல்பரி ஆணைக்குழுவின் விதப்புரைக்கு ஏற்ப சட்டங்களை இயற்றுவதற்கு இரண்டு சபைகள் நிறுவப்பட்டன. 1. பிரதிநிதிகள் சபை (95+6 = 101)

2. செனற் சபை (30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகள் சபையில் தேர்தல் தொகுதிவாரியாக தெரிவு செய்யப்பட்ட 95 அங்கத்தவர்களும். ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 உறுப்பினர்களும் அடங்குவர். யாப்பு முறை செயற்படும் பொழுது பிரதிநிதிகள் சபை அதிக அதிகாரமுள்ளதாக அமைந்தது.

பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்படும் சட்ட முறிகள் அங்கும். செனற் சபையிலும் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் கையொப்பம் கிடைத்த பின்பே நடைமுறைக்கு வரும்.

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது தேர்தலின் பின்பு டி.எஸ். சேனாநாயக்கா பிரதம மந்திரியாக பதவியேற்றார். பிரதமர் டி. எஸ். சேனாநாயக்கவுக்கும் பிரித்தானிய அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் விளைவாக **1948 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4ம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது.**

## பொருளாதார மாற்றங்கள்

1815 ஆம் ஆண்டு கண்டி கைப்பற்றப்பட்டதன் பின் இலங்கை முழுவதும் பிரித்தானியரது பூரண கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டுவரப்பட்டது. 1833 ஆம் ஆண்டில் ஆட்சி முறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக கோல்புறூக் ஆணைக்குழுவின் விதப்புரைகளின்படி இராசகாரிய முறையும். அரசுக்கு இருந்த வர்த்தக ஏகபோக உரிமைகளும் நீக்கப்பட்டமையால் சமூக. பொருளாதார மாற்றங்களுக்கு வழிவகுக்கப்பட்டது.

## பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை

1835 ஆம் ஆண்டு இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை கோப்பிப் பயிர்ச் செய்கையுடன் ஆரம்பமாயிற்று. கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

* ஐரோப்பாவில் கோப்பி பிரபல்யமான பானமாக முக்கியத்துவம் பெற்றமை.
* மேற்கு இந்திய தீவுகளில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தமையால் இலங்கைக் கோப்பிக்கு கேள்வி அதிகரித்தமை
* பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக இலங்கை அரசிடம் இருந்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்தது. (1840 ஆம் ஆண்டு தரிசு நிலச் சட்டத்தினால் பயிர்ச் செய்யாத நிலங்கள் அனைத்தும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு மலிவான விலையில் தோட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு விற்கப்பட்டது.)

1868 இல் கோப்பிப் பயிர்களுக்கு ஏற்பட்ட வெளிறல் நோய் காரணமாக கோப்பிப் பயிர்ச் செய்கை அழிவுற்றது. இதன் காரணமாக கோப்பிப் பயிர்ச்செய்கையினால் கிடைத்த வருமானம் குறைந்தது.


கோப்பிச் செய்கையின் அழிவு காரணமாக தோட்டச் சொந்தக்காரர்கள் வேறு பயிர்கள் மீது தமது அவதானத்தைச் செலுத்தினர். இதன் விளைவாக.தேயிலைப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய மலைநாட்டின் பௌதீக நிலைமைகள் இந்தப பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இங்கிலாந்துச் சந்தையில் தேயிலைக்கு அதிக விலை கிடைத்தமையால் தேயிலை உற்பத்தி மூலம் அதிக பண வருவாய் கிடைத்தது. இதன் காரணமாக ஐரோப்பாவில் இருந்த செல்வந்தர்கள் தேயிலைப் பயிர்ச்செய்கையில் முதலிட முன்வந்தனர். கோப்பிப் பயிர்ச் செய்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நல்லதோர் வழிகாட்டியாக அமைந்தது. தேயிலைச் செய்கைக்கு கோப்பிப் பயிர்ச் செய்கை போலன்றி தொழிலாளர்கள் அதிகமாக தேவைப்பட்டனர். உள்நாட்டுத் தொழிலாளர்கள் இந்த தேயிலைச் செய்கையில் ஈடுபட விரும்பவில்லை. இதன் காரணமாக தென் இந்தியாவிலிருந்து தமிழர்கள் தொழிலாளர்களாக வரவழைக்கப்பட்டனர்.





உரு 4.5 தேயிலைப் பயிரின் பரம்பல்


4.5 உருவப படத்தினால் தேயிலைத் தோட்டங்களினதும் தொழிற்சாலைகளினதும் பரம்பல் காட்டப்பட்டுள்ளது.

தேயிலைப் பயிர் செய்கையானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியது. தேயிலைச் செய்கையுடன் போக்குவரத்து வசதிகள், வங்கிகள், காப்புறுதி போன்ற நிதித்துறைத் தாபனங்களும் தோன்றின.

1877 ஆம் ஆண்டளவில் இறப்பர் செய்கை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1890 ஆம் ஆண்டளவில் இறப்பர் பயிர்ச் செய்கை இலங்கையில் ஒரு வர்த்தகப் பயிராக மாறியது. இக் குறிப்பிட்ட காலப் பகுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மோட்டோர் வாகனக் கைத்தொழிலும், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4.6 இறப்பர் பயிரின் பரம்பல்

வளர்ச்சியும் இறப்பரின் கேள்வியை அதிகரிக்கச் செய்தது. இதனால் உள்நாட்டவர்களும், வெளிநாட்டவர்களும் இறப்பர் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இருபதாம் நூற்றாண்டளவில் இறப்பர் பயிர்ச்செய்கையின் வளர்ச்சி தேயிலைக்கு அடுத்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. மலைச் சரிவுகளில் காணப்படும் இறப்பர் பயிர்ச்செய்கையின் பரம்பல் 4.6 என்ற படத்தில் காட்டப்படுகின்றது.


இறப்பர் பயிர்ச்செய்கை முதன் முதல் களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பமானது. பின்னர் காலி, மாத்தறை, கொழும்பு போன்ற மாவட்டங்களில் பரவலாயிற்று. கோப்பிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சியுடன் இலங்கையின் தாழ் பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச்செய்கை ஆரம்பமாயிற்று. 1871 இல் நாட்டின் 37% நிலப் பகுதி தென்னைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு இருந்தது. 1890 ஆம் ஆண்டளவில் இது 41% அதிகரித்தது. தென்னைப பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

## உணவுப் பயிர்கள்

உணவுப் பயிர்களான நெல், ஏனைய தானிய வகைகள், கிழங்கு வகைகள், மரக்கறி வகைகள் என்பன கிராமிய விவசாயத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டன. வெளி நாட்டவர்களின் ஆட்சி காரணமாக பாதிக்கப்பட்ட நீர்ப்பாசன முறைகள் மீண்டும் புனரமைத்து நெற்பயிர்செய்கையை முன்னேற்றுவதற்கு நோர்த், பிறவுண்றிக் ஆகிய ஆளுநர் காலத்தில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 4.7 பிரித்தானியர் காலத்தில் பெருந்தெருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 4.8 பிரித்தானியர் காலத்தில் புகையிரதப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமிய விவசாயத்தை முன்னேற்றுவதற்காக ஹென்றி வோட், ரொபின்சன், கிரகரி போன்ற ஆளுநர்கள் சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும், கால்வாய்களையும் புனரமைத்தனர்.

## போக்குவரத்து

மத்திய மலைநாட்டினை ஏனைய பிரதேசங்களுடன் இணைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த பிரித்தானிய ஆளுநர்கள் போக்குவரத்துத் தொகுதி ஒன்றை அமைக்க நடவடிக்கைகளை எடுத்தனர்.

இலங்கையில் போக்குவரத்துத் தொகுதியை அமைப்பதில் எட்வேட் பார்ண்ஸ் தேசாதிபதியின் முயற்சியானது குறிப்பிடத்தக்கதாகும். கொழும்புக்கும் குருநாகலுக்குமான பாதைகள் இவரது காலத்தில் நிறைவு செய்யப்பட்டன. இப்பாதைகளை அமைப்பதில் மேஜர் ஸ்கின்னர், கப்டன் டோசன் என்பவர்கள் பிரதானமாக நின்று செயற்பட்டனர். பிரதான பொறியியலாளரான கப்டன் டோசனை நினைவு கூரும் முகமாக கடுகன்னாவையில் பிரதான வீதிக்கு அருகாமையில் டோஸன் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

இராசகாரிய முறையைப் பயன்படுத்தியே 1833 இல் போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டன. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமையாலும், பின்பு கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியாலும் போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதற்கு வயது வந்த ஆண்களை மூன்று வாரங்களுக்கு ஈடுபடுத்த சட்டம் கொண்டு வரப்பட்டது.

1850 ஆண்டுக் காலப் பகுதிகளில் போக்குவரத்துப் பாதைகளின் தரத்தை உயர்த்துவதற்காக கற்கள் பரப்பி தார் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பலகையால் அமைக்கப்பட்ட பாலங்கள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக இரும்புப் பாலங்கள் பொருத்தப்பட்டன. 1900 ஆண்டளவில் கற்கள் பொருத்தப்பட்ட தார் பூசப்பட்ட பாதைகள் 3200 மைல்கள் வரை இலங்கையில் காணப்பட்டது.

பெருந்தோட்ட வளர்ச்சியுடன் புகையிரதப் பாதைகளின் அவசியமும் ஏற்பட்டது. ஆரம்பத்தில் மாட்டுவண்டிகள் மூலமே உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால் பெருந்தோட்ட உற்பத்திகள் அதிகரிக்கவே பயன்படுத்தப்பட்ட மாட்டுவண்டிகளின் தொகையும் போதாமல் போனது. அதே போன்று இவ் வண்டிகள் செல்லும் பாதைகளும் அடிக்கடி புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலைமையும் அரசுக்கு அடிக்கடி ஏற்பட்டது. இது அரசுக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது. இக் காலத்தில் இங்கிலாந்தில் புகையிரதச் சேவையானது வளர்ச்சியடைந்த ஒரு சேவையாக காணப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டு இலங்கையிலும் ஒரு புகையிரதப் பாதை ஒன்றினை அமைக்குமாறு இந் நாட்டின் பெருந்தோட்ட சொந்தக்காரர்கள் அரசுக்கு கோரிக்கை ஒன்றினை விடுத்தனர்.

இலங்கையில் புகையிரதப் பாதையை அமைக்க ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டவர் ஆளுநர் ஹென்றி வோர்ட் அவர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் புகையிரதப் பாதையின் வளர்ச்சி

1858 – 1863 கொழும்பு. கண்டி புகையிரதப் பாதை

1871 – பேராதனை நாவலப்பிட்டியா புகையிரதப் பாதை

1877 – கொழும்பு பாணந்துறை புகையிரதப் பாதை

1885 – பாணந்துறை மாத்தறை புகையிரதப் பாதை

1899 – நாவலப்பிட்டிய பண்டாரவளை புகையிரதப்பாதை.

1905 – பொல்காவெல – குருநாகல். அநுராதபுரம். – யாழ்ப்பாண புகையிரதப் பாதை.

1907 – கொழும்பு – புத்தளம் புகையிரதப் பாதை

1912 – கொழும்பு – இரத்தினபுரி புகையிரதப் பாதை.

## செயற்பாடுகள்

1. இலங்கையின் அபிவிருத்திக்கு பிரித்தானியரால் ஆற்றிய சேவைகள் என்ன என்பதை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மாணவர் ஒருவர் யப்பானிய நண்பர் ஒருவருக்கு எழுதும் கடிதம் ஒன்றைத் தயாரிக்குக.
2. இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஒரு மத்திய கல்லூரியில் 10ஆம் வகுப்பில் கல்வி கற்கின்ற மோகன். சரஸ்வதி ஆகிய மாணவர்களுக்கு மாணவ மன்றம் ஒன்றில் பேசுவதற்கு இரு தலைப்புகள் வழங்கப்பட்டிருந்தன. மோகனின் தலைப்பு 1818 ஆம் ஆண்டுக் கிளர்ச்சி. சரஸ்வதியின் தலைப்பு 1848 ஆம் ஆண்டுக் கிளர்ச்சி. இருவரும் பேச வேண்டிய கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினைத் தயாரிக்குக.
3. ஆங்கிலேயருக்கு மத்திய மலை நாட்டினைக் கைப்பற்றுவதற்கு பின்னணியை அமைத்துக் கொடுத்தவர்கள் சில சிங்களப் பிரதானிகளேயாகும். இந்தத் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு மாணவ மன்றமொன்றில் விவாத மேடை ஒன்றினை ஏற்படுத்துக.
4. பிரித்தானியர் ஆட்சி காரணமாக நம் நாட்டில் ஏற்பட்ட சாதக பாதக விளைவுகளை விபரித்து பத்திரிகைக்கு கட்டுரை ஒன்று வரைக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மத, கலாச்சார மறுமலர்ச்சி

பிரித்தானியரால் எங்கள் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில கல்வி காரணமாக 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இலங்கையில் ஆங்கிலம் படித்த மத்திய வகுப்பு ஒன்று தோன்றி யது. இதில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக பல சேவைகளை வழங்கிய வசதி படைத்த உள்நாட்டு வகுப்பொன்று உருவானதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் இலங்கையர்களுக்கு கூடியளவு அதிகாரங்களைக் கோரி, யாப்பு முறை சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பல கிளர்ச்சிகளை மேற்கொண்டனர்.

யாப்பு முறை சீர்திருத்தங்களைக் கோரி பல போராட்டங்களை மேற்கொண்ட தலை வர்களின் படங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இக் கிளர்ச்சி இயக்கங்களின் முக்கிய நோக்கம் சங்கங்களையும், சபைகளையும் உருவாக்கி அவற்றின் மூலம் தனது கோரிக்கைக்களை மிக அமைதியான முறையில் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு சமர்ப்பித்தலாகும். இலங்கைத் தேசிய சங்கம், சிலாபச் சங்கம், யாழ்ப்பாணச் சங்கம், தாழ்நிலப் பெருந்தோட்டக்காரர் சங்கம் என்பன இந்த அமைப்புகளில் முக்கிய இடத்தை வகித்தன.

1908 ஆம் ஆண்டில் சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் நாட்டுக்குத் தேவையான பொதுவான கோரிக்கைகளை முன்வைத்தார். சமநிலை ஆளுமைபடைத்த ஒருவராக கருதப்பட்ட சேர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் நீண்டகாலமாக திட்டமிட்டு ஒழுங்கான முறையில் தயாரிக்கப்பட்ட மனு ஒன்றின் மூலம் அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தினார். அவரின் வேண்டுகோள்கள் முழுமையாக நிறைவேற்றப்படாவிடினும் அதன் பெறுபேறாக 1910 ஆம் ஆண்டுச் சீர்திருத்தம் இடம் பெற்றது..

1910 இல் படித்த இலங்கையர் ஒருவர் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு ஏற்பட்டது. இதற்கமைய சட்டவாக்கக் கழகத்திற்கு சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1911 ஆம் ஆண்டின் பின் ஆங்கிலேயர் தமது அரச வருமானத்தைக் கூட்டிக் கொள்வ தற்காக பல மதுபான சாலைகளை ஆரம்பித்து அதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டனர். இதனால் சமுதாயத்தில் பல கேடுகள் ஏற்படும் என்ற பயம் மக்களிடம் எழுந்த தினால் தேசியத் தலைவர்கள் ஒன்றுபட்டு மது ஒழிப்புச் சங்கத்தை ஆரம்பித்தனர். அதற்கான செயற்திட்டத்தையும் மேற்கொண்டனர். அரசியல் நோக்கம் எதுவும் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இவ் இயக்கமானது தேசியத் தலைவர்களை ஒன்றிணைப்பதற்கு தூண்டுகோலாகவும் அமைந்தது. எப்.ஆர். சேனநாயக்கா, டி.எஸ். சேனநாயக்க, சேர் ரி.பி. ஜெயதிலக்க, எட்மன் ஹேவ வித்தாரண, அமதோரிஸ் மெண்டிஸ பியதாஸ சிறிசேனா, பி.எச். ஏபிரகாம் த சில்வா, ஆர்தர் வி. டபிள்யூ. ஏ. சில்வா ஆகிய பௌத்த தலைவர்களையும், அவர்களது சங்கங்களையும் ஒன்றிணைக்கும் மத்திய நிலையமாக மாறியது. இத் தாபனமானது அரசின் மதுத் திட்டத்தை எதிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர்



அநகாரிக தர்மபால



ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர்



எம். சி. சித்தி லெப்பை



சேர் பொன்னம்பலம் இராமநாதன்



எப். ஆர். சேனாநாயக்க



சேர். டி. பி. ஜயதிலக்க



ஈ. டபிள்யு. பெரேரா



ஏ. ஈ. குணசிங்க



டீ. எஸ். சேனாநாயக்க



எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்கா

உரு. 4.9 தேசிய வீரர்களில் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பளையில் நடைபெற்ற பௌத்தமத ஊர்வலமே 1915 இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லீம் மோதல் களுக்குக் காரணமாக இருந்தது. இதனால் இத் தேசிய இயக்கம் மேலும் வலுப் பெற்றது. கொழும்பு, குருநாகல் போன்ற நகரங்கள் வரை இந்த மோதல்கள் பரவியது. இம் மோதலுக்கு பின்னணியில் அரசாங்கத்துக்கு எதிரான இயக்கங்கள் பல இருந்ததாக சந்தேகித்த அரசாங்கம் தேசிய தலைவர்கள் பலரை சிறைக்கு அனுப்பியது.

எப். ஆர். சேனாநாயக்கா டி.எஸ். சேனாநாயக்கா சேர். டி.பி. ஜெயதிலக்கா சீவட்டு வன்துடாவை சீ. ஏ. ஹேவா வித்தாரண, ஏ.ஈ. குணசிங்கா போன்ற தலைவர்களே சிறையில் அடைக் கப்பட்டவர்களாவர். வில்லியம் பேதிரிஸ் போன்ற பல தலைவர்கள் எவ்வித விசாரணையு மின்றி கொல்லப்பட்டனர். இச் செயலானது தேசியத் தலைவர்கள் பலரின் கடும் கண்டனத்துக் குள்ளாயினது.

இது பற்றி ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் எவ்வித பயனும் ஏற்பட இல்லை. எனவே அக் கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவை பிரித்தானிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக ஈ. டபிள்யூ. பெரேரா அவர்கள் இங்கிலாந் துக்கு சென்றார்கள். பொன்னம்பலம் இராமநாதன், டி.பி. ஜெயதிலக்கா ஆகிய தலைவர்களும் அவரோடு சென்றனர். கோரிக்கைகள் அடங்கிய மனு சமர்ப்பிக்கப்பட்டதன் பேறாக ஒரு விசார ணைக் குழு நியமிக்கப்பட்டது. அப்போது இலங்கையில் பதவியில் இருந்த ஆளுநர் மீண்டும் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டார்.

பிரித்தானியரது நிருவாகத்துக்கு எதிராக தலைவர்கள் இவ் விதம் அணி திரண்ட கார ணத்தால் அவர்களுடையே ஒற்றுமை வலுவடைந்தது. அன்னிய ஆட்சியின் கீழ் அநீதியான அடக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கு வலிமையான அமைப்பின் அவசியம் உணரப்பட்டது. இதன் விளைவாக 1919 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன், ஜேம்ஸ் பீரிஸ் எப். ஆர். சேனா நாயக்கா, ஈ. டபிள்யூ. பெரேரா, ஏ. ஈ. குணசிங்க, டி.பி. ஜெயதிலக்கா, டி.எஸ். சேனாநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆகியோர் இலங்கைத் தேசிய சங்கத்தின் செயலூக்கம் உள்ள தலைவர்களாக காணப்பட்டனர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இச் சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920 ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தத்துக்கான விதப்புரைகள் அடங்கிய ஒரு மனுவை இலங்கைத் தேசிய சங்கம் பிரித்தானிய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. இதன் விளைவாக 1921 ஆம் ஆண்டில் ஆளுநர் மனிங் தலைமையில் ஒரு அரசியல் யாப்புச் சீர்திருத்தம் மேற்கொள ளப்பட்டது. இச் சீர்திருத்தத்தின் பிரகாரம் 1921 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலின் படி சட்டவாக்க கழகத்துக்கு சிங்கள உறுப்பினர்கள் 13 பேரும் தமிழ் உறுப்பினர்கள் 3 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ் தலைவர்கள் தமிழர்களுக்கு கிடைத்த பிரதிநிதித்துவம் போதாது என்ற கருத்தும் தோன்றியது. இதனால் தமிழ், சிங்கள அரசியல் தலைவாகளிடையே கருத்து வேற்றுமைகளும் ஏற்பட்டன. இதன் விளைவாக பொன்னம்பலம் அருணாசலம் இலங்கைத் தேசிய சங்கத்திலிருந்து விலகி தமிழ் மக்கள் சபை ஒன்றினை நிறுவினார். இதன் பின்னர் யாப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது இலங்கைத் தேசிய சங்கத்தின் கோரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறாகவும், தமிழ் மக்கள் சபையின் கோரிக்கைகள் வேறாகவும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. 1924 ஆம் ஆண்டில் மீண்டும் யாப்பு முறைச் சீர்திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு அரசியல் சீர்திருத்தங்களுக்கான கிளர்ச்சிகள் வலுவடைந்தமையால் புதிய யாப்பு முறைச் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்காக 1927 இல் டொனமூர் விசாரணைக்குழு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களின் விதந்துரைப்படி 1931 ஆம் ஆண்டு டொனமூர் யாப்பு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஓரளவு உள்நாட்டு ஆட்சி அதிகாரம், இலங்கைக்கு அதன் மூலம் வழங்கப்பட்டது. எனினும் அரசுக் கழகத்தில் நிரந்தர உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட பிரதம செயலாளர் நிதிச் செயலாளர் நீதிச் செயலாளர் ஆகியோர் பூரணமாக அரசுக் கழகம் செயற்படுவதற்கு தடையாகக் காணப்பட்டனர். அதன் விளைவாக பூரண சுதந்திரமுள்ள ஆட்சிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அடிப்படையாக கொண்டு பல்வேறு சீர்திருத்தங்களை ஈ.டபிள்யூ. பெரேரா அரசுக் கழகத்தினூடாக பிரித்தானிய அரசுக்கு சமர்ப்பித்தார். அத்தகைய அரசியல் சீர்திருத்தத்துக்கு வைத்திய கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க பிலிப் குணவர்தனா கலாநிதி என்.எம். பெரேரா ஆகியோர் முன் நின்று உழைத்த அரசியல் தலைவர்களாவர்.

இவ்வாறான சீர்திருத்தக் கோரிக்கைகள் காரணமாக புதிய யாப்பு முறை ஒன்று விதந்துரைப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டது. அதன் விளைவாக சோல்பரிக் குழுவில் விதந்துரைப்புக்கு அமைவாக 1947 ஆம் ஆண்டில் பாராளுமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது. முதல் பிரதம மந்திரியாக டி.எஸ். சேனாநாயக்கா தெரிவு செய்யப்பட்டார். அவர்கள் பிரித்தானிய அரசு மேற்கொண்ட தொடர்புகளால் 1948 ஆம் ஆண்டு பெபரவரி 4 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது.

## சமய மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சமய வளர்ச்சியானது கல்வியினை மையமாகக் கொண்டு, இடம் பெற்றது. 19ம் நூற்றாண்டில் லண்டன் மிசனரி சங்கம் பப்ரிஸ்ற் சங்கம் வெஸ்லியன் மிசனரி அமெரிக்கர்கள் மிசனரி போன்றவை தமது கிறித்துவ சமயத்தைப் பரப்புவதில் ஈடுபட்டன. இம் மிசனரிகள் பாடசாலைகளை அமைத்து ஆங்கில மொழியைக் கற்பித்ததோடு கிறித்துவத்தையும் பரப்பினர். இதுவே அக்கால கல்வியில் அடிப்படை கொள்கையாக இருந்தது.

பௌத்த ஆராமைகளை மையமாகக் கொண்ட கல்வி முறை இலங்கையின் ஆரம்ப காலத்தில் இருந்தே நிலவி வந்தது. பிரித்தானியரது காலத்தில் அரசின் உதவிகள் கிடைக்கப் பெறா மையாலும், மிசனரிப் பாடசாலைகளுடன் போட்டியிட முடியாமை எனபன போன்ற காரணிகள் இந்த பாடசாலைகள் தொடர்ந்து நடத்த தடையாக அமைந்தன. இதன் காரணமாக பெருந் தொகையான சிங்கள, தமிழ் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மிசனரிப் பாடசாலைகளுக்கே அனுப்பினார்கள்.

அரசாங்க பதவிகள் அநேகமாக மிசனரிப் பாடசாலைகளில் கற்பவர்களுக்கே கிடைத்தன. இதனால் 1860 லிருந்து பௌத்த, இந்து கல்வி நிலையங்கள் செயலிழந்தன. மிசனரிக் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் அதிகரித்ததினால் தேசத்தின் கலாசாரத்திலும் பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால். பௌத்த. இந்து இஸ்லாமிய கலாச்சாரங்களைப் புனரமைப்பதற்கு பல செயற்றிட்டங்களை மேற் கொண்டனர். இத்தகைய முயற்சியினை மத. கலாச்சார புத்துணர்வு அல்லது கலாச்சார மறுமலர்ச்சி என அழைப்பர்.

இக்காலத்தில் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர சங்கராஜ தேரோவிடம் கல்வி கற்ற மாண வர்களும், சில பிக்குமார்களும் இணைந்து பல பௌத்த சமய செயற்திட்டங்களை ஆரம்பிக்கவும். பௌத்த கல்வி வளர்ச்சிக்கான செயற்திட்டங்களை கட்டியெழுப்பவும் முன்னோடிகளாக திகழ்ந் தனர். வலானேயைச் சேர்த சித்தார்த்ததேரர் அவர்கள் பௌத்த கல்வியைக் கட்டி எழுப்ப, முன்னோடியாக செயற்பட்ட ஒருவராவார். 1839 இல் இரத்மலானை பரமதம்ம சேத்திய பௌத்த விகாரையில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட பௌத்த நிறுவனம் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சிக்கு முக்கிய இடமாக விளங்கியது.

வலானை ஸ்ரீ சித்தார்த்த தேரர் அவர்களின் மாணவர் ஒருவரான ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் அவர்களினால் மாளிகாகந்த பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இப் பிரிவெனா 20 நூற் றாண்டில் பௌத்த மறுமலர்ச்சிக்கு ஒரு பிரதான இடமாக விளங்கியது.

சிங்கள பத்திரிகையான "லங்கா லோகய" சுமங்கல தேரர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சுதர்ஸன பௌத்த விஹாரய. சுமதி சங்கிரஹய போன்ற சஞ்சிகைகளை வெளியிடவும் சுமங்கல தேரர் பல உதவி ஒத்தாசைகளை செய்தார்.



4.10 ஹிக்கடுவை சுமங்கல தேரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக்க தேரர் அவர்களால் 1875 இல் பயலிக்கொடை வித்தியா லங்கார பிரிவேனாவின் ஆரம்பமும் பௌத்த கல்வி மறுமலர்ச்சிக்கு ஒரு தூண்டு கோலாக இருந்தது.



4.11 மீகெட்டுவத்தை குணானந்த தேரர்

செயலிழந்த நிலையில் இருந்த பௌத்த சாசனத்தையும், பௌத்த கல்வியையும் கட்டி எழுப்ப மீகெட்டுவத்தை குணானந்த தேரர் பெரும் பங்காற்றினார். நல்ல பேச்சு வளமும், கிறிஸ்தவ மதத்தைப் பற்றிய பரந்த அறிவும் இவருக்கு இருந்தமையால், மத சம்பந்தமான விடயங்களை கிறிஸ்தவ மதத் தலைவர்களுடன் விவாதிக்கும் திறமையும் மீகெட்டுவத்தை குணானந்த தேரருக்கு இருந்தது. இவ்வாறான வாத விவாதங்கள் பௌத்தர்களுக்கு நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்த உந்து சக்தியாக விளங்கியது. சத்திய மாக்கய, ரிவிரச, லக்மினி, கிறுல போன்ற சஞ்சிகைகளின் தோற்றத்துக்கும், பௌத்த கொடியின் உருவாக்கத்துக்கும் மீகெட்டுவத்தை குணானந்த தேரர் பெரும் பங்காற்றினார்.

ஐக்கிய அமெரிக்க குடியரசைச் சார்ந்த கேணல் ஸ்டீல் ஓல்கோர்ட் அவர்கள் மதசார்பான விவாதங்களை பார்ப்பதற்காக 1880 இல் இலங்கைக்கு வந்தார். பௌத்த மதத்தின் மகத்துவத்தை உணர்ந்த இவர் பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக செயற்படத் தொடங்கினார்.

பௌத்த மத மறுமலர்ச்சிக்காக கேர்ணல் ஸ்டீல் ஓல்கோர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட சேவைகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

* பிரம்ம ஞான பௌத்த சங்கத்தை ஆரம்பித்து, பௌத்தசமய பிள்ளைகளின் கல்வியை கட்டி எழுப்ப வழி செய்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பௌத்த சமய பின்னணியில் இலங்கை மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை பெற்றுக் கொடுக்க கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, காலி தர்மராஜக் கல்லூரி, சங்கமித்தா கல்லூரி போன்ற கல்லூரிகளை ஆரம்பித்தார்.
* சரசவி சதரெஸ என்ற பத்திரிகை "த வுட்ஸ்ரி" என்ற ஆங்கிலச் சஞ்சிகையும் ஆரம்பிக்க முன்னோடியாக இருந்தார்.
* போயா தினத்தை விடுமுறை நாளாக மாற்ற வழி செய்தமை.



படம் 4. 12 கேர்ணல் ஸ்ரீல் ஒல்கோர்ட்

ஒல்கோர்ட் அவர்களின் பின்னர் அவரிடம் பயிற்சி பெற்ற குழு ஒன்று பௌத்தமத, தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைத்துவத்தை முன்னெடுத்துச் சென்றது. அநாகாரிக தர்மபால, வலிசிங்க ஹரிஸ் சந்திரா, ஸ்ரீமத் டி.பி. ஜயதிலக்கா, ஆதர் வதியெஸ், அமதோரு மெண்டிஸ், பியதாஸ சிரிசேன, ஆர். ஏ. மிரண்டோ, ஹேவாவித்தாரண போன்றவர்கள் அவர்களில் முக்கியமானவர்களாகும்.

அநகாரிக தர்மபால அவர்கள் பௌத்தமத மறுமலர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். காலனித்துவ ஆட்சியால் மறைந்திருந்த தேசியப் பற்றினை மீண்டும் கட்டியெழுப்ப இவர் பெரும் பாடுபட்டார். இவர் 1891 இல் மஹாபோதி சங்கத்தை ஆரம்பித்தார். அச்சங்கமானது பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல இயங்கிய ஒரு பிரதான அமைப்பாக காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையினை மேற்கத்திய ஆட்சியிலிருந்து மீட்டெடுக்க மக்களை ஊக்குவித்தமை, தேசிய நடைமுறைகளையும், கலாச்சாரத்தையும் பரப்புதல், பௌத்த கல்விக்கு உதவி செய்தமை என்பன அநாகாரிக தர்மபால அவர்களின் சேவைகளாக கருதலாம்.



உரு. 4.13 அநகாரிக தர்மபால

இந்தியாவில் புத்தகயா உட்பட பௌத்தர்களின் வழிபாட்டுத் தலங்களை மீண்டும் பௌத்தர்களுக்கே பெற்றுக் கொடுப்பதற்காகவும், சர்வ தேசரீதியாக பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கும் இவர் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

கிறிஸ்தவ மிஸனரிப் பாடசாலைகளினால் ஏற்பட்ட விளைவுகளால் இந்துசமய, இஸ்லாமிய சமய இயக்கங்கள் உருவாக வழிவகுத்தது. கிறிஸ்தவ மிசனரிகளால் நடாத்தப்பட்ட பாடசாலைக் கல்வி முறையால் இந்துசமய கலாச்சார முறையில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியதால் மிசனரிக் கல்வி முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்க தேசிய சமய இயக்கங்கள் பல தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4. 14 ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆறுமுகநாவலர் அவர்கள் இந்து சமய மறுமலர்ச்சிக்காக முதன்மையாக நின்று செயற்பட்ட ஒருவராவார். (1822-1899) வெளிநாட்டவர் செல்வாக்குக் காரணமாக இந்து மதத்தவர்களின் கலாசாரத்துக்குப் பாதிப்பும், சீர்கேடுகளும் ஏற்பட்டன. அவர்களின் மத, கலாச்சார மறுமலர்ச்சிக்காக ஆறுமுகநாவலர் அவர்கள் பெரும் முயற்சி எடுத்தார். இந்து சமயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி, அதனைப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை எடுத்துக் காட்டினார். 1848 இல் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை என்ற இடத்தில் ஒரு பாடசாலையை ஆரம்பித்ததோடு அதன் பின்னர் பல பிரசித்தி பெற்ற இந்துப் பாடசாலைகள் தோன்றுவதற்கு வழிவகுக்கப்பட்டது. 1897 இல் முதன் முதலாக இந்துபரிபாலன சபையால் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு அதுவே இன்றைய யாழ்-இந்துக்கல்லூரியாகும்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களது இந்து மக்களிடையே மாத்திரம் அல்ல சிங்கள மக்களிடையேயும் பிரபல்யமான ஒருவராக கருதப்பட்டார். 1915 இல் நடைபெற்ற இனக் கலவரங்களில் எவ்வித விசாரணையும் இன்றி சிறைக்கு சென்ற சில சிங்களத் தலைவர்களை சிறையிலிருந்து மீட்பதற்கு இவர் அரும்பாடுபட்டார். பரமேஸ்வராக் கல்லூரியையும்; இராமநாதன் பெண்கள் கல்லூரியையும் தமது சொந்தச் செலவில் கட்டுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4.15 சேர் பொன்னம்பலம் இராமநாதன்

எம். சி. சித்திலெப்பை (1832-1898) அவர்கள் முஸ்லீம் இனத்தவர்களுக்காக, அவர்களின் சமயம், மொழி என்பவற்றுக்காக உழைத்த ஒரு பிரபல்யமான தலைவராவார். இவர் காலத்தில் முஸ்லீம் இனத்தவர்கள் கல்வித் துறையில் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் தம் பண்பாட்டுக் கலாசாரங்களிலிருந்து விலகிச் செல்வதும், தமது பாரம்பரிய தொழில்களை சுதந்திர மாக நடாத்திக் கொண்டு போக சந்தர்ப்பங்கள் கிடைக்காமையும் பெரும் பிரச் சினைகளாக காணப்பட்டன. இந்த நிலையில் இருந்து முஸ்லீம் மக்களை மீட்பதிலும், மக்களின் பொருளாதார நிலைமைகளை கட்டியெழுப்புவதிலும் ஈடுபட்டார். இவர் 1882 இல் மருதானை சாஹிராக் கல்லூரியைக் கட்டுவதற்கு முன்னோடியாக திகழ்ந்தார். முஸ்லீம் பாடசாலை ஒன்றை கண்டியில் ஆரம்பித்து வைத்தார். இன்று சித்தி லெப்பை பாடசாலை என்ற பெயருடன் இயங்குகின்றது. "மத்ரசா" என்ற இஸ்லாமிய சமய பாடசாலைகளையும் புனர் நிர்மாணம் செய்தார்கள். முஸ்லீம் நேசன், ஞானதீபம் என்ற இரு பத்திரிகைகளையும் முஸ்லீம்களின் முன்னேற்றம் கருதி வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4. 16 படம் சித்தி லெப்பை அவர்கள்

## கலாசார மறுமலர்ச்சி

மத மறுமலர்ச்சியுடன் கலாசார முன்னேற்றங்களும் ஏற்பட்டன. சிங்கள, பாளி மொழிகளில் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டமையும், சிங்கள பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல வெளிவந்தமையும் கலாசார மறுமலர்ச்சியின் ஓர் அங்கமாகவே கருதலாம்.

"லங்கா லோகய" 1860 இல் வெளியான முதலாவது சிங்கள பத்திரிகையாகும்.

1862 இல் லக்மினி கிரண, லக்மினி பஹன, அருணோதய போன்ற பத்திரிகைகள் வெளிவந்தன. 1866 இல் ஆரம்பமான ஞானரத்ன பிரதீபய ஒரு சிங்கள பத்திரிகையாகும். 1880 இல் பௌத்த பிரம்மஞான சங்கத்தினால் சரசவி சதரெச என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. 1902 இல் பியதாஸ சிரிசேன அவர்களால் "சிங்கள ஜாதிய" என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1909 இல் தினமின என்ற பத்திரிகை அச்சிடப்பட்டது.

மத சம்பந்தமானதும், வரலாறு சம்பந்தமானதுமான சம்பவங்களை கருப்பொருட்களாக கொண்டு நாடகங்களும், காட்சிகளும் அரங்கேற்றப்பட்டன. பியதாஸ சிரிசேன போன்ற எழுத்தாளர்கள் தேசப்பற்றை வெளிக்காட்டும் வகையில் நாவல்கள் பல எழுதினார்கள். இவ்வகையான செயற்பாடுகள் மறுமலர்ச்சிக்கு பெரும் பங்காற்றின.

வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவினாக்களின் துணையுடன் நாட்டின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் பௌத்த கல்வி பரவலாக விரிவடைந்தமை இக்காலத்தில் இடம் பெற்ற முக்கியமான சம்பவமாகும். பௌத்த பிரம்ம ஞானசங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சமயப் பாடசாலைகள் மூலமாகவும் (தஹம்) பௌத்த இளைஞர் சங்கங்களாலும் கலாசார புத்துணர்வு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போன்ற இயக்கங்களால் தேசிய உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. தமிழ் மக்களிடையேயும் கலாசார இயக்கங்களே காரணமாக இருந்தன. ஆறுமுகநாவலர் சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய தேசியத் தலைவர்கள் ஆற்றிய முக்கிய சேவைகளே கலாசார மறுமலர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. 1888 இல் "இந்து சாதனம்" என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. 1931 இல் வீரகேசரியும் 1931ல் தினகரன் பத்திரிகையும் ஆரம்பமானது.

## செயற்பாடுகள்

1. பிரித்தானியர் காலத்தில் எமது நாட்டை மீட்டெடுப்பதற்கு சேவைகள் புரிந்த தேசத் தலைவர்கள் பலரின் படங்களை வைத்து கண்காட்சி ஒன்றை வகுப்பறையில் நடத்துக. (அத் தலைவர்கள் ஆற்றிய சேவைகள் பற்றி சுருக்கமான விளக்கங்கள் தருக)
2. பிரித்தானிய காலணித்துவத்தின் போது இந் நாட்டின் மத, கலாசார மறுமலர்ச்சி என்ற தலைப்பில் ஒரு கலந்துரையாடல் ஒன்று நடாத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி

உலகில் அனைத்து மக்களும், நாடுகளும் தமது வாழ்க்கை நலன்களை மேம்படுத்திக் கொள்ளவே முனைகின்றன. தனி நபர் ஒவ்வொருவரதும் சமூக, பொருளாதார கலாசாரத் துறைகள் சார்ந்த வளர்ச்சியினையே இவ் எண்ணக் கருவினால் கருதப்படுவதாகும். இதனை அபிவிருத்தி என எளிதாக குறிப்பிடலாம். வாழ்க்கை நலன்களின் தரங்களைப் பெற்றுக் கொள்வதில் நாடுகளின் மத்தியில் வேறுபாடுகள் உண்டு. இதன் அடிப்படையில் அபிவிருத்தியின் மட்டங்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அபிவிருத்தி என்பது யாது? அதனை எவ்வாறு அளக்க முடியும்? அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் எவை? அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் எவை? என்பன தொடர்பான விளக்கங்களை இந்த அத்தியாயத்தை வாசிப்பதனால் நீங்கள் பெற முடியும்.

அபிவிருத்தி தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வுகளோ ஏராளமாகும். அபிவிருத்தி தொடர்பான வரைவிலக்கணங்கள் சில பின்வருமாறு. இவற்றினைக் கற்றுக் கொள்க.

- 'உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் அபிவிருத்தியாகும்' முதலாம் அபிவிருத்தித் தசாப்தம் 1961-1970, ஐக்கிய நாடுகள் அமையம்.

- ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியும் உண்டாதல் வேண்டும். சமூக அபிவிருத்தியானது உணவு, போசணை, சுகாதாரம், கல்வி வீடு, சமூகப் பாதுகாப்புகள், ஆடையணிகள், ஓய்வு, மனித சுதந்திரம் ஆகிய துறைகளில் ஏற்படவேண்டும். - யுனஸ்கோ

- குறிப்பிட்ட ஒரு நாட்டின் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வுகள், வேலையின்மை போன்ற துறைகளை உயர்ந்த மட்டத்திலிருந்து தாழ்ந்த மட்டம் வரை கொண்டு வரல் அபிவிருத்தியாகும். - டட்லி சியர்ஸ் 1972

- சனத்தொகை, சமூகம், கலாசாரம், அறநெறி என்ற காரணிகள் உள்ளடங்கிய அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளே அபிவிருத்தி என்பதாகும்.
  - மூன்றாம் அபிவிருத்திச் தசாப்தம் 1981-1990 ஐக்கிய நாடுகள் அமையம்.

மேற் கூறிய வெளிப்பாடுகளின் படி அபிவிருத்தி என்ற எண்ணக் கருவுக்கு பல்வேறு பகுப்பாய்வுகள் அல்லது கருத்துகள் உண்டென்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள முடியும். சருக்கமாக கூறுவதாயின் மனிதனின் வாழ்க்கை நலன்களின் அபிவிருத்தியில் உணவு, வீடு, உடை ஆகிய அடிப்படைத் தேவைகள் மாத்திரமின்றி சுகாதாரம், போசணை, கல்வி, வேலைவாய்ப்புகள், சமூக பாதுகாப்புகள், மனித சுதந்திரம், பொழுது போக்கு வசதிகள், சனநாயக உரிமைகள், கலாசாரம் ஆகிய பல்துறை விருத்தியும் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியினை அளத்தல்

அபிவிருத்தி மட்டமானது நாட்டுக்கு நாடு வேறுபடும். இம் மாற்றத்தை இனங்காண்ப தற்காக எல்லா நாடுகளின் அபிவிருத்தி மட்டங்களையும் அளந்து பார்த்தல் அவசியமாகும். அபிவிருத்தியை அளப்பதற்குக் கையாளப்படும் பிரமாணங்கள் பல உண்டு. அபிவிருத்தி எண்ணக் கருவின் விளக்கமானது காலத்துக்கு காலம் வேறுபடுவதால் அதனை அளப்பதற்காகக் கையாளப்படும் பிரமாணங்களும் வேறுபடுகின்றன.

அபிவிருத்தியை அளவிடுதற்காக பயன்படுத்தப்படும் சகல அளவீட்டு முறைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு.

1. மரபு வழி அளவீடுகள்
2. நவீன அளவீடுகள்

விருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் அளவீடுகள் 'மரபு வழி அளவீடுகள்' எனவும் சமூக விருத்தியை அளப்பதற்காக பயன்படுத்தப்படும் அளவீடுகள் 'நவீன அளவீடுகள் எனவும் அழைக்கப்படுகிறது.

### அபிவிருத்திஅளவீடுகள்

**மரபு வழி அளவீடுகள்**

* ஆள்வீத தேசிய உற்பத்தி
* ஆள்வீத தேசிய உற்பத்தியின் விருத்தி வேகம்
* ஒரு நாட்டின் செல்மதி நிலுவையின் உடன்பாடான அல்லது எதிர்மாறான தன்மை

**நவீன அளவீடுகள்**

* பௌதீக வாழ்க்கைத் தர சுட்டி
* மனித அபிவிருத்தி சுட்டி
* மனித சுதந்திரச் சுட்டி
* போசாக்கு மட்டத்தோடு தொடர்புடைய அளவீடுகள்
  * அன்றாடக் கலரி நுகர்வு
  * குழந்தைகளதும், பிள்ளைகளதும் போசாக்கு மட்டம்
* சுகாதாரமும் சனத்தொகையும் சம்பந்தமான அளவீடுகள்
  - பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு
  - சனத்தொகை விருத்தி வேகம்
  - சிசு மரண சதவீதம்
  - தாய்மார் மரண வீதம்
  - நகர்ப்புற/கிராமப் புறச் சனத்தொகை
  - ஒரு வைத்தியருக்கான நோயாளரின் எண்ணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கல்வியோடு தொடர்புடைய அளவீடுகள்
  எழுத்து, வாசிப்பு சார்ந்த திறன்கள்
  தேசிய வருமானததில் கல்விக்காக
  செலவழிக்கும் சதவீதம்
* ஒரு ஆசிரியருக்கான மாணவர்கள் எண்ணிக்கை
* பொது வசதிகள் தொடர்பான அளவீடுகள்
  தனி நபர் சக்தி நுகர்வு
  சனத்தொகையில் 1000 பேர்களிடம் உள்ள வானொலிப்பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலை பேசிகளின் எண்ணிக்கைகள்.
  ஒரு சதுர கிலோ மீற்றருக்குள் காணப்படும் வீதிகளின் நீளம்

## ஆள் வீத தேசிய உற்பத்தி

ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியினுள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களினதும், சேவைகளினதும் பெறுமதியை ஒரு பொது பண அலகால் பெறுமதி காண்பதே தேசிய உற்பத்தி எனப்படும். தேசிய உற்பத்தியை சம்பந்தப்பட்ட ஆண்டினை மைய ஆண்டுச் சனத்தொகையால் பிரிக்க வருவதே ஆள்வீத தேசிய உற்பத்தியாகும்.

$$\text{ஆள்வீத தேசிய உற்பத்தி} = \frac{\text{தேசிய உற்பத்தி}}{\text{மைய ஆண்டுச் சனத்தொகை}}$$

ஆள்வீத தேசிய உற்பத்தியினால் ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியை மாத்திரம் அளக்க முடியும் அவ்வளவீட்டினால் சமூக நலன்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட மாட்டாது. மக்களுக்கு எவ்வாறு வருமானம் பகிரப்படுகின்றது என்பதும் வெளிப்படுத் தப்படமாட்டாது.

## பௌதீக வாழ்க்கைத் தரம் தொடர்பான தத்துவம்

இது ஐக்கிய நாடுகள் அமைபத்தினால் அறிமுகம் செய்யப்பட்டதும், காரணிகள் மூன்றினை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு எண்ணக்கருவாகும். அக்காரணிகள் பின்வருமாறு

- பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம்
- சிசு மரண வீதம்
- எழுத்தறிவு வீதம்

இத்தத்துவத்தின் மூலம் ஒரு நாட்டின் சமூக கலாச்சார துறைகள் தொடர்பான விளக்கத் தைப் பெற முடியும்.பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலமானது அதிகரிப்பதனால் நாட்டின் போசாக்கு தொடர்பான தகவல்கள் வெளியாகும். எழுத்தறிவு மூலம் கல்வி விருத்தி தொடர்பான விளக்கத்தைப் பெறலாம். எனினும் அபிவிருத்தியை அளப்பதற்கு இத்தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் மட்டும் போதாது. ஆள்வீத தேசிய உற்பத்தி போன்ற பொருளாதாரம் சார்ந்த பிரமாணங்களோடு இத்தத்துவத்தைக் கையாள வேண்டும்.

## மனித அபிவிருத்திச் சுட்டி

இது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் 1990 இல் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு குறிகாட்டியாகும். மூன்று பிரமாணங்களைக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

- பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலம்
- எழுத்து, வாசிப்பு சார்ந்த திறன்
- கொள்வனவுச் சக்தி

பொருளாதாரம், சமூகம் கலாசாரம் ஆகிய மூன்று துறைகள் சார்ந்த தகவல்கள் இத்தத் துவத்தால் புலனாகின்றது. எனவே அபிவிருத்தியை அளப்பதற்கு இது மிக பொருத்தமானது எனலாம். பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம், எழுத்து, வாசிப்புத் திறன் என்பன மூலம் போசாக்கு, கல்வி சுகாதாரம் ஆகியவற்றின் நிலைமைகள் வெளியாகும். இவை சமூகத் துறையை சார்ந்ததாகும். பொருளாதாரம் சார்ந்த தகவல்களை கொள்வனவு சக்தி எடுத்துக் காட்டும்.

## அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும்

அபிவிருத்தி, அபிவிருத்தியினை அளப்பதற்கான அளவீடுகள் தொடர்பாக தகவல்களை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அபிவிருத்தியின் அடிப்படையில் உலக நாடுகள் மத்தியில் நிலவும் சமமின்மை கள் பற்றி அறிந்து கொள்ள நீங்கள் விரும்புவீர்கள்.

1981 ஆம் வருடம் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின் படி ஆள் வீத வருமானமானது 3500 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டதாகவும், பௌதீக வாழ்க்கைச் சுட்டியானது 90க்கு மேற்பட்டதாகவும் காணப்படும் நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளாக காணப்படுகின்றன. இதனை விடக் குறைந்த நாடுகளே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மேற்படி இரு வகை சார்ந்த நாடுகள் சில பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| அபிவிருத்தி அடைந்த நாடுகள் | அபிவிருத்தியடையும் நாடுகள் |
|---|---|
| கனடா | இலங்கை |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | இந்தியா |
| ஐக்கிய இராச்சியம் | சீனா |
| யப்பான் | நேபாளம் |
| சுவிற்சர்லாந்து | எதியோப்பியா |
| அவுஸ்திரேலியா | ஆர்ஜன்டினா |
| நியூசிலந்து | ஈரான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஜேர்மனி | பங்களாதேஷ் |
| ஒல்லாந்து | மெக்சிகோ |

உலக நாடுகள் பெறுகின்ற வருமான மட்டத்தை கவனத்தில் கொண்டு வகைப்படுத்தல் இன்னுமொரு முறையாகும். இதன் அடிப்படையில்

- உயர்ந்த வருமானத்தைப் பெறும் நாடுகள்
- மத்திய அளவிலான வருமானத்தைப் பெறும் நாடுகள்
- தாழ்ந்த வருமானத்தைப் பெறும் நாடுகள்

என மூன்று வகையாக பிரிக்கப்படும்.


மேற்படி வகைப்படுத்தலோடு தொடர்புடைய நாடுகள் சில பின்வரும் அட்டவணையால் காட்டப்பட்டுள்ளன. இதனை ஆராய்க.

| வகை | ஆள்வீத தேசிய உற்பத்தி | நாடுகள் |
|---|---|---|
| குறைந்த வருமானம் உடைய நாடுகள் | (அமெரிக்க டொலரில். 580 அமெரிக்க டொலரிலும் குறைந்தது | மாலைதீவு, பங்களாதேசம், லாவோஸ் பூட்டான், நேபாளம், இந்தியா வியட்னாம், நைஜீரியா, மொங்கோலியா |
| மத்திய வருமானம் உடைய நாடுகள் | 580-5999 டொலர்களுக்கும் இடைப்பட்டது | பப்புவா நீயூகினி, இலங்கை தாய்லாந்து, பிலிப்பையின்ஸ், பிரேசில், மெச்சிக்கோ |
| உயர் வருமானம் உடைய நாடுகள் | 6000 டொலர்களுக்கு மேல் | கனடா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம், யப்பான், சுவிற்சாலாந்து, சுவீடன், ஜேர்மனி |

1997 ஆம் வருடம் ஐக்கிய நாடுகளின் மனித மேம்பாட்டு அறிக்கையின் படி உலகில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளின் சமூக பொருளாதார தரவுகளை எடுத்துக் காட்டும் ஓர் அட்டவணை கீழே காணப்படுகின்றது. அதனை ஆராய்வதால் நாடுகள் மத்தியில் காணப்படும் அபிவிருத்தி சார்ந்த வேறுபாடுகளை நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 5.1 சமூக பொருளாதாரத் தரவுகள்
அபிவிருத்தியடைந்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக - பொருளாதார புள்ளிவிபரங்கள்

| | எழுத்தறிவு | சிசுமரணம் (ஆயிரத்துக்கு) | சனத்தொகை வளர்ச்சி | சனத்தொகை மில்லியன் | ஒரு தொலை பேசிக்கு மக்கள் | நகர்ப்புறச் சனத்தொகை | ஒரு தொலைக் காட்சிப்பெட்டிக்கு மக்கள் | ஒரு வைத்தியருக்கு மக்கள் | ஆயுள் எதிர்பார்ப்பு | கலோரி நுகர்வு (ஒரு நாளுக்கு ஒரு ஆளுக்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரித்தானியா | 100.0% | 7 | 0.3% | 58.4 | 1.9 | 89% | 2.3 | 581 | 76 | 3.119 |
| ஜேர்மன் | 100.0% | 6 | 0.7% | 82.5 | 1.8 | 86% | 1.8 | 333 | 76 | 3.522 |
| யப்பான் | 100.0% | 5 | 0.2% | 125.4 | 1.5 | 78% | 1.6 | 566 | 80 | 2.956 |
| சுவிற்சர்லாந்து | 100.0% | 6 | 0.6% | 7.1 | 1.1 | 64% | 2.5 | 585 | 78 | 3.562 |
| நியூசிலாந்து | 99.8% | 7 | 1.0% | 3.5 | 1.4 | 86% | 2.3 | 332 | 76 | 3.362 |
| அவுஸ்திரேலியா | 99.5% | 7 | 1.2% | 18.1 | 1.5 | 86% | 2.1 | 438 | 78 | 3.216 |
| கனடா | 99.0% | 7 | 1.3% | 29.8 | 1.3 | 78 | 1.6 | 446 | 78 | 3.482 |
| ரஷ்யா. | 99.0% | 20 | 0.4% | 149.7 | 6.2 | 76% | 2.7 | 220 | 69 | 3.300 |
| பிரான்சு | 98.8% | 7 | 0.6% | 58.4 | 1.5 | 73% | 2.5 | 333 | 77 | 3.465 |
| இத்தாலி | 97.1% | 7 | 0.2% | 57.3 | 1.9 | 70% | 2.4 | 210 | 77 | 3.504 |
| தென் கொரியா | 96.8% | 8 | 0.9% | 45.0 | 2.0 | 78% | 3.4 | 855 | 72 | 3.298 |
| ஐக்கிய இராச்சியம் | 95.5% | 9 | 1.0% | 263.9 | 1.3 | 76% | 1.2 | 419 | 77 | 3.671 |
| மொங்கோலியா | 95.0% | 58 | 2.7% | 2.5 | 28.1 | 61% | 25.0 | 364 | 64 | 2.479 |
| தாய்லாந்து | 93.8% | 26 | 1.5% | 60.6 | 24.0 | 35% | 8.8 | 4.361 | 69 | 2.443 |
| பிலிப்பீன்ஸ் | 93.5% | 40 | 2.3% | 67.7 | 40.3 | 46% | 9.8 | 1.016 | 67 | 2.452 |
| தாய்வான் | 93.2% | 4 | 1.0% | 21.4 | 2.4 | 56% | 3.1 | 9.28 | 75 | 3.036 |
| மாலைதீவு | 92.0% | 5 | 3.0% | 0.2 | 17.9 | 31.% | 18.0 | 5.330 | 64 | 2.410 |
| சிங்கப்பூர் | 91.6% | 5 | 2.0% | 3.4 | 2.0 | 100% | 2.6 | 711 | 76 | 3.198 |
| மெக்சிக்கோ | 90.3% | 26 | 1.9% | 88.4 | 7.6 | 75% | 6.8 | 600 | 71 | 3.183 |
| ஹொங்கொங் | 90.0% | 5 | 2.1% | 6.2 | 1.5 | 95% | 3.6 | 802 | 78 | 3.144 |
| மலேசியா | 89.3% | 12 | 2.4% | 20.1 | 6.8 | 47% | 4.7 | 2.063 | 72 | 2.884 |
| இலங்கை | 89.1% | 14 | 1.2 | 18.1 | 88.1 | 22% | 10.2 | 6.162 | 72 | 2.226 |
| வியட்நாம் | 88.6% | 34 | 2.3% | 74.6 | 163.9 | 20% | 24.4 | 2.298 | 67 | 2.250 |
| பிஜி | 87.0% | 20 | 1.5% | 0.8 | 6.0 | 40% | 30.8 | 2080 | 72 | 3.092 |
| புருனை | 86.4% | 8 | 3.2% | 0.3 | 3.8 | 59% | 3.1 | 1.323 | 74 | 2.837 |
| இந்தோனேசியா | 84.4% | 60 | 1.7 | 196.5 | 70.8 | 34% | 9.1 | 6.786 | 63 | 2.750 |
| ஸம்சயர் | 83.9% | 94 | 2.9% | 48 | 261.5 | 22% | 150.5 | 1.447 | 52 | 2.630 |
| பிரேசில் | 82.1% | 50 | 1.9% | 163.2 | 10.0 | 78% | 4.8 | 847 | 67 | 2.824 |
| துருக்கி | 81.9% | 62 | 2.1% | 62.3 | 5.1 | 68% | 5.7 | 98.3 | 67 | 3.429 |
| மியன்மார் | 81.5% | 79 | 2.1% | 46.7 | 348.4 | 26% | 22.0 | 12.500 | 59 | 2.598 |
| சீனா | 80.0% | 31 | 1.2% | 1,210.1 | 36.4 | 30% | 6.7 | 11.034 | 71 | 2.703 |
| தென்னாபிரிக்கா | 80.0% | 52 | 2.2% | 42.2 | 6.9 | 50% | 10.2 | 1.750 | 63 | 3.122 |
| மகோ | 74.8% | 9 | 3.8% | 0.4 | 2.5 | 94% | .3.7 | 758 | 73 | 2.162 |
| கென்யா | 70.5% | 50 | 3.4% | 28.8 | 62.7 | 27% | 78 | 49.851 | 59 | 2.163 |
| பப்புவா நியூகினி | 65.3% | 53 | 2.3% | 4.3 | 49.0 | 17% | 11.2 | 12.500 | 56 | 2.609 |
| சவுதி அரேபியா | 64.1% | 30 | 4.3% | 18.8 | 8.5 | 80% | 3.8 | 700 | 70 | 2.874 |
| ஈரான் | 56.0% | 38 | 3.4% | 69.2 | 15.2 | 60% | 15.9 | 3.140 | 68 | 3.181 |
| இந்தியா | 52.1% | 79 | 2.1% | 927.8 | 93.5 | 26% | 23.6 | 2.165 | 61 | 2.243 |
| நைஜீரியா | 52.0% | 84 | 2.9% | 100.0 | 271.5 | 39% | 30.3 | 5.882 | 53 | 2.312 |
| எகிப்து | 50.0% | 41 | 2.2% | 59.3 | 20.8 | 44% | 8.6 | 1.320 | 64 | 3.336 |
| பூட்டான் | 40.9% | 126 | 2.3% | 0.7 | 155.7 | 7% | - | 4.255 | 49 | 2.058 |
| கம்பூச்சியா | 37.8% | 110 | 2.5% | 9.8 | 1,210.0 | 14% | 119.5 | 9.523 | 52 | 2.021 |
| பங்களாதேஷ் | 36.6% | 90 | 2.2% | 122.7 | 380.0 | 21% | 170.5 | 12.500 | 56 | 2.100 |
| பாகிஸ்தான் | 36.6% | 90 | 2.2% | 122.7 | 380.0 | 21% | 170.5 | 12.500 | 56 | 2.100 |
| ஆப்கானிஸ்தான் | 31.6% | 164 | 1.9% | 21.2 | 390.0 | 19% | 114.4 | 7.692 | 44 | 1.710 |
| நேபாளம் | 27.0% | 88 | 2.3% | 215 | 174.0 | 14% | 354.8 | 16.106 | 54 | 2.340 |

படம் 5.2 வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனை 5.1 படத்தில் காணலாம்.

### அபிவிருத்தியடைந்த நாடுகளினதும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினதும் பண்புகள்

ஒரு நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் நிலவும் சமமின்மைகளே அபிவிருத்தி சார்ந்த வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன. பின் வரும் அட்டவணையால் அபிவிருத்தியடைந்த, அபிவிருததி அடைந்து வரும் நாடுகளின் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

| அபிவிருத்தியடைந்த நாடுகளின் பண்புகள் | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பண்புகள் |
|---|---|
| • ஆள் வீத தேசிய உற்பத்தியானது உயர்ந்த பெறுமதியினைக் கொண்டது உதாரணம்: ஐக்கிய அமெரிக்கா 25900 டொலர்கள் - (1995) | * ஆள் வீத தேசிய உற்பத்தியானது தாழ்ந்த பெறுமதியினைக் கொண்டது. உதாரணம் : நேபாளம் 180 டொலர்கள் (1995) |
| • பௌதீக வாழ்க்கைச் சுட்டியானது உயர் மட்டத்தில் காணப்படும் (யப்பான்) | * பௌதீக வாழ்க்கைச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படல் (பங்காள தேசம்)35-(1995) |
| • மனித அபிவிருத்திச் சுட்டியானது உயர்ந்த மட்டத்தில் காணப்படும் யப்பான் 0.938 (1993) | * மனித அபிவிருத்திச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படுதல் - பங்களாதேசம் 356- (1993) |
| • சனத்தொகை அதிகரிப்பு வேகம் குறைவாகும் யப்பான் 0.2%-(1995) | * சனத்தொகை அதிகரிப்பு வேகம் அதிகமாகும். பங்களா தேசம் 3.56% - (1993) சவூதி அரேபியா 4.3% (1995) |
| • பிறப்பின் போது வாழ்க்கை எதிர்பார்ப்பு அதிகமாகும். யப்பான் 80-90 வயது (1995) | * பிறப்பின்போது வாழ்க்கை எதிர்பார்ப்பு குறைவாகும். ஆப்கானிஸ்தான் 44 வயது (1995) |
| • உயர்ந்த எழுத்து, வாசிப்புத் திறன் யப்பான் 100% - (1995) | * தாழ்ந்த எழுத்து வாசிப்புத் திறன் நேபாளம் 27% - (1995) |
| • சிசு மரண வீதம் குறைவாகும் 100 பிறப்புக்களுக்கு 5-9 | * சிசு மரண வீதம் அதிகமாகும் 1000 பிறப்புக்களுக்கு 16 |
| • தனிநபரது கலரி நுகர்வு அதிகமாகும். ஐக்கிய அமெரிக்கா 3671 கலரி | * தனிநபரது கலரி நுகர்வு குறைவாகும். ஆப்கானிஸ்தான் 1710 கலரி |
| • நகர்ப்புறச் சனத்தொகை அதிகமாகும். ஐக்கிய இராச்சியம் 89% | * நகர்ப்புறச் சனத்தொகை குறைவாகும். பூட்டான் 7% |
| • உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பானது உயர்ந்த மட்டத்தில் காணப்படும். | * உள்நாட்டு உற்பத்தியில் கைத் தொழிலின் பங்களிப்பு தாழ்ந்த மட்டத்தில் காணப்படும். |
| • மூலதன வளங்கள் ஏராளம் | * மூலதன வளங்கள் பற்றாக்குறையானது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தொழில் நுட்ப அறிவு உயர் மட்டத்தில் காணப்படும்.
* வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் எண்ணிக்கை குறைவாகும் ஜேர்மனி : 333

* தொழில்நுட்ப அறிவு குறைந்த மட்டத்தில் காணப்படும்.
* வைத்தியர் ஒருவருக்கான நோயாளரின் எண்ணிக்கை அதிகமாகும். நேபாளம் 16106

அபிவிருத்தியடைந்த நாடுகளினதும், அபிவிருத்தியடைந்தது வரும் நாடுகளின் பண்புகளை மேற்படி பாகுபடுத்த முடியுமெனினும். குறிப்பிட்ட ஒரு நாட்டில் அபிவிருத்தியடைந்த பண்புகளுடன், அபிவிருத்தியடைந்துவரும் பண்புகளையும் காண முடியும். பெறறோலியத்தை உற்பத்தி செய்கின்ற நாடான குவைத்தில் தலா தேசிய வருமானம் மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படும்பொழுது பௌதீக வாழ்க்கைத்தரச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படும். இலங்கை யின் தலா தேசிய உற்பத்தியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் பௌதீக வாழ்க் கைத் தரச் சுட்டியானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இலங்கையின் தலா தேசிய உற்பத்தியானது குறைவாக இருப்பினும் சமூக நலன்கள் சார்ந்த கருமங்கள் விருத்தியடைந்த மட்டத்தில் காணப்படுவதால் பௌதீக வாழ்க்கைத் தரச் சுட்டியானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. குவைத் நாட்டில் வருமானம் உயர் மட்டத்தில் காணப்படும் பொழுது பெள தீக வாழ்க்கைத் தரச் சுட்டியானது தாழ்ந்த மட்டத்தில் காணப்படும் இலங்கை தலா தேசிய உற்பதியானது குறைவாக இருப்பினும் சமூக நலன்கள் சார்ந்த கருமங்கள் விருதியடைந்த மட்டத்தில் காணப்படுவதால் பௌதீக வாழ்க்கைத தரச் சுட்டியானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. குவைத் நாட்டில் வருமானம் உயர் மட்டத்தில் காணப்பட்ட போதும் சமூக நலன்கள் சார்ந்த கருமங்கள் அபிவிருத்தியடையாததால் அந்நாட்டின் வாழ்க்கைத்தரச் சுட்டியானது தாழ்ந்த மட்டததில் காணப்படும்.எனினும் இவ்விரண்டு நாடுகளும் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளேயாகும்.

> அபிவிருத்தியடைந்த நாடாக விளங்குவதற்கு அந்நாட்டின் பொருளாதாரம் மாத்திர மன்றி சமூக நலன்கள் சார்ந்த நடவடிக்கைகளும் உயர் மட்டத்தில் காணப் படல் வேண்டும்.


## அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள்

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடையும் நாடுகளுக்கும் மத்தியில் காணப்படும் வேறுபாடுகள் தொடர்பான விளக்கத்தை நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள். அபிவிருததிச் செயன் முறையின் போது அந்நாடுகள் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினைகளைப் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மாத்திரமன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளும் கூட தமது சமூக, பொருளாதார, கலாசார துறைகளை மேலும் மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. இச் செயன் முறைகளின் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. தேசிய உற்பத்தியில் பெரும்பகுதி முதல் விளைவுப் பொருட்களாக இருத்தல், சனத்தொகை விரைவாக அதிகரித்தல், வேலை வாய்ப்பு இன்மை, பராபரிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படல்,மூலதனப் பற்றாக் குறை, தொழில் நுட்ப அறிவு குறைவு, குறைந்த வருமான மட்டம்,சுகாதாரம், கல்வி வசதிகள் குறைவு என்பன அத்தகைய பிரச்சினைகளாகும்.




படம் 5.3 அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திச் செயல் முறையின்போது இலங்கை முகம் கொடுக்கும் பிரச்சினைகளும், அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பின்பற்றப்படும் நடவடிக்கைகளும்

ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடாகிய இலங்கையின் புராதன காலத்தில் தன்னிறைவுப் பொருளாதார முறையே காணப்பட்டது. இலங்கையினைப் பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்தில்அப் பொருளாதார முறையானது படிப்படியாக செயலிழந்து அற்றுப் போய்விட்டது. தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய தோட்டப்பயிர்ச் செய்கைகளுக்கு முக்கியம் அளிக்கப் பட்டமையே அதற்கான காரணமாகும். தன்னிறைவுப் பொருளாதாரம் சீர்குலைந்து, வர்த்தகப் பயிர்கள் விருத்தியடைந்தமையால் ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த ஒரு பொருளாதார முறை இந்நாட்டில் விருத்தியடைந்தது. முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதி, தேவையான உணவுப் பொருட்களின் இறக்குமதி என்பன காரணமாக வர்த்தகத்தில் சாதகமற்ற ஒரு நிலை பிற்காலத்தில் தோன்றியது. இதன் விளைவாக உள்நாட்டுப் பொருளாதாரத்திலும், சமூக வளர்ச்சியிலும் ஓர் பின்னடைவு ஏற்பட்டது. அத்தகைய பின்னடைவுக்கு காரணமானவை எவை என ஆராய்வோம்.


ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக அவசியம் தேவைப்படுவது பண்டங்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கான நிதியாகும். அதுவே மூலதனம் எனப்படும். அதில் பணம் மட்டுமன்றி இயந்திர சாதனங்களும்,கட்டிடங்கள் போன்றவையும் அடங்கும் .

## மூலதனப் பற்றாக்குறை :

இலங்கை நீண்ட காலமாக ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் தங்கியுள்ளது. ஏற்றுமதிக் கோலததில் கூடுதலான சதவீதம் முதல் விளைவுப் பொருட்களுக்கே உரியதாக காணப்படுகிறது. உலக சந்தையில் இப்பொருட்களுக்கு நியாயமான விலைகள் கிடைப்பதில்லை. அத்தோடு விலையில் தளம்பல்கள் ஏற்பட்ட வண்ணமாக இருக்கின்றது. எனவே ஆள் வீத வருமானம் குறைவதற்கு இது காரணமாக இருக்கின்றது. மக்களது வருமான மட்டம் குறைவதால் மக்கள் சேமிப்பும் குறைவாகவே காணப்படுகின்றது. அதன் காரணமாக மூலதன வாக்கம் குறைவாகவே காணப்படுகிறது. அதனால் உற்பத்தி குறைய மக்களது வருமானமும் குறையும். இவ்விதம் செயற்படும் வறுமையின் விஷமச் சக்கரமானது' இலங்கையின் அபிவிருத்தி சார்ந்த ஒரு பிரச்சினையாக விளங்கும் மூலதனப் பற்றாக்குறைக்குக் காரணமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 5.4 நச்சு வட்டம்

மூலதனப்பற்றாக் குறை என்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உள் நாட்டுச் சேமிப்புகளையும், வெளிநாட்டுச் செலவாணியையும் கூட்டுவதற்கு முனைய வேண்டும். இதன் நிமித்தமாக பொருளாதாரத்தை பன்முகப்படுத்த வேண்டும். ஆடைத்தொழிற் சாலைகளை விருத்தி செய்தல், திறந்த பொருளாதாரத்தை அறிமுகம் செய்தல், உல்லாசப் பயணத்துறையை விருத்தி செய்தல், இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகளை வெற்றிகரமாக அமுல் நடத்த வேண்டும்.

**தொழில் நுட்பத் திறனுடையவர்கள் போதாதிருத்தல் :**

அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பண்டங்கள் சேவைகள் சார்ந்த உற்பத்தியினைக் கூட்டுவதற்காகப் பொருத்தமான தொழில் நுட்ப அறிவு அவசியமாகும். இலங்கையில் அதிகரிக்கும் சனத்தொகைக்கேற்ப பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கையில் எமது தொழில் நுட்பத்திறன் போது மானதாக இல்லை. எனவே இந்நிலைமை ஒரு பிரச்சினையாகும். உள் நாட்டு அபிவிருததிச் செயன் முறைக்குப் பங்களிப்பினை நல்கக் கூடிய பயிற்சி பெற்ற ஊழியர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். இது தொடர்பாக கல்வியானது பொறுப்பான பணியினை ஆற்ற வேண்டும். இதன் மூலம் பயிற்சி பெற்ற வர்த்தகர்கள், முகாமையாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், தொழிலா ளர்கள், பொறியிலாளர்கள், கணக்காளர்கள், வைத்தியர்கள் ஆகியோரை தோற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

**சாதகமற்ற வர்த்தக நிலுவை :**

சாதகமற்ற வர்த்தக நிலுவை காணப்படல் இலங்கை எதிர் நோக்கும் மற்றுமொருபொருளாதாரப் பிரச்சினையாகும். ஏற்றுமதிப் பொருட்களால் கிடைக்கும் வருமானத்துக்கும், இறக்குமதிப் பொருட்களால் ஏற்படும் செலவினத்துக்கும் இடையில் காணப்படும் வேறுபாடே வர்த்தக நிலுவை எனப்படும். இலங்கையில் ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செலவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துச் செல்வதினால் சாதகமற்ற வர்த்தக நிலுவை தோன்றியுள்ளது. இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும், வாழ்க்கை நலன் சார்ந்த சேவைகள் வழங்குவதற்காகவும் அவசியமான பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டுக் கடன்கள், உதவிகள் என்பவற்றை நம்பி இருக்க வேண்டிய நிலை காணப்படு கிறது. வெளி நாட்டுக் கடன்களை வட்டியோடு திருப்பிக் கொடுப்பதற்காக தேசிய வருமானத்தில் ஒரு பாரிய பகுதியினை செலவிட வேண்டியுள்ளது. இது அபிவிருத்திக்கு தடையாகும். எனவே அபிவிருத்திக்காக பெறப்படும் வெளிநாட்டு உதவிகளை நேரடியாக அபிவிருத்திப் பணிகள் மீது வினைத் திறனுடன் செலவு செய்வதன் மூலம் மேற்படி நிலைமைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

### அரசியல் அமைதியின்மை :

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அந்நாட்டின் அரசியல் சார்ந்த நிலையான தன்மை, அமைதியான சூழ் நிலை என்பன அவசியமாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பல வருடங்களாக தொடர்ந்து நிலவும் இனப்பிரச்சினையானது அபிவிருத்திக்கு பெரும் தடையாகும் உயிர்த் சேதம், சொத்துக்களுக்கு சேதம், பொதுமக்கள் வாழ்க்கைக்கு இன்னல்கள் விளைவிப்பது என்பன காரணமாக உற்பத்திமட்டமானது வீழ்ச்சி யடைந்துள்ளது. அபிவிருத்திக்காக செலவிடப்பட வேண்டிய பணத்தின் பெரும்பகுதி பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. இதன் காரணமாக அபிவிருத்தி தடைப்படுகின்றது.

இலங்கை மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நடை முறைப்படுத் தப்பட்டுள்ள சிறப்பான அபிவிருத்தித் திட்டங்கள்

குறிப்பிட்ட ஒரு நாட்டின் மக்களது உடல், உளம், சமூகம் , கலாசாரம, ஆன்மீகம், பொரு ளாதாரம் ஆகிய சகல துறைகளின் அபிவிருத்தியை ஏற்படுத்தல் வாழ்க்கை நலன்களை உயர்த்துதல் எனப்படும். பௌதீகம், ஆன்மீகம் ஆகியவற்றில் ஓர் உயர்ந்த மட்டத்தை அண்மித்தவர்களும், சமூகத்துக்கு பயன்படுவோருமான மக்களை உருவாக்குதல் மக்களின் வாழ்க்கை நலன்களை மேம்படுத்தல் எனக் கருதப்படும்.

வாழ்க்கைப் பண்புகளில் அல்லது வாழ்க்கை நலன்களில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் அளக்கக் கூடியவை, அளக்க முடியாதவை என இரு பிரிவுகளாக பிரிக்கப்படும். உணவு, வீடு, தொழில் வாய்ப்பு, வருமான மட்டம், சுகாதாரம், போசாக்கு, கல்வி வளங்களின் நுகர்வு என்பன அளக்கக் கூடிய காரணிகளாகும். கருணை, சிக்கனம், பரஸ்பர உதவி, சமத்துவம், சுற்றாடலை நயத்தல், அழகியலை மதித்தல், விழுமியங்கள் என்பன அளக்க முடியாத காரணிகளாகும்.

பல்வேறு இடர்பாடுகளுக்கிடையில் கூட எம்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களால் போசாக்கு, கல்வி, சுகாதாரம், இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்கி மக்களின் வாழக்கைத் தரத்தை உயர்த்துவது எதிர் பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு உற்பத்தி

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அந்நாட்டு மக்களின் போசாக்கானது பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். தற்போது எமது நாட்டு மக்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்துவதற்காகப் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் சில வருமாறு :


- குடியேற்றத் திட்டங்கள்
- துரித மகாவலித் திட்டம்
- ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்
- கடல்வள அபிவிருத்தி

**குடியேற்றத் திட்டங்கள்** 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டம் அமுல் நடத்தப்பட்டதிலிருந்து நாட்டுக்கேற்ற பொருளாதார, சமூகக் கொள்கைகளைத் திட்டமிடுவதற்கான வாய்ப்பு உள்நாட்டுத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் நாட்டின் உலர் வலையத்தில் குடியேற்றத் திட்டங்கள் தோற்றுவிக்கப் பட்டன. அப்போதைய விவசாய அமைச் சராக இருந்த டீ. எஸ். சேனநாயக்கா அவர்களே குடியேற்றத் திட்டங்களை நிறுவுவதில் முன்னோடியாக விளங்கினார். புராதன குளங்களைப் புனரமைத்தல், வேலை வாய்ப்புகளை வழங்குதல், உலர் வலைய வனாந்தரப் பிரதேசங்களைப் பயிர் செய்கையில் ஈடுபடுத்தல். சனத்தொகை கூடுதலாக உள்ள பிரதேசங்களில் வாழ்ந்த காணியற்ற விவசாயிகளை உலர் பிரதேசத் தில் குடியமர்த்துதல் என்பன குடியேற்ற திட்டங்களை நிறுவக் காரணங்களாக அமைந்தன. இதன் அடிப்படையில் உலர் வலையக் குளங்கள், வாய்க்கால்கள் சார்ந்த விவசாயக் குடியேற்றங்கள் பல ஆரம்பிக்கப்பட்டன. அவற்றுள் மின்னேரியா, மினிப்பே, பதவியா, ராஜாங்கணை போன்ற திட்டங்கள் பிரதானமானவையாகும். உலர் வைலயத்தில் காடுகளாக காணப்பட்ட பிரதேசங்களில் புதிய குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் நாட்டின் உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகளுக்குத் தூண்டுகோலாக அமைந்தது.

மக்களது வாழ்க்கைத் தரத்தை உலர்த்துவதற்காக உயர்வலையக் குடியேற்றங்கள் மாத்திரமின்றி வேறும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் விளைவாக 1949 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோய நதிப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமானது முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அதனைத் தொடர்ந்து வளவை நதியைச் சார்ந்து உடவளவைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பயிர்ச் செய்கைக்கு தேவையான நீரை விநியோகித்தல், மின் சக்தியை உற்பத்தி செய்தல், வெள்ளப் பெருக்கை தடுத்தல், காணியற்ற விவசாயிகளுக்கு காணிகளை வழங்கல், நன் நீர் மீன் வளர்ப்பு, வேலை வாய்ப்புகளை வழங்குதல் என்பன இத்திட்டங்களின் நோக்கங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 5.5 பிரதான குளங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லோயாத் திட்டத்தின் கீழ் 57200 கெக்டேயர் நிலத்துக்கு நீர் விநியோகமும், உடவளவைத் திட்டத்தின் கீழ் 9600 கெக்டேயர் நிலத்துக்கு நீர் விநியோகமும் செய்யப்பட்டு உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நீர்த் தேக்கங்களில் நன்னீர் மீன்கள் வளர்க்கப்பட்டமை மக்களது போசாக்குத் தரத்தை உயர்த்தப் பங்களிப்பினை நல்கியது.

மகாவலித் திட்டம் அபிவிருத்திக் திட்டங்களின் அடிப்படையில் தற்போது அமுலாகும் பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைக் காட்டும் படத்தைக் நோக்குக. இலங்கை நிலப்பரப்பில் ஒரு பாரிய பிரதேசம் அத்திட்டத்தைச் சார்ந்திருப்பதை நீங்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

* விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தி
* நீர் மின்சார உற்பத்தி
* விவசாயக் குடும்பங்களை குடியமர்த்துதல்
* கால்வாய்களின் அபிவிருத்தி
* புதிய நகர் நிர்மாணிப்பு




படம் 5.6 மகாவலி பல்நோக்குத் திட்டத்தில் நீர் விநியோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன மேற்கூறிய திட்டம் சார்ந்த தலையான நோக்கங்களாகும். இந்நோக்கங்களின் அடிப்படையில் புதிய நீர்த் தேக்கங்ள் சிலவற்றைக் நிர்மாணித்தல், ஏற்கனவே உள்ள நீர்த் தேக்கங்களுக்கு நீரை விநியோகித்தல் என்பவற்றுக்காக இத்திட்டங்கள் தீட்டப்பட்டன. இதன் பிரகாரம் பொல்கொல்லை, விக்டோரியா, கொத்மலை, மாதுறு ஓயா, ரன்தெனிக் கலை, ரன்டம்பே போன்ற நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

உணவு உற்பத்தியைக் கூட்டுதல் என்ற நோக்கில் நெல் உற்பத்தி, உலர் தானிய வகை கள், மேலதிக உணவுப் பயிர்களை பயிர் செய்தல் என்பன இடம் பெற்றது. சோயா அவரை, கௌபி, கடலை, பயறு, மிளகாய், மரக்கறி, வகைகள், நிலக்கடலை என்பன பிரதானமானவை யாகும். குளங்களிலும், நீர்த் தேக்கங்களிலும் நன்னீர் மீன்களை வளர்த்தல், திரானய- கலன் குட்டிய- தெஹி அத்த கண்டிய-கிராந்துக் கோட்டே ஆகிய இடங்களில் கால்நடைகளை வளர்த்தல் என்பன இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர வெளிநாட்டுச் சந்தைக்காக கர்கின் அஸ்பரகஸ் என்பனவும் பயிரிடப்படுகின்றன.

அரசாங்கத்தினால் இது வரை நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களின் பெறுபேறாக 1995 இல் 2810000 மெட்ரிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. குரக்கன், சோளம், பயறு, கடலை போன்ற உணவுப்பயிர்களின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. இதற்காக மானியம் வழங்கல் போன்ற ஊக்குவிப்புகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இவ் உற்பத்தி அதிகரிப்பானது போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு உதவியாக உள்ளது.

## ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தித் திட்ட முறை


பிரதானமாக தேசிய திட்ட முறைகளால் நேரடியாக பயன் அடையமுடியாத பிரதேசங்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்காகப் பின்பற்றப்பட்ட ஒரு பணி ஒழுங்காகும். 1979 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலைத் திட்டமானது மாத்தறை, அம்பாந்தோட்டை, நுவரேலியா, பதுளை ஆகிய மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டது. அந்த மாவட்டங்களுக்கு பொருத்தமான செயற்றிட்டங்களை தீட்டி, அதற்காக சர்வதேச நிறுவனங் களினதும், வெளிநாடுகளின் உதவியோடும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்தில் தென்னங்காணிக்ளைப் புனரமைத்தல், நுவரேலியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பு, கிராமப் புறங்களில் நீர் விநியோகம் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் வள அபிவிருத்தி

புராதன காலத்திலிருந்து இலங்கை மக்கள் தம் உணவில் மீன் உற்பத்திகளைச் சேர்த்துக் கொண்டனர். இதற்கான சான்றுகள் உள. பொதுவாக திடகாத்திரமான மனிதர் ஒருவர் ஒரு வருடத்தில் 21 கிலோக்கிராம் எடையுள்ள மீனை உண்ண வேண்டும் என வைத்தியர்கள் கருதுகின்றார்கள். இருப்பினும் தற்போது இலங்கையில் தனி நபரொருவரது மீன் நுகர்வு 13.2 கி. கிராம் ஆகும். சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப போதுமான அளவு மீன்கள் பிடிக்கப் படாமையால் மக்களது போசாக்கு மட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமையைத் தவிர்க்கும் நோக்கத்தோடு கடல் வளங்களைக் அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தால் விசேடமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உவர் நீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு இணையாக நன்னீர் மீன் பிடிக்கைத்தொழில்களுக்கும் அரசாங்கம் அநுசரணை வழங்கியது. 1996 ஆம் ஆண்டில் மீன் உற்பத்தி 2290000 மெட்ரிக் தொன்களாகும். 2000 ஆம் ஆண்டளவில் 341800 மெட்ரிக் தொன்கள் வரை கூட்டுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. தனிநபர் மீன் நுகர் வினை 13,2 கி. கிராமிலிருந்து 2000 ஆம் ஆண்டளவில் 17.9 கி. கிராமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டளவில் கூட திடகாத்திரமான ஒருவருக்குத் தேவையான மீனின் அளவான 21.கி. கிராமை அண்மிப்பது சாத்தியமானதாக காணப்படவில்லை.



5.7 கடல் வள அபிவிருத்தி
நீர்கொழும்பு மீன்பிடித் துறை
முகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்தொழில் அபிவிருத்தி

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கையில் கைத்தொழில் துறையானது முக்கிய இடத்தை வகிக்கின்றது.

பின்வரும்புள்ளி விபரங்களை நோக்குக.


| வருடம் | தேசிய உற்பத்தி (சதவீதத்தில்) | மொத்த ஏற்றுமதியில் கைத்தொழிலின் பங்களிப்பு (சதவீதத்தில்) | கைத்தொழில் துறை சார்ந்த ஊழியர்கள் (சத வீதத்தில்) |
|---|---|---|---|
| 1950 | 16.9% | 0.5% | 7.4% |
| 1971 | 18.2% | 1.2% | 10.0% |
| 1996 | 21.0% | 73.2% | 14.0% |


மூலம் – இலங்கை மத்திய வங்கி அறிக்கை

ஓர் ஏற்றுமதி அபிவிருத்தி ஆம் ஆண்டிற்கு பின்னர் உள்நாட்டுக் கைத்தொழில் மீது அதிகம் கவனம் செலுத்தப்பட்டது. கைத்தொழில் சார்ந்த குடியேற்றங்களை நிறுவுதல், சுதந்திர வர்த்தக ஏற்றுமதி வலையங்களை நிறுவுதல் என்பன பிரதானமானவையாகும். அண்மைக் காலத்தில் தனியார் துறையைச் சார்ந்த கைத்தொழில்கள் அரச துறையை விட விருத்தியடைந் துள்ளது. இவை தவிர 1978 ஆம் ஆண்டில் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின் கீழ் முதலீட்டுஅபிவிருத்தி வலயங் கள் நிறுவப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்று மதிக்கான உற்பத்தி வலயங்கள் என்றும், ஏற்றுமதி அபிவிருத்தி வலையங்கள் நிறுவப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்றுமதிக்கான உற்பத்தி வலயங்கள் என்றும், ஏற்றுமதி அபிவிருத்தி வலையங்கள் என்றும் அழைக்கப்படுகின்றது. முதலாம் முதலீட்டு அபிவிருத்தி வலயமானது கட்டுநாயக்காவில் நிறுவப்பட்டது. இரண்டாவது பியகமவிலும் மூன்றாவது கொக்கலவிலும் தாபிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5.8 இலங்கை மத்திய வங்கி அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏற்றுமதி அபிவிருத்தி வலயங்கள் நிறுவப்பட்டதன் நோக்கங்கள்

- வேலைவாய்ப்புகள் வழங்கல்
- வெளிநாட்டு முதலீட்டாளரிடமிருந்து மூலதனத்தைப் பெறல்
- கைத்தொழிலுக்கான தொழில் நுட்ப அறிவையும், முகாமைத்துவ அநுபவங்களையும் பெறல்.
- வெளிநாட்டுச் சந்தையைப் பெற்றுக் கொள்ளல்.
- பிரதேச அபிவிருத்தி
- சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தல்

மேற்படி நோக்கங்களை அடைவதற்காக 1996 ஆம் ஆண்டில் 148 நிறுவனங்கள் இயங்கின.) அதனால் 86000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தன. இங்கு காணப்படும் வரைபடத்தை நோக்குக. 1996-1997 வரை முதலீட்டுச் சபையினால் முதலீடு செய்த நிதியின் அளவு இதில் காணப்படுகின்றது. புடைவைகள், ஆடைகள், தோற் பொருட்கள், இரசாயனங்கள், எண்ணெய், பிளாஸ்ரிக் போன்ற கைத்தொழில்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச மட்டத்திலான கைத்தொழில் செயற்றிட்டங்கள் 1990 தசாப்தம் தொடக்கம் கைத் தொழில் பரவலாக்கத்தின் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. முதலில் கஷ்டப் பிரதேசங்களில் முதலீடு செய்வோருக்கு விசேட ஊக்குவிப்புகள் அளிக்கப்பட்டன. இதனால் பிரதேச மட்டத்தில் துரித அபிவிருத்தி ஏற்பட்டது. இதன் அடிப்படையில்

- 200 ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான வேலைத்திட்டம்.
- தொழிற் பேட்டைகளைத் தாபிப்பதற்கான வேலைத்திட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டன.

200 ஆடைத் தொழிற்சாலைகளுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் கூடத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இதன் காரணமாக கிராமப்புறங்களைச் சார்ந்த இளைஞர்களும், யுவதிகளும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டனர். 1997 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியளவில் 21 மாவட்டங்களில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்ட 164 ஆடைத் தொழிற்சாலைகளில் 142 தொழிற்சாலைகள் அதாவது 86% சதவீதமானது கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்டன. வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, பொலநறுவை போன்ற மாவட்டங்களிலும் கூட தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டமை சிறப்பான ஒரு பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பல்வேறு பாகங்களில் சிறிய அளவிலான 10 கைத்தொழில் குடியேற்றங்களைக் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கரன்தெனியா, உருவக்க, தங்கொட்டுவ, மாகும்புற, குருவிட்ட, மினுவாங்கொடை, பெலியத்த போன்ற இடங்களில் தற்போது கைத்தொழிற் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. கைத்தொழில் குடியேற்றங்கள் சார்ந்த வேலைத் திட்டங்களின் கீழ் சுமார் 100000 மக்களுக்கு வேலைவாய்ப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## குடிசைக் கைத்தொழில்களினதும், சிறிய அளவிலான கைத்தொழில்களினதும் அபிவிருத்தி

குறைந்தளவு மூலதனம், வரையறுக்கப்பட்ட கீழ்க் கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் குடிசைக்கைத்தொழில்களையும், சிறிய அளவிலான கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி இரு துறைகளிலும் உள்ள ஊழியச் சூட்சுமத்தைப் பயன்படுத்துவதால் அதிகப்படியான வேலை வாய்ப்புகள் வழங்க முடியும். இதன் அடிப்படையில் கிராமப்பிரதேசங்களில் குறைந்த செலவினால் அதிகமானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும். இதனால் கிராமப் புறத்திலிருந்து நகரப் புறங்களுக்கு ஊடுருவும் ஊழியர்கள் குறைய வாய்ப்பேற்படும். சுய தொழில் வாய்ப்புகளிலும் நம்பிக்கையும் உண்டாகும்.


மேற்படி கைத்தொழில் துறையின் அபிவிருத்தியினால் வேலைவாய்ப்புகளை தோற்று விப்பதோடு வறுமை நீங்கவும், பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி ஏற்படவும், உள் நாட்டுச் சேமிப்பு அதிகரிக்கவும் ஏதுவாகும். இதனால் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு நல்கப்படும்.

## மின்சக்தியை உற்பத்தி செய்தல்

எமது நாட்டில் சக்தித் தோற்றுவிப்புக்களான நீர் மின்சக்தி, கனிய எண்ணெய்கள், எரி வாயு, விறகு என்பன பயன்படுத்தப்படுகின்றன. எமது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கையில் பெருமளவுக்கு மின் சக்தியே பயன்படுத்தப்படுகின்றது. கைத்தொழில்கள் விரிவடைதல், சனத் தொகை அதிகரித்தல், ஆள்வீத வருமானம் அதிகரித்தல், நகரங்கள் தோன்றுதல் போக்குவரத்து வசதிகள் விருத்தியடைதல் என்பன காரணமாக மிக் சக்தியின் கேள்வியும் துரிதமாக அதிகரித் துள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கு அவசியமான மின்சக்தியின் கேள்வி நிரமபல செய்யப்பட வேண்டும். இதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை ஆராய் வோம். 1962 ஆம் ஆண்டில் எண்ணெய் கூட்டுத்தாபனமும், 1969 ஆம் ஆண்டில் மின்சார சபையும் 1975 ஆம் ஆண்டில் கொழும்பு காஸ் கொம்பனியும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்விதம் சக்தியை உற்பத்தி செய்வதற்கு பாரிய அளவில் நிதி முதலீடு செய்யப்பட்டது. தற்போது இது தொடர்பான தகவல்களைக் கவனிப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 5.9 இலங்கையின் முதலாவது நீர்
மின்கூடமான லக்ஷபான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 5.10 மின்சக்தி உற்பத்தி 1948 – 1996 நீர்மின்சக்தி விருத்தி

பின்வரும் அட்டவணையால் நீங்கள் விளங்கிக் கொள்ள முடியும்.


| | அளவு 1948 | வருடம் 1996–97 |
|---|---|---|
| நீர்மின் சக்தியின் உற்பத்தி யின் கொள்வனவு | 18மெ.வா | 1565 மெ.வா (1997) |
| மின் கூடங்களின் எண்ணிக்கை | 03 | 20 (1997) |
| சக்தி உற்பத்தியின் | 53 கி.வா மணித் | 4377 கி.வொ மணித் (1996) |
| மொத்தம் தனிநபர் நுகர்வு | 6 கி.வா மணித் | 200 கி.வொ மணித் (1996) |
| மின் நுகர்வோர் எண்ணிக்கை | 1500/10 | 1.6 மில்லியன் (1996) |

ஆதாரம் சுதந்திரத்துக்கு பின் பொருளாதாரம் 50 குறிப்பாக மகாவலி அபிவிருத்தித் திட்டம் சார்ந்த மின் கூடங்கள் மின் சக்தியின் அபிவிருத்தியில் பெறப்பட்ட தேர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்கின. இவற்றினால் உற்பத்தி செய்யப்படும் அளவானது அதிகரிக்கும் கேள்விக்குத் தகுந்த நிரம்பலை அளிக்கப் போதுமானதாக இல்லை. எனவேதான் கலனிதிஸ்ச, சப்புகஸ் கந்த ஆகிய இடங்களில் அனல் மின் கூடங்கள் தாபிக்கப்பட்டன. இங்கு இடம் பெற்றுள்ள இலங்கை மின் நிலையங்களைக் காட்டும் படத்தில் அவை அமைந்துள்ள இடங்களை இனங் காண்க.

எதிர்காலத்தில் மின்சக்திக்கான கேள்வியை நிரப்புவதில் நீர் மின் சக்தியை விட அனல் மின் சக்தியையே எதிர் பார்க்க வேண்டியேற்படும். எதிர்கால மின் நுகர்வு மீது அதிக கவனம் செலுததுவதற்கான சமிக்ஞையே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





படம் 5.11 இலங்கையில் நீர் மின்சக்தி நிலையங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

பொருளாதாரம், சமூக மேம்பாடு என்பனவற்றில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளுள் கல்வி ஒரு முக்கிய காரணியாகும். இலவசக்கல்வியின் தந்தை என வர்ணிக்கப்படும் சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலவசக்கல்வியின் முன்னோடியுமாவார். அவரால் சமர்ப்பிக்கப்பட்ட இலவசக்கல்வி கட்டளையானது 1945 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலாகியதால் இந்நாட்டுக் கல்வியில் ஒரு மாபெரும் மாற்றம் உண்டாயிற்று. இதன் பிரகாரம் பாலர் பிரிவு தொடக்கம்




படம் 5.13 பேராதெனியா பல்கலைக்கழகம் 1969

பல்கலைக்கழகம் வரையும் இலவசக்கல்வி அளித்தல் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டங்களின் விளைவாக 1994 ஆம் ஆண்டில் இந்நாட்டின் எழுத, வாசிக்கும் திறனானது 90% வீதமாக வளர்ச்சியடைந்து காணப்பட்டது. கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சில பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படம் 5.12 மலிவான வீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி நுகர்வின் போது கனிய எண்ணெய் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. மொத்த சக்தி நுகர்வில் இது 26% ஆகும். நாள்தோறும் வாகனங்களின் எண்ணிக்கை அதி கரித்துச் செல்லல், உற்பத்தி சார் அபிவிருத்திகளை மேற்கொள்வது அதிகரித்துச் செல் வதனால் அதனைப் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாலும் டீசல், பெற்றோல் ஆகியவற்றின் நுகர்வு அதிகரித்துச் செல்கிறது.

இலங்கை மக்களில் பெரும்பாலோர் உணவு சமைப்பதற்கான சக்தியாக விறகினைப் பயன்படுத்துகின்றனர். மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகச் சக்திப் பயன்பாடு அடிப்படையாக காணப்பட்ட போதும் திட்டமிடப்படாது அவற்றைப்பயன்படுத்துவதால் மனிதர் உட்பட உயிரினங்களின் நிலைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இதற்கான அடிப் படைக் காரணங்கள் மாசடைந்த நீர், மாசடைந்த வளி என்பனவாகும்.

ஒரு நாட்டு மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் ஆகக் குறைந்த வசதிகளை யேனும் கொண்ட வீடுகள் செல்வாக்கு செலுத்துகின்றன. வசதியுடைய வீடுகள் இல்லாவிடின் குறிப்பிட்ட நாட்டின் அபிவிருத்தியில் பின்னடைவு உண்டாகும். 1953 ஆம் ஆண்டு மக்கள் தொகையில் 61% பேர்கள் தமக்கென வீடுகளைக் கொண்டிருந்தனர். அத்தொகை 1994ஆம் ஆண்டில் 80% ஆக அதிகரித்தது. 1953 ஆம் ஆண்டில் அத்தொகை 5% மாக குறைந்தது. 1971 ஆம் ஆண்டில் மின்சார வசதிகளைக் கொண்ட வீடுகளின் தொகை 9% ஆகும். 1994 ஆம் ஆண்டில் மின்சார வசதியுடைய வீடுகளின் தொகை 44% ஆக உயர்ந்தது. அண்மைக் காலத் தில் இலங்கையில் வசிப்பிடங்களைப் பொறுத்த வரையில் ஓர் பலமான அபிவிருத்தி ஏற்பட் டிருப்பதை மேற்படி தகவல்கள் உணர்த்துகின்றன.


1977 ஆம் ஆண்டில் இத் துறை சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் பரவலாயிற்று. அரசும், தனியார் துறையும் அதற்கு பங்களிப்பினை வழங்கின. நாடளாவிய ரீதியில் வீட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன 1979 ஆம் ஆண்டில் தேசிய அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்ட பின்னர் 1981 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் முக்கிய அதிகரிப்பு ஏற்பட்டது. 1994 ஆம் ஆண்டளவில் நகர்ப் புறங்களில் அதிக எண்ணிக்கையான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. அத்தோடு கிராமப் புறங்களிலும் தோட்டப்புறங்களிலும் வீடுகளின் தரம் விருத்தியடைந்தது. 1995 இல் நாடளாவிய ரீதியில் புதிய வீடமைப்புச் சார்ந்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டம் சார்ந்த உப வேலைத்திட்டங்கள் 8 உண்டு. ஜன உதான என்பது அவற்றுள் ஒன்றாகும். வீடமைப்பு தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு ஏராளமான நிறுவனங்கள் உதவி வழங்குகின்றன. தேசிய வீடமைப்பு அதிகார சபை, அரச வர்த்தக வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், கூட்டுறவு கிராமிய வங்கி, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பன அவற்றுள் சிலவாகும். இலங்கை வீடமைப்பு, நிர்மாணப்பணிகள் என்பன நிமித்தம் அரசு சார்பு, அரசு சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றியும், நிர்மாணிப்பு தொடர்பான விளைவுகள் பற்றியும் எளிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 1980 ஆம் ஆண்டு தொடக்கம் பாடநூல்களை இலவசமாக விநியோகித்தல்.
* 1993 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைச் சீருடைகளை இலவசமாக வழங்கல்.
* ஆசிரியர்களின் தொழில் சார் திறன்களை மேம்படுத்துவதற்காக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும், கல்விக் கல்லூரிகளையும் நிறுவுதல்.
* புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பித்தல்.
* கல்வி சார்ந்த ஆய்வுகள், கலைத்திட்ட விருத்தி, ஆசிரியர் பயிற்சி என்பன நிமித்தம் இடை நிலைக்கல்வி நிறுவனங்களை நிறுவுதல்.

மேற்படி விடயங்களைத் தவிர மேலதிகமாக நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற விதத்தில் கணனிக் கல்வி, இலொக்ரோனிக் இயல், தொழில்நுட்ப இயல், வர்த்தகக் கல்வி, முகாமைத்துவம் சார்ந்த பாடத்துறைகள் என்பனவற்றை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தேசிய கல்விக் கொள்கைகளை வகுக்கவும் அவற்றை சட்ட மூலமாக்குவதற்காகவும் 1995 ஆம் ஆண்டில் தேசிய கல்வி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. புதிய கல்விச் சீர்திருத்தங்களை விதந்துரைக்கவும், அமுலாக்கற்றிட்டத்தைத் தயாரிக்கவும் 1996 ஆம் ஆண்டில் ஜனாதிபதி செயலாற்று அணி தாபிக்கப்பட்டது



உரு 5.14 பொதுமக்கள் சுகாதார சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம்

ஒரு நாட்டின் அபிவிருத்தி மட்டத்தைத் தீர்மானிக்கும் மற்றுமொரு காரணியாவது மக்களின் சுகாதார நிலையாகும். பௌதீக வாழ்க்கை நிலைச் சுட்டி சார்ந்த காரணிகளான பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு, சிசு மரண விகிதாசாரம் என்பனவற்றால் அந்நாட்டின் சுகாதார சேவைகளின் விருத்தியை அறியலாம். பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல், சிசு மரண வீதம் குறைவடைதல் என்பன சுகாதார சேவையின் விருத்தியைக் காட்டி நிற்கும்.

சுகாதாரம் சார்ந்த பின்வரும் பதிவுகளை ஆராய்தல்

| | |
|---|---|
| 2.4.4 ஆம் புள்ளி விபரக்குறிப்பு சுகாதாரம் சார்ந்த பிரமாணங்களின் விருத்தி<br><br>பிரமாணம் 1948 1995 மரண விகிதாசாரம் (சனத்தொகையில் 1000 பேருக்கு) 13.2.5.8<br>சிசு மரண விகிதாசாரம் (உயிரோடு பிறக்கும் 1000 பேருக்கு) 9.2 1.7<br><br>தாய்மாரின் மரண சதவீதம் (உயிரோடு பிள்ளைகளைப் பெறும் 1000 பேருக்கு) 8.3 0.2<br><br>ஆயுள் எதிர்பார்ப்பு<br><br>வருடங்கள் (அ) 42.2 (ஆ) 72.5 (அ) | 2.4 3. ஆம் புள்ளி விபரக் குறிப்பு சுகாதாரம் சார்ந்த கீழ் கட்டமைப்பு வசதிகளின் விருத்தி 1945 1996<br><br>வைத்திய சாலையில் ஒரு கட்டிலுக்கான நபர்களின் எண்ணிக்கை 382 353<br><br>ஒரு வைத்தியருக்குரிய நபர்களின் எண்ணிக்கை 7,987 1,314<br><br>ஒரு தாதிக்குரிய நபர்களின் எண்ணிக்கை 7,987 1,314<br><br>வைத்திய சாலைகளின் எண்ணிக்கை 247 434 |

மூலம் : சுகாதார அமைச்சு

(அ) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு அம்பாறை ஆகிய மாவட்டங்கள் தவிர

மூலம்:சுகாதார அமைச்சு

கடந்த காலத்தில் சுகாதார சேவைகள் சார்ந்த கருமங்களை விருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் காரணமாக சிசு மரண விகிதாசாரம் குறைதல், மரண விகிதா சாரம் குறைதல், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல், என்பன ஏற்பட்டன. நோய்த்தடுப்புக்கான சிகிச்சைகள், நோய்த்தடுப்பூசிகள், சுகாதாரப்பழக்க வழக்கங்கள், அறிவுறுத்தல்கள் என்பன மக்களது ஆயுள் அதிகரிப்புக்குக் காரணமாயிற்று. தொற்று நோய்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டமை, கண் அறுவைச் சிகிச்சைகள் மார்பு அறுவைச் சிகிச்சைகள் சிறு நீர கங்களைப் பொருத்துதல் நரம்பு அறுவைச் சிகிச்சைகள் என்பனவற்றுக்கான வசதிகளை விருத்தி செய்தல், கிராமப் பிரதேசங்களில் சுகாதார சேவைகளை விரிவு படுத்தல், உயர்த்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்பனவற்றால் சுகநலனைப் பெருக்கி மக்களின் வாழ்க்கை நலன்களை பெருக்கும் நடவடிக்கையாகும்.

உள்நாட்டு வைத்திய முறை, தென் இந்திய "சித்த" வைத்திய முறை, அரேபிய "யுனானி" வைத்திய முறை என்பன ஒருங்கிணைந்து ஆயுர்வேத வைத்திய முறை ஆக்கப்பட்டுள்ளது. ஆயுர் வேத வைத்திய முறையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள சில நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

* சுகாதார, சுதேச வைத்திய அமைச்சின் கீழ் ஆயுர்வேத திணைக்களம், மருந்துக் கூட்டுத்தாபனம் என்பவற்றை நிறுவியமை.
* ஆயுர் வேத ஆய்வு சுதேச வைத்திய முறை என்பன தொடர்பான ஒரு தேசிய பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டமை.
* 1997 ஆம் ஆண்டில் சுதேச வைத்தியக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டமை.
* கிராமிய பிரதேசங்களில் ஆயுள் வேத மருந்தகங்கள் நிறுவப்பட்டன.

வைத்திய வேலையில் உண்டான விருத்தி காரணமாகத் திடகாத்திரமும், சுகநலனும் கொண்டவர்கள் தோன்றியமையால் நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தி அடைந்தது.

## போக்குவரத்து



படம் 5.15 கொழும்புக் கோட்டை வீதியில் போக்குவரத்து

மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லவும், மக்கள் ஓர் இடத்தில் நின்று மற்றுமோர் இடத்துக்குப் பயணம் செய்யவும் விருத்தியடைந்த ஒரு பிரயாண சேவை அவசியமாகும். ஒரு நாட்டின் போக்குவரத்துச் சேவையானது விருத்தியடைந்திருப்பின் அந்நாடு அபிவிருத்தியை நோக்கித் துரிதமாக நடை போடும். கடந்த 50 ஆண்டு காலப் பகுதிக்குள் குறிப்பாக இலங்கையின் உள்வாரியான பிரயாணம் சார்ந்த போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு அபிவிருத்தியடையவில்லை. இதன் காரணமாக உண்டான சிரமங்கள் பொருளாதார அபிவிருத்திக்குத் தடையாக உள்ளன.

இலங்கையின் போக்குவரத்து அமைப்பானது பெருந் தெருக்கள் புகையிரதப்பாதைகள், ஆகாய, கடற் போக்குவரத்துகள் ஆகிய துறைகளைக் கொண்டதாகவும், அத்துறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த வாகனத் தொகுதியினைக் கொண்டதாகவும் அமையும். போக்கு வரத்துத் துறையானது வினைத்திறன் கொண்டதாயின் பொருட்களை விரைவாகக் கொண்டு செல்லவும், பிரயாணிகள் துரிதமாகப் பயணம் செய்யவும் முடியும். கடந்த 50 ஆண்டுக்காலத்தில் போக்கு வரத்து சேவை சார்ந்த விருத்தி தொடர்பான தகவல்களைப் பின்வரும் அட்டவணையால் விளங்கிக் கொள்ள முடியும்.

| | 19948 | 1996 | 1997 |
|---|---|---|---|
| பெரும் தெருக்களின் நீளம் கி.மீ. | 11000 | | 100000 |
| புகையிரதப்பாதைகளின் நீளம் கீ.மீ. | 1438 | | 1463 |
| வாகனங்களின் எண்ணிக்கை | 47210 | | |

எண்ணிக்கையால் உணர்த்தப்படும் தகவல்கள் அடிப்படையில் போக்குவரத்துறையில் போதுமான அளவு விருத்தி தென்பட்ட போதும் கேள்விக்குத் தகுந்த விருத்தி ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். வேலைவாய்ப்புகளும். சனத்தொகையும் அதிகரித்ததினால் மக்கள் பிரயாணம் செய்வதற்கான பஸ் வண்டிகளினதும், புகையிரதங்களினதும் எண்ணிக்கை போதுமானதாகாது. மூலதனப்பற்றாக்குறையே இதற்கு காரணமாகும்.

இதுவரை பதவிக்கு வந்த அரசாங்கங்கள் போக்குவரத்துத் துறையை விருத்தி செய்ய பல நடிவடிக்கைகளை மேற்கொண்டன. கொழும்பு-கட்டுநாயக்க பெருந்தெரு, கொழும்பு மாத்தறை பெருந்தெருக்களை அமைக்கும் நடவடிக்கைகள் மிக அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. புதிய வீதிகளை அமைத்தல், மாற்றீட்டுத் தெருக்களை அமைத்தல்,பிரயாணிகளுக்கான பாலங்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அதிகரிக்கும் போக்கு வரத்துச் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யத் தற்போதைய அரசாங்கம் முனைகின்றது.


புவியியல் அடிப்படையில் சாதகமான நிலையம், பிரதான சர்வ தேசக் கடல் மார்க்கங்களின் அயலில் அமைந்துள்ளமையால், இலங்கை கடற்பிரயாணம் சார்ந்த சேவைகளுக்குப் பொருத்தமான ஒரு நிலையமாகும். கொழும்புத் துறைமுகம் தெற்காசிய வலையத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறைமுகமாகும்.

போக்குவரத்துத் துறையில் விமானச் சேவையும் ஒரு பிரதான பங்கினை வகிக்கின்றது. 1932 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விமானச் சேவையானது தற்போது 20 நாடுகளோடு விமானச் சேவையினை நடைமுறைப்படுத்துகின்றது. கட்டுநாயக்கா/பண்டாரநாயக்கா விமான நிலையம் பிரதான சர்வ தேச விமான நிலையமாகும். இது தவிர உள்நாட்டு விமான நிலையங்கள் 12 காணப்படுகின்றன. பிரயாணிகளுக்கான போக்கு வரத்து மாத்திரமன்றிப் பண்டங்களைக் கொண்டு செல்வதற்கும் தற்போது விமானப் போக்கு வரத்துச் சேவை ஒரு பாரிய பணியை ஆற்றுகின்றது. விமானப் போக்குவரத்தின் விருத்தி காரணமாக உல்லாச பயணத்துறையும் ஏற்றுமதியும் விருத்தியடைந்துள்ளது. வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் விமானச் சேவையானது முக்கிய சேவையைக் ஆற்று கின்றது. விமானச் சேவை சார்ந்த ஒரு துரிதமான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் இச் சேவையை மீளமைப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பாடல்



படம் 5.16 கணனி மூலம் தொடர்பாடல் இலகு அடைதல்

உலகில் ஒரு குறிப்பிட்ட நாட்டினது சம்பவத்தை அல்லது செய்தியை உங்கள் வீட்டில் இருந்தவாறே கேட்க அல்லது நேரடியாகக் காணவேண்டுமாயின் இன்று நீங்கள் எளிதாகவே அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியும். வானொலி தொலைக்காட்சி என்பன அதற்குரிய சாதனங்களாகும். மேலும் வெளிநாடு ஒன்றில் இருக்கும் நண்பரோடு அல்லது உறவினரோடு கதைக்க வேண்டிய தேவை உங்களுக்கு ஏற்படின் அவரோடு பக்கத்தில் இருந்து உரையாடுவது போன்று நீங்கள் கதைக்க முடியும். தொலைபேசி அதற்கான சாதனமாகும். இவை அனைத்தும் தொடர்பாடலின் விருத்தியினால் நீங்கள் பெறும் வசதிகளாகும். இதன் காரணமாக நீங்கள் தற்போதைய உலகமானது ஓர் உலகக் கிராமமாக மாறியுள்ளது.

ஒரு நாட்டின் அபிவிருத்திச் செயல் முறையின் போது தொடர்பாடல் பிரதான பணியினை ஆற்றுகின்றது. அன்றாட நிகழ்ச்சிகள் தொடர்பான அனுபவங்கள் புதிய அறிவு என்பன வினைத் திறனோடு சமூகத்தை சென்றடையும். இதன் பேறாக நாட்டு மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பலமிகத் துரிதமாக நிறைவேற வழிபிறக்கும். இது நாட்டு மக்களின் உயிர்போடு தொடர்புடைய சில அம்சங்களை மேம்படுத்தப் பெரிதும் உதவும். இது நாட்டின் அபிவிருத்திச் செயல் முறையின் போது சிறந்த புரிந்துணர்வு, பங்கேற்பு என்பன கொண்ட ஒரு மனித வளத்தைத் தோற்றுவிக்கக் காரணமாகும். இலங்கையின் தொடர்பாடல் துறையில் பிரதானமானவற்றைக் காண்போம். அஞ்சல் சேவைகள், நாளிதழ்கள், சஞ்சிகைகள், திரைப்படங்கள் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, ரெலக்ஸ், பக்ஸ், செயற்கைக்கோள், இன்றநெற் ஈமெயில் என்பன அவையாகும்.

தபால் சேவையும் அதனோடு இணைந்த தந்திச் சேவையும், அண்மைக் காலத்தில் தேர்ச்சியினைப் பெற்றுள்ளன. தொலைபேசி, கம்பியில்லா தொலைபேசி, செலுலர் என்பவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. அத்துடன் இவை கிராமப்புறங்களுக்கும் விரிவடைந்துள்ளன தொழில்நுட்ப விருத்தி காரணமாக மின்தபால் (E-mail) சர்வதேச வலைப்பின்னல் (Internet) இலங்கையின் வானொலி ஒலிபரப்புச் சேவையானது 1925 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட சேவையாகும். தற்போது ஏழு உள்நாட்டுச் சேவைகள், 3 பிரதேச சேவைகள் 5 சமூக சேவைகள் என்ற அடிப்படையில் 15 உள்நாட்டுச் சேவைக்ளைக் கொண்டதாகும். அத்தோடு 7 வெளிநாட்டுச் சேவைகளையும் நடை முறைப்படுத்துகின்றது. தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையினாலும் ஒலிபரப்புச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒலிபரப்புத் துறையில் விருத்தி காணப்படுகின்றது. தனியார் துறை சார்ந்த பல ஒலிபரப்புச் சேவைகள் தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இல்கையில் தொடர்பாடல் துறையில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த முக்கியமான சம்பவமாக விளங்குவது தொலைக்காட்சியாகும். 1979 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இவை தவிர 1992 ஆம் ஆண்டில் தனியார் துறையினர்களுக்கும் தொலைக்காட்சிச் சேவைகளை நடத்துவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக அமுலாக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பற்றிய விளக்கத்தை நீங்கள் இப்போது பெற்றுள்ளீர்கள். நாட்டின் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை அமுலாக்கும் போது பல்வேறு திணைக்களங்களுக்கும். நிறுவனங்களுக்கும் மத்தியில் ஓர் இணைப்பாக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். உத்தேச நோக்கங்களை அடைவதற்கும். உச்ச விளைதிறனை பெற்றுக் கொள்ளவும் இவ் இணைப்பாக்கம் துணையாக அமையும். இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்கும் போது நிறுவனங்களுக்கும், திணைக்களங்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுவதுண்டு. அத்தகைய சில சந்தர்ப்பங்கள் வருமாறு:

கடற்கரைப்பாதுகாப்பு திணைக்களமானது கடற்கரையைப் பாதுகாப்பதனை கருத்தில் கொண்டு செயலாற்றுகின்றது. உல்லாசப்பயணத்தோடு தொடர்புடைய நிறுவனங்கள் அழகான கடற்கரைப் பிரதேசங்களில் உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்களை அதிக அளவில் நிர்மாணிக்கத் தூண்டுகின்றன. இவ்விதம் ஹோட்டல்கள் அமைக்கப்படுவதால் கடற்கரை மண்ணரிப்பு கடுமையாக உண்டாகும். இதனால் மேற்கூறிய இரண்டு வகையான நிறுவனங் களுக்குள் முரண்பாடு தோன்றுகிறது

எனவே நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களைத் தீட்டுவோர் ஒருங்கிணைந்து அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விதப்புரைகளை ஆக்க வேண்டும். அப்போதே மிகுந்த வினைத் திறன் ஏற்படும்.

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்தும். வீண் விரயத்தைத் தவிர்க்கும். வினை திறனை அதிகரிக்கும்.

அபிவிருத்தி நடவடிக்கையின் போது காலத்துக்குரிய தேவைகளின் பிரகாரம் அரச துறையும், தனியார் துறையும் இணைந்து, பங்கேற்று வேலைத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இவ் வேலைத் திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற் காகவே மேற்கொள்ளப்படுகின்றன. எனவே மக்களின் பங்களிப்பும் பெரிதும் அவசிய மானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய அபிவிருத்திச் செயல் முறைகளின் போது வளங்கள் உச்ச அளவில் பயன் படுத்தப்படுகின்றன. பௌதீக வளங்கள் துரிதமாக தேய்வுறுவதால் எதிர்கால தலை முறையினர் அவற்றைப்பயன்படுத்த முடியாத நிலை தோன்றலாம். எனவே வளங்களை இயன்ற வரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். இக்கருத்து நிலைத்த அபிவிருத்தி என்ற எண்ணக்கருவில் உள்ளடக்குகின்றது. (தகுதி நிலைபேன் மேம்பாடு) நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு. எதிர்கால மக்களின் தேவைகளுக்கும் வளங்களை பாதுகாப்பது என்பது இதன் கருத்தாகும். அதாவது வளங்கள் எப்போதும் அல்லது அதன் தொடர்ச்சியினை உறுதிப்படுத்த வேண்டும். இவ் அடிப்படை நோக்கிலேயே அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்.

மக்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் சார்ந்த வளங்களைப் மக்கள் பாதுகாக்காத ஒரு சந்தர்ப்பம் படத்தில் காட்டப்பட்டுள்ளது. நீர் விரயமாகும் ஒரு காட்சி அங்கே காட் டப்பட்டுள்ளது. அவற்றைப் பாதுகாப்பதால் நீங்கள் வளங்களைப் பாதுகாப்பதற்கான உங்கள் பங்களிப்பினை வழங்கலாம். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தின் மூலம் சிறந்த வாழ்க்கைக்கான அனுபவங்களையும். பயிற்சியையும் பெறலாம். அபிவிருத்தியடையும் ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டஙகளைத் தீட்டுவதில் இயன்றவரை உள் நாட்டு வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் திட்டமிடல் வேண்டும். அவ்வாறு அமையும் போது குறிப்பிட்ட ஒரு பிரதேச வளங்களை அப்பிரதேச மக்களின் தேவைக்கேற்ப கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அப்போதே அதனையும் தமக்கேயுரியது என கருதி மதிப்பளிப்பார்கள்.

உள்நாட்டுப் பொருட்களுக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கினை ஏற்படுத்துவதால் ஒரு நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தக் கைகொடுக்கும் மக்களை தோற்றுவிக்க இயலும்.

## 10.5 செயற்பாடுகள்

01. அபிவிருத்தி பற்றி மிகப் பொருத்தமான ஒரு வரைவிலக்கணத்தை உங்கள் வசன நடையில் எழுதுக.

02.1. அபிவிருத்தியை அளப்பதற்காகக் கையாளப்படும் நவீன அளவு கோல்கள் மூன்றின் பெயர்களை எழுதவும்.

2. மனித மேம்பாட்டுச் சுட்டியைத் தயாரிப்பதற்காக கையாளப்படும் பிரமாணங்கள் எவை? அப் பிரமாணங்களுக்கும் இந்நாட்டுப் பொருளாதாரத்துக்கும் இடையில் உள்ள தொடர்பினை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.1 உங்களது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படும் ஓர் அபிவிருத்தித் திட்டத்தை அவதானித்து, அத்திட்டத்தோடு தொடர்புடைய பௌதீக வளங்களை வினைத்திறனோடு கைக்கொள்ளும் விதத்தையும் அவதானிக்கவும். அதனை அடுத்து அது தொடர்பான ஓர் அறிக்கையைத் தயாரிக்கவும்.

2. அச் செயற்றிட்டம் அமுலாவதனால் சுற்றாடலுக்கு யாதேனும் ஓர் அச்சுறுத்தல் ஏற்படுமா என்பதை அவதானித்து அது தொடர்பான ஒரு அறிக்கையை தயாரிக்கவும்.

04. 1. வாழ்க்கைத் தரம் என்பதன் கருத்து யாது?

11. உங்கள் பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்றுசெயற்றிட்டங்களின் பெயர்களைக் குறிப்பிடவும். உங்களது வாழ்க்கைத் தரம் உயர்வதில் அச்செயற்றிட்டங்கள் எவ்விதம் செல்வாக்கினைச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது அத்தியாயம்


## தேசப்படக் கல்வி

எமது மாணவர்கள் தேசப்படத்தைப் படித்து அதிலுள்ள விடயங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெறுவதற்காக இவ்வத்தியாயத்தின் வாயிலாக அடிப்படை அறிவை அவர்கட்கு வழங்குவதே எமது குறிக்கோளாகும். இந்த அத்தியாயத்தை நன்கு கற்பதன் மூலம் உங்கள் அன்றாட நடவடிக்கைகளுக்கு தேசப்படத்தை. பயன்படுத்திக் கொள்ள முடியும். தேசப்படத்தின் அடிப்படை, தேசப்படத்தை நிர்மாணிக்கும் முறை. அங்கு காட்டப்பட்டுள்ள பலவகையான விபரங்கள் என்பவற்றைப் பிழையின்றி அறிந்து கொள்வதற்கும் அதன் மூலம் திறனை மேலோங்கச் செய்வதற்கும் ஒவ்வொரு வருக்கும் இது பயனுடையதாகும்.

### தேசப்படம்

> தரைத் தோற்றத்தில் காணப்படும் பௌதீக அம்சங்களையும் மனித பண்பாட்டு அம்சங்களையும் குறித்து வைத்துக் கொள்ளும் நுட்ப முறையே பட வரைபு ஆகும். அவ்வாறு செய்து கொள்ளப்பட்ட குறிப்பு தேசப்படம் ஆகும்

கி.மு. 2800ஆம் ஆண்டளவில் பபிலோனியாவில் வாழ்ந்த ஒருவர் தனது காணி அமைந்துள்ள இடத்தைக் காட்டுவதற்காகக் களிமண் தட்டில் இப்படத்தை வரைந்துள்ளனர். கி.பி. 150 ஆம் ஆண்டளவில் கிரேக்க நாட்டைச் சேர்ந்த தொலமியினால் வரையப்பட்ட முதலாவது உலகப்படத்தின் இலங்கையும் காட்டப்பட்டுள்ளது. அப்போதைய இலங்கை தப்ரபேன் எனக் குறிப்பிடப்பட்டது.




உரு: 6:1 தொலமியின் உருவப்படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசப் படத்தின் அவசியம்

தேசப் படம் இன்றைய மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகவிருக்கின்றது. வகுப்பறையில் கற்றல் நடவடிக்கைகளின் போதும், அன்றாட மனித வாழ்க்கையில் பல்வேறுபட்ட முக்கியமான வேலைகளின் போதும் தேசப்படம் பயன்படுகின்றது.

விமான மார்க்கம், கடற்பயணம், சுற்றுலா நடவடிக்கைகள், அரசியல் நடவடிக்கைகள், நிர்வாகம் யுத்த நடவடிக்கை, ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய அனைத்து நடவடிக்கைளுக்கு மாத்திரமன்றி வானியல் தேவைகளுக்கும் தேசப்படம் உதவி செய்கிறது.

மனிதனின் அன்றாட தேவைகளின்போது தேசப்படம் வகிக்கும் இடத்தை அதன் மூலம் உங்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஆரம்பத்தில் தேசப்படம் அமைப் பதற்கு எளிமையான வழி முறைகள் கையாளப்பட்டது. இன்று தொழல்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக இன்றைய உலகில் தேசப்படம் அமைத்தல், அவற்றின் உபயோகம், அவற்றில் அபிவிருத்தி வேலைகள் என்பன நிறைவேற்றப்படுவதை கணனி, செய்மதி ஆகிய நவின உபகர ணங்களாகும். இன்றைய உலகில் பல்வேறு பிரதேசங்களைப் பற்றி மாதிரி அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு உலகப் படம் பயன்தரக்கூடியதாக இருக்கின்றது. ஆகையால் எமது நாட்டைப் போன்று உலகிலும் பல்வேறுபட்ட விளக்கங்களை அறிந்து கொள்வதற்காக தேசப்படப் பயன்பாடு முக்கியமானதாகும்.

## தேசப் படத்தின் அடிப்படை

தேசப்படம் உருவாக்கப்படும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான அம்சம் படம் அமைக்கும் இடம், பிரதேசம், நாடு என்பன பிழையற்ற முறையில் அளவுத்திட்டத்தின்படி குறித்துக் கொள்வதாகும். தேசப் படமொன்றில் காணக்கூடிய இலட்சினங்கள் பின்வருமாறு உள்ளது.

1. அளவுத் திட்டம்
2. திசை
3. அமைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1:50000 பௌதீக உறுப்பு தேசப்படங்கள்

பல்வேறுபட்ட தேசப்படங்களுள் அத்திட்டத் தேசப்படம் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இவ்வாறான தேசப்படங்களைக் கற்பதன் மூலம் முறையாக விளங்கிக் கொள்ளக் கூடிய ஆற்றல் உண்டு. புவியின் மேற்பரபிலுள்ள புவிச்சரிதவியல் அம்சங்களைக் காட்டுவதற்காக படங்கள் வரையப்படுகின்றன. இவ்வாறான படத்தில் புவி அமைப்பு, திசைகள் புவியில் காணப்படும் மலைகள், நீர் நிலைகள் மாத்திரமன்றி மனிதனால் உருவாக்கப்பட்ட பல்வகையான கட்டிடங்கள், விவசாய நடவடிக்கைககள் என்பனவும் உள்ளடக்கப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட தேசப்படங்கள் பல்வகைத் தன்மை கொண்டனவாக உள்ளன. பல்வேறு பட்ட தேசப்படங்களுள் 1:50.000 அளவுத்திட்டத் தேசப்படம் சிறப்பு வாய்ந்ததாகும். புவியிற் காணப்படும் பல வகையான பௌதீக அமைப்புக்கள், மனித நடவடிக்கைகள் இவ்வாறான அளவுத்திட்டப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இன்று பயன்பாட்டிலுள்ள 1:50.000 என்ற அளவுத்திட்டத்திற்கு அமைய வரையப்பட்டுள்ளன தேசப்படத்திலுள்ள ஒரு சென்றி மீற்றர் புவியின் மேற்பரப்பில் அது போன்ற 50.000 பகுதிகளுக்குச் சமனாகும். அதாவது தரையில் 1 கி.மீ. படத்தில் 2 செ. மீற்றர்களால் காட்டப்படும். தேசப்படத்தில் காணப்படும் எவையேனும் இரு தானங்களுக்கிடையிலுள்ள உண்மையான தூரத்தை அறிவதற்கு இவ்வளவுத் திட்டம் நமக்குத் துணை செய்கின்றது. எனவே இங்கு படத்தில் 1 செ. மீ. நிலத்தில் 50,000 சென்றி மீற்றர்களாகும். இலங்கையில் 1:50.000 பௌதீக உறுப்புத் தேசப்படம் கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் இத்தேசப்படம் 92 துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. இதில் ஒரு பிரிவு 40 கி. மீற்றர் நீளத்தையும் 25 கிலோ மீற்றர் அகலத்தையும் கொண்ட நிலப்பகுதியை உள்ளடக்கும். இவ்வளவுத் தேசப்படத்தின் ஒரு பிரிவு 80/50 சென்றி மீற்றர் நீள அகலத்தைக் கொண்டதாக அமையும். படத்தின் ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட ஓர் எண்ணையும் பேரையும் கொண்டிருக்கும். குறிப்பிட்டதொரு தேசப்படப் பிரிவுக்கு அது உள்ளடக்கிய பிரதேசத்தை அல்லது அதிலுள்ள நகரத்தை அடிப்படையாகக் கொண்டு பெயர் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக எலகாரப் படத்தைக் காட்ட முடியும். இலங்கையின் 1:50.000 பௌதீக உறுப்புத் தேசப்படம் மத்திய அளவுத்திட்டத்தில் அமைந்த தேசப்படம் ஆகையால் அதில் பற்பல தகவல்களை குறித்துக் காட்ட முடியும். பல்வேறு குறியீடுகள், எழுத்துக்கள், நிறங்கள், சொற்கள் என்பன மூலம் இத்தகவல்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள் வதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள தேசப்படக் கல்வி 10:11 ஐப் பார்க்க).

## தேசப்படத்தில் குறித்தல்

கல்வி நடவடிக்கைகளின் போது தேசப்படத்தில் குறித்தல் மிக முக்கியமானதாக விளங்கு கிறது. புவியியல், சமூகக் கல்வி, வரலாறு ஆகிய பாடங்களிள் மாத்திரமன்றி பொருளியல், அரசியல், மற்றும் பாடங்களிலும் படத்தில் குறித்தல் இடம் பெறுகின்றது. பல நாடுகளின் செயல் திட்டங்களின் போது நிலையங்களைக் குறித்தல், அரசியல் எல்லைகளைக் குறித்தல், பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், விமானப் பாதைகள், கப்பல் பாதைகள் என்பன வற்றைக் குறிப்பதற்கும் தேசபபடங்கள் பயன்படுகின்றன. கல்வி நடவடிக்கைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமன்றி ஒவ்வொரு நாட்டின் அன்றாட மனித வாழக்கைக்கும் தேசப்படங்கள் முக்கியமானவை. உல்லாசப் பயணக் கைத்தொழில், வீதிப் போக்குவரத்துச் சேவை, நாடுகளுக்கிடையிலான எல்லைகளைக் காட்டுதல், அபிவிருத்தித் திட்டமிடல் போன்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேசப்படங்கள் பயன்படுகின்றன.

வகுப்பறையில் கற்றலின் போது தேசப்படத்தில் பிழையின்றிக் குறிப்பதற்காக கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பலவுள்ளன. அச்சடிக்கப்பட்ட படங்களை பெற்றுக் கொள்ள முடியாத வேளையில் படமொன்றைப் பிரதி செய்து கொள்ளும் திறன் எம்மிடம் இருத்தல் வேண்டும். பின்வரும் வழி முறைகளைப் பின்பற்றவதன் மூலம் பிழையற்ற பட மொன்றைப் பிரதி செய்து கொள்ள முடியும்.

### 1. தேவையானவை

1. பிரதி செய்வதற்கு தேவையான வெண்ணிற தூய்மையான தாள்
2. பிரதிகளின் தொகைக்கேற்ப தாள்கள்
3. கூராக்கப்பட்டுள்ள பென்சில்
4. அழி இறப்பர்
5. பிரதிகளை இணைக்கத் தேவையான குண்டூசிகள்
6. கறுப்பு மை கொண்ட குமிழ் முனைப் பேனை
7. அடி மட்டம்

### 11. அமைக்கும் முறை

* தேவைப்பட்ட தேசப்படத்தை வரைவதற்கு படத்தின் மேல் ரிசு தாளை வைத்து நான்கு பக்கங்களையும் கெட்டியாகப் பிடிக்கும் வகையில் குண்டு ஊசியால் இணைக்குக.
* ஒரு மேசையின் மேல் வைத்து தேவைப்பட்ட ரேகைகளின் மீது பென்சிலால் வரைக.
* இணைக்கப்பட்ட குண்டூசிகளை அகற்றி ரிசுத்தாளை வேறாக எடுக்கவும்.
* வரைதலின் பொருட்டு கொண்டு வந்த தாளின் மேல் ரிசுத் தாளை வைக்குக. அவ்விரண்டு தாள்களையும் நெகிழாது தாள் கிளிப்புகளால் இணைக்குக.
* ஓரளவு இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ள ரிசுத் தாளின் மேல் பென்சிலால் வரைக. பின் பேப்பர் கிளிப்புகளால் அகற்றுங்கள்.
* கடதாசியின் மேல் பேப்பர் கிளிப்புகளை அகற்றுங்கள்
* கடதாசியின் மேல் பதியப்பட்டுள்ள ரேகைகளை கறுப்பு நிற மைகொண்ட குமிழ் முனைப் பேனாவால் வரைக.

நீங்கள் தயாரித்த படத்தில் குறிக்க வேண்டுமாயின் அவ்விடங்களில் ஒரு புள்ளி இடுக.

நிறம் தீட்டக் கூடிய படமொன்றாயின் வர்ணப் பென்சில்களால் மிகவும் கவனமாக நிறந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுக. நிறந் திட்டுவதற்கு நிறப் பென்சிகள் மிகவும் பொருத்தமானதாகும். நன்கு கூராக்கப்பட்ட பென்சிலால் நிறந் தீட்டுதல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட நிறங்களாலே நிறம் தீட்டும் போது குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைத் தாண்டாதிருத்தல் வேண்டும். ஒரேயமைப்பில் நிறம் பரந்து காணக் கூடியவாறு நிறந்தீட்டுக. படத்தின் எல்லைக் கோடுகளை முதலில் பென்சிலால் குறித்துக் கொள்க. பின்பு அதன் மேல் கறுப்பு நிற மையால் கோடிடுவதன் மூலம் பூரணமாக்குக.

பின்வரும் படத்தைப் பிரதி செய்து நிறந்த தீட்டுக. படத்தை வரைவதற்கு முன் அளவுத் திட்டத்தை கவனத்திற் கொள்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | பிறேசில் | - | மஞ்சள் |
| 2. | பிரான்ஸ் கயானா | - | பச்சை |
| 3. | சூரினாம் | - | சிவப்பு |
| 4. | கயானா | - | இளஞ்சிவப்பு |
| 5. | வெனிசுலேலா | - | பச்சை |
| 6. | கொலம்பியா | - | இளஞ்சிவப்பு |
| 7. | ஈக்குவடோர் | - | பச்சை |
| 8. | பேரு | - | கபில |
| 9. | பொலிவியா | - | பச்சை |
| 10. | பராகுவே | - | கபில |
| 11. | ஆர்ஜென்ரினா | - | இளஞ்சிவப்பு |
| 12. | சிலி | - | மஞ்சள் |
| 13. | உருகுவே | - | பச்சை |
| 14. | போக்லாந்து தீவு | - | இளஞ்சிவப்பு |

## தேசப்படங்களைக் கையாளுதல்

கல்வி நடவடிக்கைகளின் போதும் அன்றாட வாழ்க்கையின் போதும் தேசப்படங்களைக் கையாள்வதின் ஊடாகத் தேவையான செயல்களை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. நீண்ட விளக்கம் செய்ய வேண்டிய ஒன்றை ஒரு படத்தின் மூலம் இலகுவாகவும் தெளிவாகவும் காட்ட முடிகிறது. உதாரணமாக எமது வீட்டுக்குச் சமூகமளிக்கும் ஒருவருக்கு உரிய பாதையைத் திருத்தமாக வரைந்து காட்டுவதால் தேவையான விபரங்களை இலகுவாகவே காட்ட முடியும். அவ்வாறான தேசப்படமொன்றைத் திருத்தமாக வரைந்து காட்ட வேண்டும். அத்துடன் அதனைச் சரியாக விளங்கிக் கொள்வதும் முக்கியமாகும். தேசப் படத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளும் திறன் "தேசப்படங்களை வாசித்தல்" எனப்படுகிறது. தேசப்படப்படப் புத்தமொன்றை வாசிப்பதற்காக அதிலுள்ள குறியீடுகள்/வர்ணங்கள், அகலாங்கு, நெட்டாங்குகளின் அமைவு என்பன பற்றி அறிவும் இருக்க வேண்டும். தேசப்படமொன்றில் காட்டப்படுகின்ற இடத்தையும் பிரதேசத்தையும், யாதேனுமொன்றின் வியாபகமொன்றை அல்லது பயணப் பாதையொன்றை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் போது தேசப்படப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகத்தின் இறுதியிற் காட்டப்பட்டுள்ள சுட்டியை பயன்படுத்த வேண்டியுள்ளது. சிங்களம் தமிழ் ஆங்கிலம் அல்லது வேறு மொழியொன்றின் மூலமாகவேனும் அகர வரிசை ஒழுங்கில் அதிலுள்ள அனைத்து இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சுட்டியில் உள்ள சொற்களுக்கு எதிரில் ஓர் இலக்கம் காணப்படுகின்றது. அது உரிய தேசப்படத்தின் பக்கத்தின் இலக்கமாகும். சொல்லின் பிறகு அகலாங்கு, நெட்டாங்குகளின் அமைவே காட்டப்பட்டுள்ளன. அதன்படி சுட்டியூடாக தேசப்படப் பக்கமொன்றையும் இட அமைவினையும் அகலாங்கு, நெட்டாங்கு எல்லைகளையும் தெரிவு செய்து கொள்ள முடிகிறது. ஒரு தேசப்படத்தின் எதிர் பாரா அமைவினைக் காட்டும் போது இவ்வகலாங்கு, நெட்டாங்கு அமைவு பயன்படுத்தப்படுகிறது. அநேகமான தேசப்படப் புத்தகங்களில் கிடையாகவும் நிலைக் குத்தாகவும் (கருநீல நிறத்தைப் பயன்படுத்தி) மெல்லிய கோடுகள் குறிக்கப்பட்டுள்ளன. வரையப்பட்டுள்ள பகுதியின அமைவினை திருத்தமாகத் காட்டுவதற்கு இக்கோடுகள் பயன்படுத்தப்படுகிறன்றன. இவை மாதிரிக் கோளத்தில் குறிக்கப்பட்டுள்ள அகலாங்கு, நெட்டாங்கு கோடுகளாகும். கிடையாகவுள்ள அகலாங்குக் கோடுகள் எபபொழுதும் பெரிய தோர் வட்டமாக இருக்கும். அகலாங்கு நெட்டாங்குகளைப் பயன்படுத்துவதால் தேசப்படமொன்றில் குறிப்பிட்ட இடத்தின் அமைவினை காட்ட முடியும்.

தேசப்படத்தில் நிலைய அமைப்பை காட்டக் கூடியதாக இருக்கும். அதற்குத் தொடர்பான வடக்குத், தெற்கு கிழக்கு மேற்கு ஆகிய திசைகளதும் கலைகளின் மூலமாக காட்டப் பட்டுள்ளன. இங்கு காட்டப்பட்டு இரேகை அமைப்பை இலங்கையில் நிலைய அமைப்பால் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அகலக் கோடு, நெடுங்கோடு அமைப்பினை பரீட்சித்து இலங்கையின் நிலைய அமைப்பை விளங்கிக் கொள்வதற்கு முயல்க. அதன்படி இலங்கையில் நிலைய அமைப்பை உரு 6.2 பிழையின்றிக் காட்டப்பட்டுள்ளது.




உரு 6.2 இலங்கையின் அகல நெடுங்கோட்டு நிலையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படத்தில் ஓர் இடத்தைக் காட்டுவதற்கு அவ்விடத்தில் கறுப்பு நிறப்புள்ளியிட்டு அதன் பக்கதில் அவ்விடத்தின் பெயரை எழுதுதல் வேண்டும். ஒரு பிரதேசத்தை அல்லது ஒரு வலயத்தைக் காட்டுவதாயின் பொருத்தமான நிறத்தை அல்லது வேறு குறியீட்டை குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் முழுமையாக இடுவதன் மூலம் அவ்வலயத்தைக் குறித்துக் காட்ட முடியும். பிரதேசஎல்லை தெளிவானதாக காட்டப்படல் வேண்டும்.

இலங்கையின் சனத்தொகை அடர்த்தியும் பிரதான நகரங்களது (1981 -ஆம் ஆண்டு) பின்வரும் படத்தில் காட்டப்பட்டுள்ளது. சனத்தொகைப் பரவலின் வித்தியாசத்தை நிறங்களின் மூலம் காட்டப்பட்டுள்ளது. நிறங்கள் குறித்து நிற்கும் விளக்கம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## படக் குறிப்பு





உரு 6.3 இலங்கை சன அடர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படப் பயிற்சியின் போது உலகின் கால நிலை வலயங்கள், வனவலயங்கள், கைத் தொழில், விவசாய வலயங்கள், அபிவிருத்தி வலயங்கள் போன்றவியாபகங்களையும் குறிப்பது அவசியமாகும். அவ்வாறான வேளைகளில் உரிய வகையில் வலயத்துக்குரிய பிரதேசத்தைத் தெளிவாக எல்லைக் கோட்டினால் குறித்து உலகின் ஏனைய பிரதேசங்களிலிருந்து உரிய வலயத்தைத் தெளிவாகவேறுபடுத்தி இனங்காண்பதற்கு முடியுமான வகையில் குறிக்க வேண்டும். முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் உசிதமான ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்ணங் களை அதற்காகப் பயன்படுத்த வேண்டும். வர்ணம் இல்லாத விடத்து அந்தந்த வலயங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்குப் பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்த முடியும்.


## பின்வரும் இரு தேசப்படங்களையும் ஒப்பிட்டு அவதானிக்க.




உரு. 6.4 அ. தென் அமெரிக்க அரசியல் பிரிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ—ரு. 6.4 ஆ. அபிவிருத்தியடைந்த வலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வலய வியாபகம் காட்டுகின்ற தேசப்படங்களில் தரையுயர்ச்சி வேறுபாடுகளின் வலயங்கள், கால நிலை வலயங்கள், வனவலயங்கள், கனியப்பரம்பல், கைத்தொழில் வலயங்கள், கலாசார வலயங்கள், அபிவிருத்தியும் அதனுடன் தொடர்புடைய பல்வகை பரம்பல்கள் என்பன காணப்படுகின்றன. அவ்வாறான பல வகையான தேசப்படங்கள் பல கீழே காட்டப்பட்டுள்ளன.




உரு. 6.6 ஐரோப்பா - அரசியல் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்படங்களில் வரையும் போதும். குறிக்கும் போதும் அவை மிகக் கவனமாகவும். தெளிவாகவும் பாவிக்கப்படல் வேண்டும். படத்தினுள் எழுத்துக்கள். குறியீடுகள். குறிப்புகள் என்பன தெளிவாக இருத்தல் வேண்டும். இவ்வாறு காட்டுவதற்கு பொருத்தமான பென்சில். பேனா போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும். பாடசாலை மட்டத்தில் நடைபெறும் பரீட்சைகளிலும். தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சைகளிலும் மாணவர்கள் அதிகமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேசப்படங்களை வரையும் போதும். அவற்றை முறையாகச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யும் போது சிறந்த ஒரு படத்தை அமைக்க முடியும். விடையொன்றை தெளிவுபடுத்துவதற்கு விளக்கத்தைக் எழுதிக்காட்டுவதிலும் பார்க்க படவரைதல் மூலம் அக்காரியத்தை சிறப்பாகவும். திருப்தியாகவும். ஒழுங்காகவும் செய்து முடிக்கலாம். புவியியல். அரசியல். சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களைக் கற்பதன் மூலம் உலகின் பல்வறு வலயங்கள் பற்றி பல விடயங்களில் விளக்கத்தைக் பெற்றுக் கொள்ளலாம். பூரணமான. முழுமையான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உலகப் படப்பயிற்சி பலவற்றைக் செய்து முடித்தல் வேண்டும். எமது சகல நடவடிக்கைகளுக்கும் தேசப்படக் கல்வி பயனுடையாகும். செய்தித் தாள்களிலும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் ஏதாவது ஒரு நிகழ்வுக்கு விளக்கத்தை முன் வைக்கும் போது படத்தின் துணையுடன் விளக்கமளித்தால். அது அர்த்தமுள்ளதாகவும். மனதில் நன்கு பதிவதாகவும் அமையும். எனவே இன்றைய மனித வாழ்வில் அத்தியாவசிய அங்கமாக தேசப்படங்கள் விளங்குகின்றன. தேசப்படக் கல்வியின் மீது விசேட கவனம் செலுத்துவதுதன் பயனாக நீங்கள் பயனடைய முடியும்.

## மாணவர் செயற்பாடுகள்

### பின்வருனவற்றைக் உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக

| பிரதான நகரங்கள் | கடல்கள் | வலயங்கள் |
|---|---|---|
| 1. டோக்கியோ | மத்தியதரைக் கடல் | சஹெறல் நாடுகள் |
| 2. மெக்சிக்கோ | கஸ்பியன் கடல் | நிக்ஸ் நாடுகள் |
| 3. மனிலா | ஏரல் கடல் | ஜீ 7 நாடுகள் |
| 4. இலண்டன் | கருங்கடல் | ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் |
| 5. நியூயோர்க் | பால்ரிக் கடல் | ஆசியான் நாடுகள் |
| 6. புது டெல்கி | செங்கடல் | சார்க் நாடுகள் |
| 7. ஈராக் | அரேபிக் கடல் | ஒபெக் நாடுகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நதி

1. அமேசன்
2. கொங்கோ
3. மிசுசிப்பி
4. நைல்
5. குவாங்கோ
6. யாங்கிசி கியாங்
7. சிக்கியாங்
8. சிந்து நதி
9. ஆமூர்
10. ஒபி
11. லினா
12. கொங்கோ
13. மீக்கொங்
14. ஐராவதி

### நாடுகள் தீவுகளும்

மீயான்மார்
மாலைத்தீவு
சிம்பாவே
சீசெல்ஸ்தீவு
ஜப்பான் தீவுகள்
கிழக்கிந்தியத் தீவுகள்
தஸ்மேனியா
நியூஸிலாந்து
மடகாஸ்கர்
சுயெஸ் கால்வாய்
பனாமாக் கால்வாய்
கீல் கால்வாய்

### விமான, கப்பற் பாதைகள்

கொழும்பில் இருந்து லோஸ்
ஏன்சல்ஸ் வரையுள்ள குறுகிய
விமான மார்க்கம்
(நான்கு விமான நிலையங்களுடன்)

கொழும்பில் இருந்து இலண்டன்
வரை விமானத் தரிப்பிடம்
(04) நான்குடன் விமானப் பாதை.

சிட்னியில் இருந்து கொழும்பு
மார்க்கமாக இலண்டன் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர்:......................................................................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| *2000* | ........................ | .......... | ........................ |
| *2001* | ........................ | .......... | ........................ |
| *2002* | ........................ | .......... | ........................ |
| *2003* | ........................ | .......... | ........................ |
| *2004* | ........................ | .......... | ........................ |
| *2005* | ........................ | .......... | ........................ |

සමාජ අධ්‍යයනය හා ඉතිහාසය 10 ශ්‍රේණිය දෙමළ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org